# திவ்ய ரோஜா தோட்டம்

## 1

*'பூக்களில் ரோஜா பல விதங்களில் தனித்தன்மை. கொண்டது பருவச் சூழல் இதற்கு மிக முக்கியம். இதன் இதழ்கள் மிக மிருதுவானவை... இதழ்களைத் தேனில் ஊற வைத்துச் சாப்பிட்டு வந்தால் ரத்தம் சுத்தமாகி முகத்தில் ஒளி கூடும். அந்த நாளில் ஜமீன்தார்கள் மற்றும் மொகலாய அரசர்கள் ரோஜாவை ஒரு அதிர்ஷ்டமான மலராகப் பார்த்தார்கள்.*

*ஒரு ஆச்சரியம் என்னவென்றால், இது இந்திய மண்ணில் சங்ககாலத்தில் இல்லா ஒரு மலர்! மிளகாய், வெங்காயம் போல மேல்திசை நாடுகளில் இருந்து வந்த ஒரு மலர்ச் செடியும் கூட. இந்திய மண்ணின் மகத்தான மலர் தாமரை தான்!"*

**தோ**ட்டத்துக்கு கிளம்பிக் கொண்டிருந்தான் கதிரவன். முன்பெல்லாம் அவன் பண்ணைத் தோட்டத்துக்கு கிளம்பு கிறான் என்றால் கைலி ஒன்றை கட்டிக்கொண்டு ஒரு டி-ஷர்ட்டையும் போட்டுக்கொண்டு தொப்பி ஒன்றையும் அணிந்து கொள்வான்.

டிராக்டரை கிளப்பிக்கொண்டு அவன் போகும்விதமே அலாதியாக இருக்கும். இப்பொழுது கதிவரவன் மிக மாறி விட்டான். லுங்கிக்கு பதிலாக பெர்முடாஸ் டவுசர், இறுக்க மான டி- ஷர்ட், கூலிங் கிலாஸ் என்று அவனிடம் மாற் றங்கள். தொப்பிக்குப் பதிலாக அவன் ஒரு கர்சீப்பைக் கட்டிக் கொள்வது கூட ஒரு விதத்தில் அழகாகத்தான் இருந்தது.

சோறு போடும் நிலத்தில் கால் வைக்கும்போது செருப்பு இருக்கக்கூடாது என்று ஒரு கொள்கை வைத்திருந்தான். அதில் மட்டும் மாற்றமில்லை. டிராக்டரில் ஏறி ஜிகுஜிகு வென்று கிளம்பிவிட்டான். எதிரில் பால்பானையுடன் வந்த படி இருந்த செவ்வந்தி நெல்லுக் குத்தவரும் பெருமாயி, அப்பா பாண்டியராசத் தேவருக்கு சரக்கு வாங்கிக்கொண்டு அதை மார்புத் துண்டால் மறைத்தபடி வரும் வேலைக்காரன் ராமசாமி என்று ஒவ்வொருவரும் கதிரவன் வீட்டை விட்டு அவன் பண்ணைக்குப் போகும் அழகை ஒரு பார்வை பார்த்து கொஞ்சம் போல கண்படவும் செய்தார்கள்.

இந்தக் கண்ணடி, பெருமூச்சு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லாத வாலிபன் தான் கதிரவன். எனவே யாரைப் பற்றியும் அவன் கவலைப்படவில்லை.

முதல்நாள் முன்னிரவில் நல்லூர் முழுக்க ஒரு இரண்டு மணிநேரத்துக்கு மழை பெய்திருந்தது. காற்றில்லாத திட்ப மான திடமழை. 'சொய்ங்' என்கிற அதன் சப்தம் கதிரவன் காதிலேயே ஒலித்தபடி இருந்தது. அந்த மழைக்கு நிச்சயம் கண்மாயில் இடுப்பளவுக்கு நீர்மட்டம் எகிறியிருக்க வேண்டும் என்று கணித்தவன் டிராக்டரையும் கண்மாய் நோக்கித்தான் விட்டான்.

வழி முழுக்க மண்சாலை பள்ளங்களில் செங்காவி நீர். அதில் தவளைக் குடும்பங்கள்! நொணநொண என்று அவை அப்படி என்னத்தை தான் பேசுமோ?

கதிரவனின் டிராக்டர் சக்கரம் பள்ளத்து தண்ணீரில் இறங்கி எழுந்த வேகத்தில் எகிறிக்குதித்து ஓடி உயிர் தப்பவும் அவை முயன்றன.

அந்த காலை வேளை ஜிலுஜிலுவென்று இருந்தது.

அக்ரியில் எம்.எஸ்.ஸி., வரை படித்திருக்கிறான். கதிர வன் நல்லூரிலேயே விவசாயம் செய்வதற்காக கல்லூரிக்குப் போய் படித்த ஒரே நபர் அவர்தான்.



“தேவருக்கு இப்படி ஒரு புள்ள... வக்கீலுக்காச்சும் டாக்டருக்காச்சும் படிக்கலாமுல்ல? விவசாயத்துக்குப் போய் ஒரு படிப்பு... அதுல போய் நேரத்த வீணடிச்சீட்டிங்களே தம்பி. ஓங்கி ஒரு குரல் கொடுத்தா நூறுபேர் ஓடிவந்து உங்க பண்ணக்காட்டு முன்னால நிப்போம். உங்களுக்கு எதுக்கு இந்த மம்புட்டி பிடிக்கற ஜோலி.” என்று பலர் கதிரவனைக் கேட்டு விட்டனர். அதற்கெல்லாம் அவனிடம் சிரிப்புத்தான் பதில்.

“அப்பா பாண்டியராசத் தேவர் கூட அவனிடம் கேட்டார்.

“கதிரு... விவசாயத்துக்குன்னு படிக்க என்ன இருக்கு... எந்த உரத்தை எவ்வளவு போடணும்னு படம்போட்டு காட்டுவாங்க. இது ஒரு படிப்பா? நம்ம கூலிக்காரங்களுக்கு தெரியாதா?”

“இல்லப்பா... நீங்க அக்ரிகல்ச்சர் பத்தி சரியா தெரியாம பேசறீங்க. படிப்புலையே பெரிய படிப்பு இன்னிக்கு இது தாம்பா. நம்ம நாட்டுல மட்டும் இந்த படிப்பும் இதுக்கான காலேஜிங்களும் இல்லாம போயிருந்தா சரிபாதி பேருக்கு சோறே கிடைக்காதுப்பா. ஏன்னா விஞ்ஞான உதவி இல்லாம, ஆராய்ச்ச அறிவு இல்லாம செய்யற வேளாண்மை நம்ம நாட்டு மக்கள்ல பாதிபேருக்கு கூட காணாது. புதுசு புதுசா நெல்வகை, விதம் விதமான விவசாய முறைன்னு அறிமுகப்படுத்தியனதாலதான் இன்னிக்கு அரசாங்கம் கைல அடுத்த வருஷத்துக்கும் நெல்லு ஸ்டாக் இருக்குது.

இங்க நம்ம பண்ணைலையும் பாதி இடத்துக்கு மேல பாழாதான் கிடக்கு. மொத்த நிலத்தையும் சீருதிருத்தி, மண் சத்து எப்படி இருக்குன்னு பார்த்து, அதுக்கு ஏத்தமாதிரி பயிர் பண்ணினா, நம்ம பண்ணை எங்கேயோ போயி டும்ப்பா...”

“அட நீ ஒண்ணு... நம்ம பண்ணைல மூணுபோகம்தான் விளையட்டுமே... என்ன பெருசா வந்துடப் போகுது. பல

தலமுறையா நம்ம குடும்பம், விவசாயக் குடும்பம்தான். என்னத்த கண்டுட்டோம்.

அதே சீனிவேல் மாதிரி என் சினேகிதனுங்கள பார்... ஒருத்தன் பஸ் வாங்கி விட்டான்... காசு கொட்டுது. இன்னொருத்தன் நிலம் வாங்கி வீடு கட்டி விக்கறான்... அவனும் காசை அள்ளறான்.

‘இப்படி பாண்டியராசத்தேவர் நடப்பு நிலையைக் கோடு போட்டுக் காட்டி பெருமூச்சுவிட்டவர்தான்.

“இல்லப்பா... நீங்க தப்பா சொல்றீங்க. அந்த தொழில்ல நிறைய வளைஞ்சு கொடுத்துப் போகணும். சில நேரத்துல மனசாட்சி இல்லாம நடந்துக்கவும் வேண்டியிருக்குது. அடுத்தவங்க தயவுக்காக நிறைய வளைஞ்சு கொடுத்து கை கட்டி நின்னு லட்ச லட்சமா சம்பாதிக்கறதுக்கு மண்ணை நம்பினா அது அள்ளித்தரும்பா...”

கதிரவன் ஒரு ஹீரோ கணக்காக எழுதிக் கொடுத்த டயலாக்கைப் பேசுவதுபோல பேசினான். பாண்டியராசத் தேவர் ஆச்சரியமாகப் பார்த்தார். இந்தக் காலத்து பிள்ளைகள் வேகமாக முன்னுக்கு வர என்ன வழி என்றுதான் பார்க்கிறார்கள். சாலையில் நடக்கும் போது கூட, குறுக்குப் பாதையில் குறுக்கில் நடந்து நடையைக் குறைத்துக் கொள்ளுமளவு சோம்பேறிகளாக வேறு இருக்கிறார்கள். நூறு அடி தூரத்துக்குக் கூட மோட்டார் பைக் தேவைப்படுகிறது. பிறந்தது எந்த ஊராக இருந்தாலும் படிப்பதற்கும் வேலை பார்க்கவும் பட்டணத்துக்கும் ஃபாரீனுக்கும் போக துடிக்கிற வர்களாக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நடுவில் கதிரவன் மட்டும் எப்படி இப்படி வித்யாசமாக இருக்கிறான் என்பது தேவருக்கே புரியாத புதிர்.

கதிரவனின் டிராக்டரும் ‘டுர்ர்’ என்று சீரான வேகத்தில் சென்றபடியே இருந்தது. வழி நெடுக முதல் நாள் மழைக்கு தாவரங்களிடம் நன்றாகவே பச்சை பிடித்திருந்தது. என்னதான்



மோட்டார் இறைத்து தண்ணீர் பாய்ச்சினாலும், அது ஓங்கிப் பெய்யும் ஒரு மழைக்கு ஈடாகாது.

சாலையோரத்து புதர்களிலெல்லாம் கூட ஒருவித மதர்ப்பு. பார்க்க சந்தோஷமாக இருந்து. மாதத்துக்கு இப்படி ஒரு நாலு மழை பெய்தால் போதும் ஊரில் எல்லோரும் யாரு டைய தயவும் இன்றி செழிப்பாக இருப்பார்கள்.

ஆனால் செய்தால்தானே?

ஆசையும் யோசனையுமாக டிராக்டரில் உருண்டு கொண் டிருந்தவன் அப்படியே கண்மாய்க்கரை வந்துவிட, அதன் மேட்டுக்கரை சாலைமேல் ஏறினான். ஆடுகள் சில மேய்ந்த படி இருந்தன. டிராக்டர் வரவும் இணை பிரிந்து சரிவுகளில் இறங்கிச் சிதறின.

கண்மாயிலும் செங்குழம்பாய் புதிய மழை நீர்!

அவன் எதிர்பார்த்தது போலவே இடுப்பு மட்டத்துக்கு மேலேயே... கண்மாய் தண்ணீருக்குள் விடலைப் பசங்களும் குதித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். கண்மாயை ஒட்டி ஒரு வாகைமரம் தழைத்திருந்தது. அதன் கிளை மேல் நின்று கொண்டு அம்புவிட்ட மாதிரி பாய்ந்து கொண்டிருந்தான் ஒருவன்.

இந்த மாதிரி காட்சிகள் ஜாக்கிசான் படத்து சண்டைக் காட்சிகளைவிட சுவாரஸ்யமானவை. டிராக்டரை நிறுத்தி ரசித்துப் பார்த்த கதிரவனைப் பார்த்து, ‘கதிர் மாமோய்...’ என்று அவர்களும் குரல்கொடுத்தபடியே கையை ஆட்டினார்கள்.

“பார்த்துக் குளிங்கடா, சேத்துக்குழியில சிக்கிடாதீங்க...” என்றபடியே டிராக்டரைக் கிளப்பினான். டிராக்டரிடம் திரும்பவும் ஓட்டம்... கண்மாய்க்கரை சாலை ஒரு டிராக்டர் ஓடும் அளவுக்குத் தான் அகலமானது. யாராவது எதிரில் வந்தால், திண்டாட்டம்தான். முப்பது மைல் தொலைவில்

இருக்கிறது மதுரைநகரம். குறுக்காக வேகமாகப் போய்வர கண்மாய்க்கரை பாதைதான் அவ்வளவு பேருக்கும் தோது. ஊருக்குள் செல்லும் பாதையில் போனால் மூன்று கிலோ மீட்டர் வரை சுற்றிச் செல்ல வேண்டும். அதனால் யாருமே அந்த ஊர்ப்பாதையைப் பயன்படுத்துவதே இல்லை. இதில் கண்மாய் பாதை ஓரம் என்பது எல்லா ஊர்களிலுமே எழுதப் படாத கக்கூஸாக ஆகிவிட்டது கொடுமை வேறு...

கதிரவனின் டிராக்டர் வரும் சப்தம் கேட்டு அங்கங்கே சாலை ஓரமாக பலர் அப்படியப்படியே எழுந்து நின்றனர். அருகில் அவர்கள் கொண்டு வந்திருந்த பித்தளை செம்புகள்.

கதிரவன் தலையில் அடித்துக் கொண்டான்.

சிறிது தூரம் தான் போயிருப்பான்.

எதிரில் ஒரு இளம்பெண்! வெள்ளைச் சேலை ரவிக்கை என்று மாறுபட்ட உடலமைப்பு. ஓர வகிடு எடுத்து தலையை வாரி இருந்தாள். தோளில் ஒரு தோல்பை. கதிரவனை டிராக்டருடன் பார்த்தவள், சாலை ஓரத்து அந்தி மந்தாரைப் புதரை ஒட்டி ஒதுங்கி நின்றாள். தலையையும் சற்று தழைத்துக் கொண்டாள். கதிரவனிடம் ஓரே ஆச்சரியம். அவள் ஊருக்கு புதியவள் என்பது அவனுக்கு ஒரு பார்வையில் தெரிந்துவிட்டது. அவளைப் பார்த்தபடியே டிராக்டரைச் செலுத்தினான். வெள்ளைப் புடவையிலும் ரவிக்கையிலும் இருந்ததால் ஒருவேளை விதவையாக இருப்பாளோ என்று எண்ணியவன், உடனேயே மாற்றிக் கொண்டான். இன்று எந்த இளம் விதவை வெள்ளைச் சேலை கட்டுகிறாள்?

அனேகமாக எதாவது ஒரு இயக்கத்தைச் சேர்ந்த பெண்ணாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டவன், திரும்பித் திரும்பி பார்த்தபடியே டிராக்டரைச் செலுத்தினான்.

கண்மாய்க்கரை அரை வட்டமாக வளைந்து திரும்பும் இடம் வந்து பண்ணைக் காட்டு சாலைக்காக கீழே இறங்கும்



சரிவு வந்தது. அங்கே டிராக்டரை வளைக்க முற்பட்ட போது பக்கத்தில் மோட்டார் ஒன்று தண்ணீர் இறைக்கும் சப்தம் கேட்டது. டிராக்டரை நிறுத்தி சப்தம் வந்த பக்கத்தைப் பார்த்தான்.

பகீர் என்றது.

ஒண்ணரை ஹார்ஸ் பவர் மோட்டார் ஒன்று கண்மாய் தண்ணீரை ஒரு பெரிய தடித்த குழாய் வழியாக உறிஞ்சி நீண்ட ரப்பர் ட்யூப் வழியாகக் கொண்டு சென்றபடி இருந்தது. மோட்டாரை ஒட்டி கதிரவனின் தாய்மாமாவான கழுகாசலம்!

பொருத்தமான பெயரையே அவருக்கு வைத்து விட்டது போல கழுகு போலவே ஒரு முகம் அவருக்கு... கொஞ்சம் தொங்கு மீசை வேறு. டிராக்டர் வரும் சப்தம் கேட்டு அவரும் நிமிர்ந்து பார்த்தபடி இருந்தார்.

கதிரவனுக்கு கொஞ்சம் போல நெஞ்சக் கரித்தது.

நின்று அவரைக் கூர்மையாகப் பார்த்தவன் டிராக்டரை பிறகுதான் கிளம்பினான். டிராக்டரும் சரிவில் இறங்கியது. எதிர்ப்பட்டார் பெரியசாமித் தேவர். ஊர்ப் பெரியவர். தமிழ் வாத்யாரும் கூட.

"யாரு கதிரவனா?"

"ஆமாங்கய்யா... வணக்கமுங்க."

"நீ ஒருத்தன் தான் நான் பள்ளிக்கூடத்துல சொன்னபடி அப்படியே நடந்துக்கறே. ஒரு நாளைக்கு எத்தினி தடவை பார்த்தாலும் வணக்கமும் சொல்றே..."

கதிரவன் அதன் பொருட்டு சிரித்தான். இருந்தாலும் உடனே அது கலைந்து போனது. காதில் மோட்டார் பம்பு இறைக்கப்படும் சப்தம்.

"கதிரு."

"சொல்லுங்கய்யா.."

"மோட்டார் பம்பு ஓடிகிட்டு இருக்கறத பார்த்தியா?"

"பார்த்தேங்க... அதான் என்ன பண்றதுன்னு புரியாம நிக்கறேன்."

"புரியாம நிக்க இது என்ன கம்ப சூத்ரமா? உன் மாமன் பண்றது தப்பு காரியம். கண்மாய் தண்ணி ஊருக்கு பொதுவானது. அதைப் போய் இந்த ஆள் மோட்டார் வெச்சு திருடினா எப்படி?"

"அவர் ஏன்தான் இப்படி நடந்துக்கறாருன்னு தெரிய லீங்க..."

"அது தெரிஞ்சு என்ன பண்ணப்போறோம். நீ நம்ம ஊருக்கு பிரசிடெண்ட் எலெக்ஷன்ல நின்னு ஓட்டு வாங்கி ஜெயிச்சவன். உன்னை நம்பித்தான் ஓட்டு போட்டுருக்காங்க. அவரு அந்த பழைய நினைப்புலையே இருக்காரு. இப்படி ஊர் சொத்தை கொள்ளை அடிச்சதுக்காகத்தான் தலைவர் பதவி போச்சு. இப்பவும் அந்த தலைவர் நினைப்பிலேயே தப்பு பண்ணிக்கிட்டிருந்தா எப்படி?"

"சரிங்கய்யா. நான் என்னன்னு விசாரிக்கறேன்."

"விசாரிக்கறது அப்புறம். முதல்ல நாலு பேரோட போய் தண்ணி திருடறத நிறுத்து. ஏதோ அதிகமா மழை பேஞ்சு தண்ணி நிக்குது. ஆடுமாடுங்க குடிக்க கூட தண்ணி இல்லாம கிடந்துச்சு. இப்ப கொஞ்சம் உசுரு வந்துருக்கு. இப்ப போய் அதை திருடறானே இந்த ஆள்..."

பெரியசாமித்தேவர் பொட்டில் அறைந்ததுபோல பேசினார். கதிரவனுக்கும் வேறு வழி இருப்பதாகத் தெரிய வில்லை. போகின்ற வழியிலேயே சிலரை அழைத்துக் கொண்டு அப்படியே திரும்ப கண்மாய்க்கரைமேல் ஏறினான் கதிரவன். பெரியசாமித் தேவரும் சேர்ந்து கொண்டார்.



திபுதிபுவென்று ஒரு கூட்டம் வருவதை கழுகாசலத் தேவரும் பார்த்தார். அவர் முகம் மாறியது. கதிரவனோடு வந்தவர்களில் ஒருவன் கழுகாசலத் தேவரிடம் தன்மை யாகப் பேச ஆரம்பித்தான்.

"ஐயா..."

"என்னடா ஐயா... கொய்யான்னுகிட்டு... எங்க வந்தீங்க எல்லாரும் கூட்டமா? சும்மா தண்ணில குளிக்கவா...? போங்க. போய் நல்லா குளிங்க. நாளைக்கு வந்தீங்கன்னா தண்ணி இருக்காது."

"தேவரின் கித்தாப்பான பேச்சு பெரியசாமித் தேவரை ஒரு உசுப்பு உசுப்பியது.

"யோவ் மாஜி பிரசிடெண்ட்... நீ சோறு திங்கறியா. இல்ல வேற எதாவது தான் திங்கிறியாய்யா..." என்று எடுப்பி லேயே ஒரு உயரத்துக்கு போய் விட்டார்.

"தமிழ் வாத்யாரே... என்ன ஒரேயடியா துள்றே?"

"துள்ளாம... கம்மா தண்ணிய இப்படி நீ ஒருத்தன் மட்டுமே உறிஞ்சி எடுத்தா என்னய்யா அர்த்தம்?"

"ஓ... இப்ப அதான் உன் பிரச்சினையா?"

"முதல்ல மோட்டாரை நிறுத்துய்யா. அப்புறமா பேசு..."

"நிறுத்தாட்டி...?"

"புடுங்கி எறிவோம்..."

"அப்படியா? எங்க எறி பார்க்கலாம்..." கழுகாசலத்தேவர் ஒரு யுத்தத்துக்குத் தயாராகிவிட்டார். பெரியசாமியும் சளைக்கவில்லை. மளமளவென்று போய் ஓடிக்கொண்டிருந்த மோட்டாரின் வயர் பாகத்தைப் பிடுங்கினார். டியூப்பையும் பிடுங்கப் பார்த்தார். அடுத்த நொடி அவர் முதுகில் கழுகா சலத்தேவரின் டயர் செருப்புக் கால் தான் மோதி உதைத்தது.

பெரியசாமியும் அப்படியே குப்புற அடித்து தண்ணீரில் விழுந்தார்.

பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் பதைத்தது.

"என்ன கதிரவா. வேடிக்கை பார்க்கவா வந்தே? என்னய்யா இது அநியாயம்...?" என்று ஆளுக்கு ஆள் கத்தவும் கதிரவன் மௌனத்தை உடைத்துக்கொண்டு தேவர் முன் போய் நின்றான். தேவரிடம் ஒரு அலட்சியப் பார்வை.

"கொஞ்சம்கூட நீங்க செய்யறது நல்லா இல்லை மாமா..."

"அப்புறம்."

"நான் இங்க உங்க தங்கச்சி மவனா பேச வரலை. நான் இப்ப ஊர் பிரசிடெண்ட்."

"அப்புறம்...?"

"வேண்டாம் மாமா... உங்க வயசுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்குங்க."

"அப்புறம்?"

"விழுப்புரம்... நான் என்ன கதையா சொல்லிக்கிட்டு இருக்கேன்."

கதிரவன் பொறுமையிழந்து உச்சக்குரலில் கத்தினான்.

"என்வரைல இது கூட இல்ல. வெட்டிப் பேச்சு. போ... போய் வேலையைப் பார்..."

"வேலையதான் பார்த்துக்கிட்டிருக்கேன். பஞ்சாயத்து போர்டு பிரசிடென்டா ஊர்ல தப்பு நடந்தா, தட்டி கேக்றதும் ஒரு வேலைதானே?"

"இது பொதுவான கம்மா... இந்த தண்ணிய அழகேசனும் குடிக்கலாம் அப்துல்காதரும் குடிக்கலாம். உனக்கு வேணும்னா நீயும் மோட்டாரைப் போட்டு உறிஞ்சு. விட்டு புட்டு என்கிட்ட வந்து மல்லு கட்டாதே. என் ரோஜா



தோட்டத்துக்குத் தண்ணி பாயணும். அதுதான் இப்ப எனக்கு முக்கியம்..."

"அதுக்குதான் அங்க கிணறு இருக்குதுல்ல... அந்த தண்ணியில உங்க ரோஜா தோட்டத்துக்குத் தண்ணி பாச்ச வேண்டியதுதானே?"

"ஏன்... கம்மா தண்ணி பாஞ்சா என் தோட்டம் பூக்காதோ...?"

"இது ஊருக்கு பொதுவான தண்ணின்னு தெரியாதா?"

"அதான் நான் இங்க வந்து தண்ணி எடுக்கறேன். உன் வீட்டு கிணத்துலயா எடுக்கறேன். இந்த கத்து கத்தறே?"

"இந்தப்பா கதிரவா... இந்த ஆள்கிட்ட பேசிகிட்டிருந்தா பருப்பு வேகாதுப்பா. இந்த ஆள் ஒரு மொண பிடிச்சவன். இவன் தண்ணிய எடுக்கட்டும் அந்த ரோஜா தோட்டம் எப்படி பூக்குதுன்னு நாம பார்த்துடுவோம்..." என்றபடியே பெரியசாமித்தேவர் கண்மாய் கரைமேல் ஏற ஆரம்பித்தார்.

அவர் அப்படி சொன்னதில் ஒரு மர்மம்!

## 2



'பூக்களில் தாமரை மிக விசேஷமானது... உலகிலேயே தண்ணீரில் தோன்றி, கதிரவனாகிய வெம்மையால் பூத்துக் குலுங்கும் ஒரே மலர்த்தாவரம் தாமரைதான். தாமரை ஒரு இடத்தில் இருக்கிறது என்றால் அங்கே நீர்வளம் நிறைய இருக்கிறதென்று பொருள். தாமரை எப்பொழுதும் தேங்கிய- பெரிதும் சலனமில்லாத நீர்ச் சூழலில்தான் வளர்ந்து மலரும். இந்த மலர் பூஜிக்க மட்டும் தான் பயன்படும். இதை பெண்கள் கூந்தலில் சூடிக் கொள்ள இயலாது.

தாமரையின் இன்னொரு விசேஷம் கம்பீரம்.

இதன் இலைகள் மிகப் பெரியவை. ஆனால் இதைப் பயன்படுத்தி சோறு உண்ணுவதை யாரும் ஊக்கப்

படுத்துவதில்லை. தாமரை இலையில் சோறு உண்டால் தரித்திரம் என்பது உட்பொருள். மகாலக்ஷ்மியையும், சக்தியையும் வழிபாடு புரிபவர்கள் தாமரை இதழ்களால் அர்ச்சனை செய்வது மிக விசேஷமானதாகும்.

கதிரவனின் தோட்டப்பண்ணை ஊரிலேயே பெரியது.

பெங்களூர் தக்காளி, கொடிமுருங்கை, கத்தரிக்காய், வெண்டைக்காய் என்று காய்கறிகள் ஒருபுறம் என்றால், குண்டுமல்லி, கனகாம்பரம் என்று பூக்கள் ஒருபுறம், வழக்கம்போல சீரக சம்பா நெல்லும் கரும்பும் இன்னொரு புறத்தில்...

இந்த நெல்லும் கரும்பும் தண்ணீர் தாவரங்கள். நீர்வளம் எக்குத்தப்பா இருந்தால்தான் நல்ல வெள்ளாமை பார்க்கலாம். இல்லாவிட்டால் பாதிக்கு மேல் சாவியாகிவிடும். எனவே அந்தப் பகுதியில் மட்டுமே மூன்று இடங்களில் போர் போட்டு தண்ணீர் பாய ஏற்பாடு செய்திருந்தான். தழை உரம்தான்... ரசாயன உரம் கிட்டையே நெருங்கக் கூடாது என்பது அவன் கொள்கை.

'பஞ்சகவ்யம்' என்று ஒரு பூச்சிக்கொல்லியை அவனே தயாரித்திருக்கிறான். நெய், பசுவின் மூத்திரம், சாணி என்று மாட்டிடம் இருந்து கிடைக்கும் விஷயங்களில் இருந்துதான் பஞ்சகவ்யம் தயாராகிறது. அதை கதிர்களின் மேல் தெளித்தாலே போதும்... ஒரு பூச்சி புழு அண்டுவதில்லை.

அதே போல காய்கறிச் செடிகளுக்கெல்லாம் சொட்டு நீர்ப்பாசன முறை. இதனால் செடிகளுக்கான நீர் இருபத்தி நாலு மணி நேரமும் எவ்வளவு தேவையோ அவ்வளவுக்கு கிடைத்து விடுகிறது. அதற்காக எப்பொழுதும் ஒரு ராட்சஸ தொட்டியில் தண்ணீர் இருக்கும்படி செய்து அதிலிருந்து பாத்திகளுக்கு நடுவே செல்லும் குழாய்களில் தண்ணீர் ஓடி கசியும்படி செய்திருந்தான்.



யாராவது பண்ணைக் காட்டுக்குள் நுழைந்தால் கண் விழுந்துவிடும். அப்படி ஒரு பசுமை. போதாக்குறைக்கு ஆள் உயரத்துக்கு நான்கு ராஜபாளையம் நாய்கள்...

அவனது டிராக்டர் உள் நுழையும்போதே அவைகளும் பக்கவாட்டில் குதிரைகள் போல டிராக்டரோடு ஓடிச் செல்வது கம்பீரமான ஒரு காட்சி.

அவனையும் பண்ணையாட்களையும் தவிர, வேறு யாரும் அந்த பண்ணைக் காட்டுக்குள் கால் வைக்க முடியாது. எங்கிருந்து தான் வரும் என்று தெரியாது. நான்கு நாய்களுமே திசைக்கு ஒருவர் என்று பகிர்ந்து கொண்டது போல சூழ்ந்து கொண்டு நிற்கும். அதன்பின் அந்த நபர் அவ்வளவுதான்... அவர் பிய்த்துக் குதறப்படுவார்.

பக்கத்தில்தான் இருக்கிறது கள்ளங்குளம் என்கிற கிராமம். இந்தக் கிராமத்தில் சிலருக்கு திருட்டு தான் தொழிலே... திருடுவதற்குப் புறப்படும் முன் பொங்கல் வைத்து பூஜை செய்து கும்பிட்டு விட்டு தான் கிளம்புவார்கள்.

இவர்கள் அப்படிக் கிளம்பிவிட்டால் எந்த வயல்காட்டு கிணற்றில் மோட்டார் களவு போகும் என்று யாராலும் கூற முடியாது. மேய்ச்சல் மாடுகளையும் எப்படியோ மயக்கி தங்கள் பின்னால் வரும்படி செய்து இழுத்துக்கொண்டு போய் விடுவார்கள்.

அதன்பிறகு திருட்டு கொடுத்தவர்களுக்கு செய்தி சொல்லி அனுப்பப்படும். அவர்கள் போய் கப்பம் கட்டுவதுபோல, ஒரு தொகையைக் கட்டினால் மாடு கன்றுகள் வீடு சேரும். திருட்டுப் போன மோட்டாரும் திரும்ப வரும். இல்லாவிட்டால் மொட்டை போட்டுக் கொண்டு காதில் பூவைச் செருகிக் கொள்ள வேண்டியதுதான்.

அந்தக் கூட்டத்தில் ஒருவன் கதிரவன் பண்ணைக்காடு பற்றித் தெரியாமல் வேலியைத் தாண்டி நுழைந்துவிட்டான்.

நான்கு ராஜபாளையமும் அவனை கரகாட்டம் ஆட வைத்து விட்டன. உடம்பெல்லாம் சதை கிழிந்து ரத்த விளாறாக ஆடிப் போனவன், ஒரு மாதத்தில் நாய் போல குரைத்தே ராபிஸ் நோய் வந்து செத்துப் போனான்.

"இதனால் பண்ணைக் காட்டு பக்கம் ஒருவரும் தலைவைத்துக் கூட படுக்கமாட்டார்கள்.

கதிரவனும் இப்படிப்பட்ட தனது பண்ணைக் காட்டுக்குள் டிராக்டரில் பிரவேசித்தபோது, வழக்கமாய் ஓடிவரும் நாய்களைக் காணவில்லை. ஆச்சரியப்பட்டுப் போனவன் ஓங்கு தாங்கலாய் வளர்ந்து விட்டிருந்த மாமரத்தடியில் டிராக்டரை நிறுத்திவிட்டு தொம் என்று தரையில் குதித்தவனாக சுற்று முற்றும் பார்த்தான். அவனது பண்ணையாட்கள் கர்ம சிரத்தையாக களை எடுத்துக் கொண்டும், தண்ணீர் பாய்ச்சிக் கொண்டும் இருந்தார்கள். நாய்கள் எங்கே போயிற்று...? கேள்வியோடு பெர்முடாஸ் டிரவுசரை சற்று மேல் இழுத்து விட்டுக்கொண்டு கூலிங் கிளாஸையும் கழற்றி துடைத்தான்.

மாமா கழுகாசலத்துடன் சண்டை போட நேர்ந்ததில் உண்டான வருத்தம் மனசை குத்திக்கொண்டே இருந்தது.

எதிரில் இருந்தது அவனது பண்ணை வீடு.

முகப்பில் பெரிய சிமெண்டுத் திண்ணை. திண்ணை மேல் முல்லைக் கொடி பரவி வளர்ந்து முல்லைப் பூக்கள் திண்ணை மேல் உதிர்ந்து கிடந்தன.

திண்ணை மேல் போய் உட்கார்ந்தான்.

"வா கதிரு..." என்று ஒரு குரல் கேட்க நிமிர்ந்தான்.

கந்தசாமிபிள்ளை ஒரு லெட்ஜர் நோட்டோடு வந்து அவன் அருகில் அமர்ந்தார். அப்படியே கைகெடிகாரத்தைப் பார்த்தார்.

"என்ன பிள்ளை... லேட்டா வந்துட்டேனாக்கும்?"



"ஆமாம் கதிரு... நீ வர்றத வெச்சு நான் கெடிகாரத்தைத் திருப்பி வெச்சிக்குவேன். அவ்வளவு துல்லியமா இருக்கும் உன் வருகை. இன்னிக்கு என்னாச்சு...?"

"வர்ற வழியில ஒரு பஞ்சாயத்து..."

"நினைச்சேன். உன் மாமா கம்மாய்ல தண்ணி திருடுன விவகாரம் தானே?"

"உங்களுக்குத் தெரியுமா பிள்ளை..."

"நானும் அந்தப் பக்கமா தானே வந்தேன். விடியற் காலையே மோட்டார் செட்டோட போய் உட்கார்ந்து குழாயை மாட்டி பாத்திகட்ட ஆரம்பிச்சுட்டாரே..."

"ஏன்தான் இப்படி இருக்குறாரோ தெரியல பிள்ளை... ரொம்ப வருத்தமா இருக்குது..."

"அதுசரி... அப்படியே ஜாலியா ஒரு பளுவும் இல்லாம பிரசிடெண்டா இருந்துடலாம்னு நினைச்சியாக்கும் நீ..."

"அப்படி இல்ல... பிரச்சனைன்னு வந்தா, அதுல ஒரு அர்த்தம் இருக்கணும். இப்ப இந்த பண்ணக் காட்டையே எடுத்துக்குங்க. இப்பதான் இப்படி செழிப்பா இருக்குது. பத்து வருஷம் முந்தி பாறையும் பள்ளமுமால்ல கிடந்துச்சு. அதைப் பார்த்து நான் மிரண்டா போனேன். வெட்டிச் சரி செய்யலை...?

"மண்ணும் மனுஷனும் ஒண்ணா கதிரு. மண்ணுக்கு முதல்ல மனசு கிடையாது. அதனால் அதுக்கு நல்லவன் கெட்டவனே கிடையாது. ஆனா மனுஷன் என்ன அப்படியா?"

"போதும் பிள்ளை... இப்படி பேசிப்பேசிதான் எதுவுமே சரி இல்லாம போச்சு. மாமாவை எப்படி வழிக்குக் கொண்டு வரதுன்னே எனக்கு தெரியலை."

"அவ்ரை எல்லாம் யாராலையும் வழிக்குக் கொண்டுவர முடியாது கதிரு. முப்பது வருசமா நாட்டாமை பண்ணவரை

போன எலெக்ஷன்ல நீ தூக்கி எறிஞ்சுட்டே... அதை எப்படி அவரால அவ்வளவு சாதாரணமா எடுத்துக்க முடியும்? அடுத்து அவர் மகளைக் காட்றதா சொல்லிட்டு, கடைசில முடியாதுன்னுட்டே..."

அவர் நெருப்பாக இது இரண்டு போதாதா?"

"பிள்ளை நீங்க கூட புரியாம பேசறீங்களே... நான் சிவகாமியை காலேஜ்ல படிக்கப்போனப்ப இருந்தே காதலிக்கிறேன். என் மாமன் மகளை நான் சின்னதுல இருந்து பார்த்த பார்வையே வேற... அண்ணன் தங்கச்சி மாதிரி பழகினோம். புருஷன் பொண்டாட்டியா மாறுங் கன்னா எப்படி பிள்ளை...? எலெக்ஷன்லையும் நானா நிக்றேன்னேன்... அவருக்கு எதிரா நான் நின்னாதான் அவர் தோப்பாருன்னு ஒரு கணக்கு போட்டு பத்து பேர் உண்ணா விரதம்லாம் இருந்து என்னை சம்மதிக்க வெச்சீங்க...

எல்லா விஷயத்துலையும் என்னைப் பகடைக்காயாக் கிட்டு இப்ப என்னையே குத்தம் சொல்றீங்களே..."

கதிரவன் கையை உதறியபடியே சலித்துக் கொண்டான்.

"அதுவும் சரிதான்... இருந்தாலும் அப்ப நீ சுதாரிச்சுக்கலை. அதான் இப்ப அவஸ்தைப்படறே..."

"பிள்ளை. விளக்கமெல்லாம் எனக்குத் தேவையில்லை. மாமா பிரச்னை பெருசாவும் போல இருக்கு. எப்படி சமாளிக்கறதுன்னு ஒரு வழிய சொல்லுங்க..."

"நான் என்னத்த சொல்ல... நான் எதையாவது சொல்லி அது அவர் காதுக்கு போனா, அப்புறம் என்னை நோண்டி நொங்கு எடுத்துப்புடுவாரு... தேவையா எனக்கு?"

பிள்ளையின் வெளிப்படையான பதிலில் ஒரு அப்பட்ட மான சுயநலம். பதிலுக்கு எரிச்சலுடன் அவரைப் பார்த்தான் கதிரவன். அவரோ லெட்ஜரை விரித்து மார்க்கெட்டுக்கு அனுப்பப்பட்ட சரக்கு விபரத்தைப் படிக்க ஆரம்பித்தார்.



"கதிரு... உங்க மாமா பிரச்சினை ஒரு பக்கம் இருக்கட் டும். நான் என் ஜோலியைப் பார்த்துட்றேன். இன்னிக்கு வெண்டக்கா அறுபது கிலோவுக்கு புடுங்கியிருக்காங்க. மார்க்கெட் ரேட் கிலோ எட்டு ரூபா... நான் வழக்கம் போல 5.50-க்கு போட்ட வகைல 330 ரூ அந்த மட்டுல வரவு.

அப்பால கொடி முருங்கைல ஒரு ஐநூறு... ஒரு முருங்ககா முப்பது பைசான்னு வெச்சதுல அதுல ஒரு 150 ரூபா. தக்காளி எட்டு கிலோ பெட்டி இன்னிக்கு அம்பது ரூபாவுக்கு போச்சு. மொத்தம் முப்பது பெட்டி தேறினுச்சு. அந்த வகையில ஒரு 1500 ரூபா! மொத்தம் 1970 ரூபா... இதுல முப்பத்தி மூணு ரூபா, சுக்குக் காபி போட செலவாச்சு. நம்ம தோட்டத்து மாடுங்களோடு பால்ல இரண்டு லிட்டர் பாலை எடுத்து காபிபோட்டு காய்பிடுங்க வந்தவர்களுக்கு தந்தேன். பெட்டி அடிக்க, பிடுங்கு கூலி, வண்டி வாடகை ஒரு முந்நூறு... மிச்சம் 1637 ரூபா... தா இந்த கவருக்குள்ளாற இருக்குது. ஒரு கைய்யெழுத்த போட்டுப்பிட்டேன்னா, அப்படியே கொண்டுக்கிட்டு போய் போஸ்ட் ஆபீஸ் கணக்குல கட்டிப்பிடுவேன்..."

கந்தசாமி ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண் என்கிற மாதிரி மளமளவென்று கணக்குகளைச் சொல்லி விட்டு மை இங்க் பேனாவை கதிரவன் எதிரில் நீட்டினார். அதை வாங்கி கையெழுத்து போட்டவன், திரும்பவும் கவலைப்பட ஆரம்பித்தான். கழுகாசலத்தேவர் ஒரு ஜென்ம பகைவராகி, தினம் இப்படி ஒரு பிரச்சினையை ஏற்படுத்தி வருவதற்கு இன்றோடு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். அதற்கு என்ன வழி என்று யோசித்தபோது, ஒரு சைக்கிளில் எதிரில் சிவகாமி! அவனோடு வேளாண் மைக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவள். நல்ல வாலிப மிடுக்கு... மாநிறம்- ஆனால், ஏதோ ஒரு விதத்தில் எல்லோ

ரையும் பார்க்க வைக்கும் ஒரு தினுசான முக அமைப்பு. சிவகாமி அவனருகே வந்து சைக்கிளை நிறுத்தினாள்.

புடவை ரவிக்கை என்று படு சிம்பிளாக இருந்தாள்.

"என்ன கதிர்... என்ன பிரச்சினை, இவ்வளவு டல்லா இருக்கீங்களே?" என்று எடுப்பிலேயே டாப் கியருக்கு போய்விட்டாள்.

"ஒண்ணுமில்ல சிவகாமி."

"எனக்கு தெரியும். வழியில உங்க மாமாவைப் பார்த்தேன். அவருக்கு மட்டும் நெற்றிக்கண் இருந்திருந்தா, என்னை சாம்பலாக்கியிருப்பாரு. அவராலதான் பிரச்சினைன்னும் தெரிய வந்திச்சு."

"ஆமாம்... அவர்தான் பிரச்சினையே... தெலுங்கு சினிமா வில்லன் மாதிரியே நடந்துக்கறாரு. நடை உடை தோரணை எல்லாம் அவங்க மாதிரியேதான். தன்னை ஒரு ராஜாவா நினைச்சுகிட்டு அவர் படுத்தறபாடு இருக்குதே..."

"புலம்பல் அப்புறம். என்ன ஸ்டெப் எடுக்கப் போறீங்க?"

"தெரியல... ஒரே குழப்பமா இருக்கு..."

"தெரியல... குழப்பமா? என்ன கதிர்... இது என்ன இந்தியா- பாகிஸ்தான் சம்பந்தப்பட்ட சென்சிடிவான காஷ்மீர் பிராப்ளமா இல்ல ராமஜென்ம பூமி பிரச்னையா... ஒரு சுண்டைக்காய் கிராமத்தோட உமியளவு பிரச்னை இது. இதுக்கா ஆயாசம்..."

"என்ன சொல்றே நீ... என் மாமா பத்தி தெரிஞ்சுதான் பேசறியா நீ..."

"அவர்தான் தெலுங்கு சினிமா வில்லன்னு சொல்லிட்டீங்களே- என்னமோ தமிழ் சினிமா வில்லன்கள்ளாம் ரொம்ப யோக்யம் மாதிரி..."

"பேச்சு மாத்தாதே... என்ன செய்யலாம் சொல்."



"பஞ்சாயத்து கூட்டுங்க.. வரவைங்க. அவர் தண்ணி திருடினதுக்கு சாட்சி இருக்குல்ல... அதுக்கு என்ன அபராதமோ அதைப் போடுங்க. இனியும் தொடர்ந்து ஊர் கட்டுப்பாட்டை மீறி நடந்து கிட்டா போலீசுக்கு போவேன் கறதையும் பஞ்சாயத்துல போட்டு உடைச்சிடுங்க... தட்ஸ் ஆல்... இதுக்கு எதுக்கு குழப்பம்."

சிவகாமி தடதடவென அருவி போல கொட்டினாள்.

கதிரவன் வாயைப் பிளந்து விட்டான்... கந்தசாமி பிள்ளையும் சிவகாமி பேசியதைக் கேட்டவராக நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்.

அவனுக்கு, ஒரு வினாடி, அப்பா பாண்டியராசத்தேவர் ஞாபகம் வந்து, அவர் என்ன சொல்வாரோ என்றும் ஒரு எண்ணம் ஓடியது.

நல்லூர் உருப்பட வேண்டும் என்றால் ஒரு பிரசிடென்ட் டாய் இப்படித்தான் நடந்து கொண்டாக வேண்டும். வேறு வழியில்லை என்பது அவனுக்கும் புரிந்தது. ஆனால் கழுகாசலத்தேவர் இதுக்கெல்லாம் வழிக்கு வருவாரா... இல்லை இவன் கோலத்தில் பாய்ந்தால் அவர் தடுக்கில் பாய்வாரா என்றெல்லாம் கதிரவனுக்குள் உள் ஓட்டங்கள்.

தமிழாசிரியர் பெரியசாமித் தேவர் முதல் மற்றவர்கள் பஞ்சாயத்தில் பல்டி அடித்து விட்டால் என்னாவது என்றும் ஒரு சந்தேகம் துளிர்ந்தது.

எதிரில் வீட்டு வேலைக்காரன் ராமசாமி காலை டிபனை எடுத்து வந்து கொண்டிருந்தான்.

கதிரவனை நெருங்கியவன் ஒரு மாதிரியாக பார்த்தான்.

"என்ன ராமசாமி?"

"அப்பா ஒரு விசயம் சொல்லிவிட்டாருங்க..."

"என்ன?"

"மாமா விசயத்துல எது சரியோ, அப்படி நடந்துக்குவீங் களாம்..."

"அப்புறம் என்ன... பெரிய ஐயாவோ உங்களுக்கு ஒரு தெளிவான வழியைக் காட்டிப்பிட்டாரு. இனி என்ன? சொந்தம் நட்பு பகைன்னு போட்டு கொழப்பிக்காம, எது நியாயமோ அதை சொல்லிடுங்க தம்பி." என்றபடியே கந்தசாமி பிள்ளையும் குரல் கொடுக்க, கதிரவனுக்கும் வேறு வழி தெரியவில்லை!

## 3

'மலர்களில் மனோரஞ்சிதம் மிக மிக விசேஷமானது... மனோரஞ்சிதம் ஒரு குறுமரமாக வளரக்கூடியது. பச்சையாய் சற்றே ஓவல் சைஸில் காய்கள் கொத்துக் கொத்தாய் காய்க்கும். இந்தக் காய்க்குள் இருந்து தான் பூ வரும். சாதாரணமாக பூ இதழ்களுக்கு ஒரு மென்மை இருக்கும். ஆனால் மனோரஞ்சிதத்தின் இதழ்கள் தடிமனாக இருக்கும். பறிக்காமல் விட்டால் அப்படியே பழுத்து மஞ்சள் நிறத்துக்கு மாறி உதிர்ந்து விடும்.

அப்படி உயர்ந்து கிடக்கும் பூவிதழ்களில் இருந்து வரும் வாசம் எப்பேர்ப்பட்டவரையும் மயக்கிவிடக் கூடியது. மணமுள்ள பலரக சென்ட்டுகளைக்கூட இது ஓரம் கட்டிவிடும். சிலருக்கு மனோரஞ்சிதப் பூவாசம் தூக்கத்தை வரவழைக்கக் கூடியது. கையில் சிறிது நேரம் வைத்திருந்தால் கையே நெடுநேரம் மணக்கும்.

இந்த வாசத்துக்கு நாகப்பாம்புகள் இதைத் தேடிவந்து இந்த மரத்தில் ஏறி படுத்துக் கொள்ளும் என்பார்கள். ஒரு மனோரஞ்சித இதழ் என்பது ஒரு பவுன் நாணயத்துக்குச் சமம். இந்த இதழ்களால் லிங்கார்ச்சனையும், குபேர பூஜையும் செய்வது மிகமிக விசேஷமானது. உடனடியாக அருளை அள்ளித்தருவது என்பார்கள்.

நல்லூர் முழுக்க தமுக்குப் போட்டு தகவல் சொல்லிவர ஒரு சட்டிப்பானை முரசுடன் கிளம்பிவிட்டான் பஞ்சாயத்து



எடுபிடி முத்தப்பன். 'டொம் டொம் டொம்...' என்று அவன் தமுக்குப் போட்டுக் கொண்டு காலை அகட்டி வைத்தபடி நடக்கும் அழகே தனிதான். அவன் பின்னாலேயே அரை டவுசர் வாண்டுகளும் அந்தத் தெரு முக்கு வரையிலும் போவதும் வாடிக்கையான ஒரு விஷயமே..."

"இதனால நல்லூர்க்கார ஆம்பள பொம்பள நண்டு சிண்டு அம்புட்டு பேருக்கும் சொல்லிக்கற தகவல் என்னன்னா... கம்மாதண்ணிய களவாண்ட குத்தத்துக்காக மாஜி பிரசிடென்ட்டய்யா கழுகாசலத் தேவரை பஞ்சாயத்துமுன்னால நிறுத்தி விசாரணை பண்ணி ஒரு நியாயம் தேட, பஞ்சாயத்துக்கு வரும்படி பஞ்சாயத்தார் உத்தரவு..." என்று சொல்லிக்கொண்டே போனபடி இருந்தான் முத்தப்பன். பலர்வாயைப் பிளந்து விட்டனர்.

"என்னா இந்த கதிரு... வெவரமில்லாத பிள்ளையா இருக்குதே?"

"அதானே... தேவரய்யாகிட்டையே இப்படி மோதுதே. பதிலுக்கு அவரு நிமிர்ந்தா தாக்குப் பிடிக்க முடியுமா இதால?"

"அது சரி... இப்படியே எல்லாரும் நினைச்சு நினைச்சு தான், அந்த ஆள் என்னமோ இந்த ஊருக்கு தன்னை ராசாவ நினைச்சுகிட்டு ஆட்டம் போட்றான்."

இப்படி பலமாதிரி கருத்துக்கள் அங்கங்கே உருவாகத் தொடங்க, ஒவ்வொருவராக பஞ்சாயத்து நடக்கும் முன் கோயில் திடல் பக்கமாக செல்லத் தொடங்கினர்.

ஊரே திரண்டு விட்டது. ஆனால் கழுகாசலத்தேவர் மட்டும் வரவில்லை. கதிரவனும் வந்து தனக்கான இடத்தில் அமராமல் நின்றபடியே இருந்தான். வாத்தியார் பெரிய சாமித் தேவர் மீசையை நீவிக் கொண்டே இருந்தார். அதில் அவரது கோபம் நன்றாகத் தெரிந்தது.

அங்கிருந்து ஒரு வழித்தடம்தான்! அதையே பார்த்தபடி எவ்வளவு நேரம் தான் நிற்பதாம்...

"தலைவரே... என்ன இது? இப்படி ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பாக்கவா இங்க வந்துருக்கோம்..."

"அட பொறப்பா. கொஞ்ச நேரம் பார்ப்போம். நாம இம்புட்டு பேர் காத்துக்கிட்டிருக்கோம்னு தகவல் போனாத் தானே நம்ம பழைய தலைவரும் கிளம்பி வருவாரு."

"அடப் போடா புண்ணாக்கு. பெரிய கலெக்டரு பாரு. கடைசியா வர்றதுக்கு... அந்தாளு மேலதாண்டா பிராதே. முதல்ல அந்தாளுதான் வரணும்."

பஞ்சாயத்திலும் இந்த மாதிரி சலசலப்புகள்...

நல்ல வேளை... அவர்களை அடித்துக்கொள்ள விடாத படிக்கு கழுகாசலத் தேவரின் மச்சினன் சின்னராசு என்பவன் தடதடவென்று மோட்டார் சைக்கிளில் வந்தவனாக கதிரவனையும் ஒரு பார்வை பார்த்தான். அதில் பூச்சி பறந்தது.

"ஏப்பே... எங்க என் மாமன்?"

"எவண்டாவன் என்னைக் கேக்கறவன்..."

"நான்தான்.. தலை வரும்னு பார்த்தா, வாலு வந்து நிக்குதேன்னு தான். கேட்டேன்..."

"நான் உனக்கு வாலா...?" சின்னராசு நாக்கை மடக்கிக் கடிக்கத் தொடங்க. "அட விடுங்கப்பா விசயத்துக்கு வாங்கப்பா." என்றார் பெரியவர் ஒருவர்.

"தா... என் மாமா இந்த பஞ்சாயத்துக்கெல்லாம் வரமாட்டார். பல வருஷம் இந்த ஊருக்கு தலைவரா இருந்தவரு அவரு. பள்ளிக்கூடம், பாலம், ரோடு, நல்லதண்ணி வசதி, தெருவிளக்குன்னு எம்புட்டோ பண்ணவரு. ஊர் பொது கம்மாவுல தண்ணி எடுக்க, அதுவும் வான் பார்த்து கொடுக்கற தண்ணியை எடுக்க அவர் யாரையும் கேக்கத் தேவையில்லை.



இந்த பஞ்சாயத்தே சின்ன பிள்ளைத்தனமான ஒரு பஞ்சாயத்துதான். இதைச் சொல்லத்தான் நான் வந்தேன். போய் சோலிய பாருங்கடா. போங்க... போங்க..." என்று சின்னராசு படு ஏற்ற இறக்கமுடன் பேசவும், எல்லோருக்கும் முகமானது சிவந்தே விட்டது. அதற்குப்பின் அவன் மறுபதில் எதுவாக இருக்கும் என்றெல்லாம் கவலையே படவில்லை. வந்த தோரணைக்கு துளியும் பழுதில்லாதபடி பைக்கை உதைத்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

எல்லோருக்கும் அவன் பதில் காறி உமிழ்ந்து விட்டுப் போவது போல இருந்தது. ஒரு முகமாக கதிரவனைப் பார்த்தார்கள். 'என்ன தீர்ப்பு சொல்லப் போகிறாய்?' என்பது போல ஊர் பார்த்த பார்வை அவனுக்கும் புரிந்தது. ஏற்கெனவே இப்படித்தான் நடக்கும் என்று பெரியசாமித் தேவரிடமும் சொல்லியிருந்தான். அப்படியே நடந்து விட்டால் என்ன தீர்ப்பு கூறுவது என்றும் கூறியிருந்தான். அதை அவரும் கூற ஆரம்பித்தார்.

"இதனால இங்க கூடியிருக்கிற அம்புட்டு பேருக்கும் பஞ்சாயத்தார் சொல்லிக்கற விஷயம் ஒண்ணுதான். ஆண்டியா இருந்தாலும் சரி, அரசனா இருந்தாலும் சரி பஞ்சாயத்து முன்னால் அவன் ஒண்ணுதான். தப்பு பண்ணிபுட்டா தண்டனையும் பாரபட்சம் காட்டவே கூடாது. நம்ம முன்னாள் தலைவர் தப்பு பண்ணிபுட்டு கௌரவம் பாத்துக்கிட்டு வீட்டை விட்டே வராமலும் இருந்துகிட்டார். அவருக்கு இங்க இருக்கற நாம யாருமே ஒரு பொருட்டா இல்லாம போயிட்டோம். ஆகையால நாமளும் இனி அவரைப் பொருட்படுத்த தேவையில்லை...

அதாவது அவரை இந்த பஞ்சாயத்து, ஊரைவிட்டே ஒதுக்கி வைக்குது... அவரோடு இனி யாரும் எந்த சவகாசமும் வெச்சுகிடக் கூடாது. மளிகை கடைல இருந்து மாட்டு தாவணி வரை இனி அவர் அசல் மனுஷன். பச்சத்தண்ணிய

அவருக்கோ அவரோட குடும்பத்துக்கோ குடிக்கக் கொடுத்தா கூட அது பஞ்சாயத்து உத்தரவுப்படி பெரும் குத்தம். எனவே எல்லாரும் கவனமா இருந்து நீதி நியாயம் நல்லவிதமா வாழ, இந்தத் தீர்ப்புக்கு ஒத்துழைப்பு தந்து ஆதரிக்கணும்னு கேட்டுக்கறோம்."

என்று பேசி முடித்தார். கூட்டமும் அதைக் கேட்டு பதிலுக்கு எந்தக் கருத்தையும் கூறாமல் மெல்லக் கலையத் தொடங்கியது.

கதிரவன் முகம் முற்றாக வாடிப் போயிருந்தது.

அப்படியே தொங்கப்போட்ட முகத்துடன் அவனும் அங்கிருந்து விலகத் தொடங்கினான். அவன் பிரசிடென்ட்டாகி எவ்வளவோ நல்ல தீர்ப்பளித்திருக்கிறான்.

தென்னந்தோப்பில் நூற்றுக்கணக்கில் தேங்காய் களவாண்டவன்தான் இப்போது தோப்புக்கு காவலாளி. குடித்துவிட்டு வந்து பெண்டாட்டி தலையில் கல்லைத் தூக்கிப் போடப் பார்த்தவன் இந்த வருஷம் முழுக்க பெண்டாட்டி சேலையைத் துவைத்துப் போட வேண்டும். இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆனால் கதிரவனின் இந்த தீர்ப்பு மிகக்கடுமையான தீர்ப்பு. என்ன செய்வது... கமுகாசலம் மாதிரி மனிதர்களை இப்படித்தான் அடக்கி வைக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் அவர்களும் அடங்கமாட்டேன் என்கிறார்கள்.

வருத்தமுடன் நடந்து தனது டிராக்டரில் ஏறியவன் பார்வை எதார்த்தமாய் தொலை தூரத்தில் ஒரு பெண்ணைப் பார்த்தது. காலையில் கண்மாய்க்கரை மேல் பார்த்த வெள்ளைச்சீலைப் பெண்!

அவள்தான் இமைக்கக் கூட மறந்தவளாக பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த பார்வை கதிரவனை என்னவோ செய்தது. டிராக்டரும் அவள் நிற்கும் திசை நோக்கிதான்



உருள ஆரம்பித்தது. அவளைப் பார்த்துக்கொண்டேதான் போனான். அவளும் அசரவில்லை. அவன்மேல் வைத்த பார்வையை அப்படியே இப்படி அசைக்கவில்லை.

கதிரவனை அந்தப் பார்வை என்னவெல்லாமோ செய்தது.

அதே நினைப்பாக டிராக்டரில் ஓடியவன் முன்னே சைக்கிளில் சிவகாமி... சிரித்தபடியே அவனைப் பார்த்துக் கொண்டே ஓரமாக ஒதுங்கி வழிவிட்டாள்.

பண்ணைக்குள் நுழையவும் கந்தசாமிப்பிள்ளை ஓடி வந்தார். கூர்மையாகப் பார்த்தார்.

"என்ன பிள்ளை... எதுக்கு இந்தப் பார்வை?"

"என்ன கதிரு... மாமாவின் விசயத்துல ஏதோ அபராதம் போடுவேன்னு பார்த்தா, ஊரைவிட்டே ஒதுக்கி வெச்சுட்டியே..."

பதிலுக்கு மௌனமானான் கதிரவன்.

"இது ரொம்ப அதிகப்படி கதிரு... உன் மாமா இதைத் தாங்க மாட்டாரு."

"என்ன செய்வாரு?" நிதானமான குரலில் கேட்டான்."

"அதை எனக்கு சொல்லத் தெரியல, ஆனா நீ இனி சாக்ரதையா இருக்கணும்."

"என்ன பிள்ளை... பயமுறுத்துறீங்களா?"

"அட என்னப்பா நீ. உங்க மாமனைப் பத்தி பல கோணங்கள் அறிஞ்சவன்பா நான். ஏற்கெனவே அவர் மகளை நீ கட்ட முடியாதுன்னு சொல்லிட்ட காட்டம் அப்பால அவரை எதுக்கு பிரசிடென்ட்டான காட்டம், இப்ப ஊரை விட்டு ஒதுக்கிட்ட காட்டம்னு மூணு விசயம் சேர்த்துக்குச்சு. இப்பவே உக்காந்து எதாவது திட்டம் போட்டுக்கிட்டிருப் பாரு..."

"எந்த திட்டம் வேணா போடட்டும். சமாளிச்சாதான். நான் பிரசிடென்ட். இல்லாட்டிநான் வெத்து மனுஷன் பிள்ள..."

சொல்லிவிட்டு அப்படியே தக்காளிப் பாத்திக்குள் இறங்கி பழுத்த இலைகளைப் பறிக்கத் தொடங்கிவிட்டான். பிள்ளை பெருமூச்சுவிட்டார்!

**ரோஜாத் தோட்டம்!**

ரொய்ய்ங் என்று மோர்சிங் வாசித்தபடியே தேனிக் கூட்டம் ரோஜாக்களை நெகிழ்த்திக் கொண்டிருக்க, ரத்தச் சிவப்பில் ரோஜாக்கள் ஆயிரக்கணக்கில் தட்டுத் தட்டாய் மலர்ந்திருந்தன. அழகாக பாத்திகட்டி சதுரசதுரமாக பிரித்த வயல். அதில் புசுபுசுவென்று உரம் தின்று வளர்ந்த செடிகள். அதில் கும்பல் கும்பலாக ரோஜாக்கள். தூர இருந்து பார்க்கும்போதே அவ்வளவு அழகாக இருந்தது.

அதுகூட ரோஜா பறிக்கும் நேரம்தான். அதுதான் சரியான வேளை. முதுகில் கூடையைக் கட்டிக்கொண்டு ஒவ்வொரு பூவாய் பின்னால் போட்டுக் கொண்டே நடந்தால் சராசரியாக ஒரு கூடை நிரம்ப மூன்று மணி நேரமாகும். ஒரு கூடை நிரம்பினால் அதுவே ஏழு கிலோ வரை தேறும். இப்படி ஐம்பது பெண்கள் வரிசையில் நின்று பறித்து, கொட்டும் பூ கிட்டத்தட்ட 350 கிலோ... அப்படியே ஈரவேட்டியில் கட்டி அதில் காற்றுக்கு துளை போட்டு பின் உலர் ஐஸ் வைக்கப்பட்ட பெட்டியில் அதை வைத்து உரிய முறையில் பேக் செய்து மதுரை விமானத்தில் ஏற்றினால், அதிகபட்சம் 12 மணி நேரத்தில் சென்னை வழியாக சிங்கப்பூர் போய் இறங்கிவிடும்.

"முதல்நாள் மாலை பறித்தது மறுநாள் காலை சிங்கப்பூரில் விற்கப்படுகிறது என்றால், அந்த வியாபாரத்தில் எவ்வளவு நேர்த்தி இருக்க வேண்டும்?



கழுகாசலத்தேவர் தோட்டத்தின் நடுவில் நின்று கொண்டு பறிக்கப்படாத பூக்களைப் பார்த்து பெருமூச்சுவிட்டுக் கொண்டிருந்தார். தினமும் தவறாமல் வேலைக்கு வரும் பெண்கள் பஞ்சாயத்து கட்டுப்பாடு காரணமாக வரவில்லை. மச்சினன் சின்னராசுதான் தடதடவென்று மோட்டார் பைக்கில் வந்து நின்றான். வண்டியை சைட் ஸ்டாண்ட் போட்டபடியே வேட்டியை ஏற்றிக் கட்டிக் கொண்டு, அவன் அவரை சமீபிக்கும் விதத்தில் ஒரு கோபம் அப்பட்டமாகத் தெரிந்தது.

தேவர் அரைப் பார்வை மட்டும் பார்த்தார்.

"ஒரு புள்ளகூட வரமாட்டேங்கிறா மாமா... நானும் கெஞ்சிப் பார்த்தேன், மிரட்டியும் பார்த்தேன். 'பஞ்சாயத்து கட்டுப்பாடு நாங்க என்ன செய்வோம்'னு கைய விரிச்சிட்டாளுக..."

"அப்ப இன்னிக்கு பூ போவாதா? ஒரு நா போவாட்டியும் ஆர்டர் ரத்தாயிடுமேடா... சிங்கப்பூர்காரன் எழுதியில்ல கையெழுத்து வாங்கியிருக்கான்..."

"அதுக்கு என்ன மாமா பண்ண... சூறைக் காத்துல பூவெல்லாம் கொட்டிப்போனா என்ன பண்ணுவோம்?"

"வெளிய யார்கிட்டையாவது வாங்கியாவது அனுப்பி வைக்கணும். அதானே ஒப்பந்தம்."

தேவர் அவனுக்குத் தெரியாததைச் சொன்னது போல சொல்ல அவன் முகத்தில் மருட்சி.

"அப்ப இம்புட்டு பூவுங்களும் பறிக்காமலே கொட்டிப் போகுமா மாமா..." சின்னராசு சற்று சிதறினான்.

"போ. போய் உங்கக்காளையும், ராசாத்தியையும் வரச் சொல். போடா... போ." என்றவர் ஓரமாக கிடந்த கூடை ஒன்றை எடுத்து முதுகில் கட்டிக்கொண்டு அவரே களத்தில் இறங்கினார். அவனுக்குப் புரிந்துவிட்டது.

"மாமா..."

"போடா... போ! இன்னிக்கு பொழுதுக்கு எப்படியாவது அனுப்பிவைப்போம். நாளைக்கு என்ன பண்றதுன்னு விடியட்டும் பார்ப்போம்."

அவர் பதிலில் ஒரு தீர்மானம். அடுத்த பத்தாவது நிமிடம் அவர் குடும்பமே முதுகில் கூடையுடன் பூபறிக்க ஆரம்பித்துவிட்டது.

"மாமா... நான் போய் பக்கத்து ஊர்ல இருந்து ஒரு பத்து பேரையாச்சும் கூட்டிக்கிட்டு வரேன்..." என்று சின்னராசுவும் மோட்டார் பைக்கில் தாவி ஏறினான். ஒரு மணி நேர இடைவெளியில் திரும்பி வந்தான். முகத்தில் ஏமாற்றம்.

"என்னடா...?"

"ஊரைப் பகைச்சுகிட்டு வரப் பயப்பட்றாங்க. மீறி வரேன்னு சொன்ன ஒரு சிலரும் இரட்டைக் கூலி கேட்கறாங்க..." என்று சின்னராசு சொல்லவும், தேவர் முகம் சிவுசிவு என்று சிவந்து விட்டது. அவர் மனைவி மருதாயி பூ பறிப்பதில் கவனமாக இருந்தவள், கிட்டே வந்தவளாக "கம்மாவுக்கு கிளம்பும்போதே சொன்னேன்... கேட்டீங்களா?" என்று ஆரம்பித்துவிட்டாள்.

"வாய மூடுபுள்ள... பெருசா சொல்லி கிளிச்சுப்புட்டே... சொன்னாளாம் பெருஸ்ஸா..." என்றவர் "சரிசரி மளமளன்னு பாருங்க... இன்னிக்கு நாமதான். நீ போய் பெட்டி எடுத்து வந்து சரக்கை ஈர வேட்டியில் கட்டி உள்ளவெச்சு ஆணி அடிடா... போ... என்றார். அவனும் ஓடினான்!

# 4

*'மல்லிகை!'*

*தமிழ் மண்ணின் மகத்தான மலர் இது! என்னைப் பசை கொண்ட ஒரு மலர் இந்த மல்லிகை. இதன் வாசம் ஆண்களைக் கிளறிவிடக்கூடியது. எந்த இடத்திலும் வளர்ந்து விடும் எளிய தாவரம் இது. நன்கு வெப்பம் தாங்கும். மாலை வேளை பார்த்து மலரும் ஒரு பூ இது. செடி, கொடி என்று இரு விதங்களிலும் வளரும் ஒரே தாவரம் உலகிலேயே மல்லிகைதான். பூத்துக் கொட்டுவதில் விவசாயிகளின் நண்பனாக இது கருதப்படுகிறது. மல்லிகைக்கொடியை பெரும்பாலும் பூச்சிகள் அரிப்பதில்லை.*

*பெண் தெய்வங்களை பூஜிக்க உகந்த மலராக இது கருதப்படுகிறது. மல்லிகை கொடி வளரும் ஒரு வீட்டில் தரித்திரம் வளராது என்பது ஒரு நம்பிக்கை.*

•

**350** கிலோவுக்கு 300 கிலோதான் பறிக்க முடிந்தது. அதற்கே அந்த குடும்பம் அழண்டு போய்விட்டது. அதை பெட்டியில் அடைத்து வேனில் ஏற்றி சின்னராசுவே ஏர்போர்ட்டுக்கும் ஓட்டிச் சென்றான். ஆனால் அவன் வேன் ஏர்போர்ட்டைத் தொடும் முன்பே விமானம் புறப்பட்டு வானமேறிவிட்டது. வேறுவழியின்றி வேனை அப்படியே ஒதுக்கி திருப்பிக் கொண்டு நல்லூர் நோக்க ஆரம்பித்தான். முகத்தில் ஏமாற்றத்தின் எதிரொலி.

சாதாரணமாக முரட்டு ஆண்மக்களுக்கு ஏமாற்றங்களும் தோல்விகளும் ஆபத்தானவை. அவை அந்த ஆண்களை சாராயம், சீட்டுக்கட்டு என்று திசை திருப்பி அனுப்பிவிடும். சின்னராசுவையும் அன்றைய ஏமாற்றம் அப்படித்தான் செய்தது. போகிற வழியில் இருந்தது பிராந்திக்கடை. வெளியே வேனை நிறுத்திவிட்டு இறங்கி உள்ளே சென்றவனை, சில குடிமகன்கள் மிரட்சியோடு பார்த்து வரவேற்றனர்.

"அண்ணே நீங்களா?"

"ஏண்டா... நான் வரக் கூடாதா?"

"என்னண்ணே... சொல்லி உட்ருந்தா கொண்டுகிட்டு வந்துருப்போமே..."

"பொத்திக்கிட்டு போய் வேலையைப் பாருங்கடா..."

"தப்புதாண்ணே... ஏண்ணே நாங்க என்னென்னமோ கேள்விப்பட்டோமே அதெல்லாம் நெசமா?"

"என்னாத்த நீ கேள்விப்பட்டே?"

"ஊரைவிட்டு..." ஒரு குடிமகன் ஆரம்பிக்கு முன் பளாரென்று அவன் கன்னத்தில் ஒரு அறை.

"எந்த நாயிடா எங்களை ஊரைவிட்டுவிலக்கி வைக்கறவன்? நாங்க உலகத்தை விட்டே அவனை விலக்கி வைக்கறோம் பாக்கறியா?" என்று உதார் பேச்சு வேறு. கூடவே ஒரு பாட்டிலை வாங்கி கடகடவென்று ராவாகவே ஊற்றிக் கொள்ளவும் செய்தான்.

ஒரு ஆஃப், பிறகு இன்னொரு ஆஃப்!

"போதுண்ணே... வண்டில வந்துருக்கீங்க."

"புண்ணாக்கு... ஊத்துடாண்ணா..."

சின்னராசு தண்ணீர் கிணற்றுக்குள் மூழ்கவே தொடங்கிவிட்டான்.

அந்த மினிபஸ் கூரை கொள்ளாத கூட்டத்தோடு வந்தபடி இருந்தது. ஒரு புளியமரத்தடியாகப் பார்த்தும் நின்றது. திபுதிபுவென்று ஒரு கூட்டம் இறங்கி முடிக்கவும் கிளம்பும் நேரத்தில் அந்த வெண்ணிற சேலை உடுத்திய பெண் ஒரு ஜோல்னா பையுடன் ஓடி வந்து ஏறிக் கொண்டாள்.

அவளை சமீபத்தில் பார்த்த பஸ்ஸில் உள்ளவர்கள் சற்று பெருமூச்சுவிட்டார்கள். காரணம்? அவளது இளமையும் எழிலும்... நெக் ஜாக்கெட் போட்டு பாந்தமாகத்தான் இருந் தாள். இருந்தும் பெண்மை பொங்கியிருந்தது. அடிக்கடி



வருகிறாள்... போகிறாள்... ஆனால், யாரென்று தெரிய வில்லை. ஊரில் யாரைப் பார்க்க வருகிறாள் என்றும் தெரிய வில்லை.

பஸ்ஸில் ஒரு பெரிசு கேட்டே விட்டார்.

"தாயி... யாரு தாயி நீ..."

அந்த பெண் அதற்கு ஒரு சின்ன சிரிப்புடன் என் பேர் சின்மயா" என்றாள்.

"சின்மயா... இது என்ன புதுசா இருக்குது."

"பதிலுக்கு சிரித்தாள்.

"நல்லூர்ல யார் இருக்கறா?"

"நீங்க எல்லாரும்தான்..." அவள் பதில் அதிர்ச்சி தந்தது.

"என்னதாயி சொல்றே?"

"உங்களைத்தான் சொன்னேன். நீங்க எல்லாம் நல்லூர் தானே?"

"ஆமா... நாங்க ஒண்ணும் உனக்கு உறவில்லையே..."

"நான் அப்படி நினைக்கலியே..."

"நீ என்ன சொல்றே?"

"எல்லாரும் எனக்கு சகோதரர்கள் மாதிரின்னு சொல்ல வந்தேன்."

"அப்ப நீ..."

"நான் ஒரு கன்னித் துறவி..."

"கன்னித் துறவியா..." பெருசு அதிர்ச்சியைக் கொட்டியது.

"ஆமாம் எங்க இயக்கத்தை இந்த ஊர்ல பரப்புறதுதான் என் நோக்கம்."

"இயக்கமா?"

"இயக்கம்ன உடனே கண்ட கற்பனைல போயிடாதீங்க. எங்க இயக்கம் ஒரு ஆன்மிக இயக்கம். உலகத்துல இருக்கற

ஒவ்வொரு மனித உயிரையும் மேம்படுத்தறதுதான் எங்க நோக்கம்."

"வித்தியாசமா இருக்கே."

"ஆரம்பத்துல அப்படித்தான் தெரியும். ஆனா புரிஞ்சுக்கிட்டா எல்லாம் சரியாயிடும்."

"என்னென்மோ சொல்றியேம்மா... ஆனா உன் இடக்கத்துல இன்னும் யாரெல்லாம் இருக்கா?"

"ஆயிரக்கணக்கான பேர் இருக்காங்க. அதுல நான் ஒருத்தி. கிராமம் கிராமமா போய் எங்க அமைப்பைப் பரப்பறதுதான் என் பணி."

"அதான் தினமும் பஸ்ல வந்துட்டு போவுறியா?"

"ஆமாம்."

"இந்த ஊர்ல அவ்வளவு சுலபத்துல யாரும் சேர்ந்துட மாட்டாங்களே?"

"எல்லா ஊர்லையும்தான்... அதுக்காக பொறுமையை இழந்துட முடியுமா?"

"ஏம்மா... இப்படி மொட்டையா இயக்கம், சேருங்கன்னா எப்படிம்மா. உன் இயக்கத்தோட கொள்கை என்ன... அதுல சேர்ந்தா சேர்றவங்களுக்கு என்ன கிடைக்கும். அதைச் சொல்லலியே?"

"சொல்றேன். நாளைக்கு நான் ஒரு மீட்டிங் போடப் போறேன். அதுக்கு வாங்க... வந்தீங்கன்னா உங்களுக்கு எல்லாத்தையும் விளக்கமா சொல்லுவேன்."

"ஏன்... இங்க சொல்லக் கூடாதா?"

"இல்ல... நான் இறங்க வேண்டிய இடம் வந்துடிச்சு..." என்று அந்தப் பெண் சொல்ல பஸ்சும் நின்றது. அவளும் இறங்கினாள். எல்லோரும் ஒரு புதிரைப் போலத்தான் அவளை எண்ணினர். அவள் சாலையில் இறங்கி தனியாக நடக்கலானாள். இருபுறமும் அரசவையில் சேவகர்கள் நிற்பது போல, சாலையோர புளிய மரங்கள். சுத்தமாக ஆள் நடமாட்டமில்லை. அவளிடமோ துளியும் பயமே இல்லை. சிறிது தூரத்தில் சாலையை ஒட்டி ஒருவழிப்பாதை பிரிந்து பக்கத்தில் உள்ள சிறு குன்றுப் பகுதி நோக்கிப் போனது. அந்தக் குன்றுக்குக் கீழே ஒரு சிறு சிவன் கோயில் இருக்கிறது. அங்கு ஒரு சாமியாரும் பல வருஷமாகத் தங்கி இருக்கிறார். இந்தப் பெண் அனேகமாக அந்தக் கோயிலுக்குப் போய் அங்குள்ள சாமியாருடன்தான் தங்கியிருக்க வேண்டும் என்று தோன்றியது. அவளும் அந்த மண்சாலைப் பிரிவில் கால் வைத்த நொடி அசுர வேகத்தில் சின்னராசு குடிபோதையில் ஓட்டி வரும் வேன் வந்து பக்கத்து மரத்தின்மேல் மோதியது. மோதிய வேகத்தில் அப்படியே அவள் மேலும் விழுந்தது.



அவளிடம் இருந்து ஒரு நீளமான அலறல் சப்தம் மட்டும் வெளிப்பட்டது!

**அ**ப்படியே தலைமேல் கையை வைத்துக் கொண்டு ஒரு ஓரமாய் போய் உட்கார்ந்து விட்டார் தேவர். திரும்பி வரும் வழியில் மினி பஸ்காரன்தான் அந்த விபத்தைப் பார்த்தவன். விஷயத்தை போலீசிடம் அவன் சொன்னதில் சின்னராசுவின் சிதைந்த உடம்பும், சின்மயா என்கிற அந்த பெண்ணின் உடம்பும் ஸ்ட்ரெச்சரில் ஏற்றப்பட்டு மதுரை ஜி.ஹெச்சில் உள்ள மார்ச்சுவரிக்கு கொண்டு போய் விட்டனர்.

தேவர் சிறிது நேரம் கழித்து சுதாரித்துக் கொண்டு மனைவியுடன் ஜி.ஹெச் நோக்கித்தான் ஓடினார். அவர் போவதை ஊரே பார்த்தது. அவர்களில் வாத்தியாரும் இருந்தார். அவருக்கே என்னவோ போலாகிவிட்டது. அவரை சிலர் சூழ்ந்து கொண்டனர்.

"என்ன வாத்தியாரே... என்ன யோசனை?"

"என்னன்னு சொல்ல... தேவருக்கு சோதனை மேல் சோதனை."

"பாவம்யா... ஊர்க்கட்டுப்பாட்டால மச்சினனையே ஏர்போர்ட்டுக்கு அனுப்பியிருக்காரு. ஆனா அவன் போறதுக்குள்ள விமானம் கிளம்பிடிச்சாம். அவ்வளவு பூவும் வேன்லதான் இருக்குதாம்.

"அப்படியே எடுத்துக்கிட்டு போய் அந்த பய பொணத்து மேல கொட்டச் சொல். கூடவே அந்த வெள்ளை சீலைக்காரி வேற! இரண்டு உடம்பும் ஒண்ணுமேலே ஒண்ணு கிடந்ததா சொல்லிக்கறாங்க. அப்படிப் பார்த்தா சின்னராசு ஏதோ எடமடக்கு பண்ணியிருக்கணும்."

"எலேய்... எதையாவது பேசிவெக்காதே. பெரிய இடத்து விசயம். பொறவு நீதான் கிடந்து அடிவாங்கணும்..."

ஊர்க்காரர்கள் வாய் பலமாதிரி பேச ஆரம்பித்துவிட்டது. ஊர் என்றாலே எங்கேயும் எப்பொழுதும் இப்படித்தான் போல் இருக்கிறது.

"வாத்தியார் அங்கே வாயை விடாமல் கதிரவனைப் பார்க்க கிளம்பினார். கதிரவனும் பண்ணையில் கவலையோடு உட்கார்ந்து கொண்டிருந்தான்.

"வாங்க வாத்தியாரே..."

"நான் வர்றது இருக்கட்டும்... எல்லா விஷயமும் தெரியும்தானே?"

"கேள்விப்பட்டேன். மாமா ஒத்தையாளா பூ பறிக்கறதையும் பார்த்தேன். எனக்கே சங்கடமா இருந்துச்சு."

"நாம சங்கடப்பட்டு என்ன பிரயோஜனம்? உங்க மாமாவுக்குத்தான் எதையும் நல்லவிதமாகவே பார்க்கத் தெரியாதே."



"ஆமா... நிஜத்துல என்ன நடந்துச்சு வாத்தியாரே..."

"யாருக்குத் தெரியும். நடந்தது விபத்தா, இல்லை போதைல சின்னராசு ஏதாவது திருகு வேலை பார்த்தானான்னு ஒரு எழவும் புரியல. எது எப்படியோ ஒரு உயிருக்கு இரண்டு உயிர் போயிடுச்சு."

"அது யார் வாத்தியாரே அந்தப் பொண்ணு."

"அது பொம்பள சாமியாராமல...?"

"சாமியாரா?" அதிர்ந்தான் கதிரவன்.

"ஏம்ப்பா... இருக்கக் கூடாதா?"

"பார்த்தா அப்படி தெரியலியே...?"

"பஸ்சுல நம்ம ஆளுங்க போயிருக்காங்களே... அது அப்படித்தான் சொல்லியிருக்குதாம்."

"நம்ம ஊர்ல அந்த பொண்ணுக்கு, அதாவது சாமியாருக்கு என்ன வேலை?"

"அது ஏதோ ஒரு இயக்கத்துல இருந்துருக்குபோல... இனிதான் பிரச்சாரம் பண்ண இருந்துருக்கு. அதுக்குள்ள விதி அதை இப்படி அள்ளிக்கிட்டு போயிடிச்சு..."

"சரி... மாமா குடும்பத்துமேல இருக்கற ஊர்க்கட்டுப் பாட்டை எடுத்துடுவோமா?"

"அவசரப்படாதே... அவர் தப்புக்கு அவர் அனுபவிக்கறாரு. ஊரோட சகாயம் இருந்திருந்தா இப்படி ஆயிருக்காதுன்னு அவர் நினைக்க ஒரு சந்தர்ப்பம் இருக்குல்ல..."

"இல்ல வாத்தியாரே... மாமா அப்படி எல்லாம் பாசிடிவா யோசிக்க தெரிஞ்சவரே கிடையாது. இந்த நிமிஷம் ஊரே அவருக்குப் பகையாயிருக்கும். முந்தியாச்சும் என்மேலே மட்டும்தான் பகை உணர்ச்சி இருந்துச்சு. இப்ப மொத்த ஊரும்ல பகையாகிடிச்சு."

"அதுக்கு என்ன பண்ண? அவருல்ல இது பத்தி யோசிக்கணும்." வாத்தியார் கதிரவனுக்கு ஒரு மாதிரி பிரேக் போட்டுவிட்டு கிளம்பினார்.

**ஜி.ஹெச்! மார்ச்சுவரி...**

தேவரை நன்றாகவே அலையவிட்டனர். முகத்தை வைத்தும், மார்ச்சுவரி பக்கம் அலைவதை வைத்தும் கறுப்பு வண்டிக்காரர்கள் தேவரை நெருங்கி "பொணத்தைக் கொண்டு கிட்டு போவணுமா... சொல்லுங்க நம்ம வண்டி இருக்கு.." என்று நைக்க ஆரம்பித்துவிட்டனர்.

அவர் பார்க்க மார்ச்சுவரிக்குள் இடம் கொள்ளாதபடி வெள்ளைத் துணியால் சுற்றப்பட்ட சடலங்கள் அங்கங்கே உடம்புக்குள் கிடக்க, அதை மார்ச்சுவரி ஸ்வீப்பர்கள் சாதாரணமாக வாசற்படியைத் தாண்டுவது போல தாண்டித்தாண்டி சென்றபடி இருந்தனர்.

மார்ச்சுவரி டாக்டர் முகம் கூட களையாக இல்லை. கொஞ்சம் போட்டிருந்தார். பிணத்தைக் கேட்டு யார் வந்தாலும் ஒரு பிரிஸ்க்ரிப்ஷனைக் கொடுத்து வெளியே மெடிகல் ஷாப்பில் டெட்டால் சோப், பாண்டேஜ் துணி அது இது என்று ஒரு பத்து பதினைந்து ஐட்டங்களை வாங்கி வரச் சொல்லி... அப்படி வாங்கி வந்து தந்த ஐட்டம் அப்படியே பின்வழியாக அந்த மெடிகல் ஷாப்பிற்கே போனது. இது தெரியாத கழுகாசலத் தேவரும் அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுத்து அவர்பங்குக்கு அவரும் ஏமாந்தார்.

பின்னர் கையெழுத்து வாங்கிக் கொண்டு சின்னராசுவுடன் அந்த பெண் சடலத்தையும் சேர்த்தே ஒப்படைத்தனர். தேவருக்கு பதைத்துப் போனது.

"என் மச்சினன் சடலத்தை மட்டும் தாங்க... கண்ட சிறுக்கி சடலத்துக்கு காரியம் பண்ண நான் யார்?"



என்று ஒரு எகிறு எகிறினார். அவர்களோ இரண்டு பிணத்தையும் தள்ளிவிட்டு கழித்துக்கட்டுவதிலேயே குறியாக இருந்தனர். தேவர் மனைவி மருதாயி, தேவரை சமாதானம் செய்தாள்.

"பேசாம வாங்க... போற வழியில அந்தப் பொண்ணு உடம்பை எங்கையாவது புதைச்சுட்டுப் போவோம்..." என்றாள். தேவருக்கு புரியவில்லை.

"என்னங்க யோசனை... இன்னேரம் நம்ம உறவுக்காரங்க நம்ம வீட்டுக்கு எப்படி எல்லாம் திரண்டு வந்து நின்னுக் கிட்டிருப்பாங்க தெரியுமா?"

கேட்கும்போதே மருதாயியின் இமைகளிலிருந்து கண்ணீர்க் கட்டிகள் உருண்டன. ஆனால் மார்ச்சுவரியில் பிரச்சினை வேறுவிதமாக இருந்தது.

வேன் விபத்து பிணங்கள் இரண்டு... இரண்டும் கழுகாசலத்தின் வகையறா என்று அங்கு எண்ட்ரி ஆகிவிட்டது. மார்ச்சுவரி ஸ்வீப்பர் கூட தேவரை நெருங்கி வந்து காதைக் கடித்தான்.

"சாமி... என்ன யோசனை? அந்த பொட்டச்சி பொணம் என்னது இல்லேன்னா, வேறு யாருதுன்னு கேள்வி வரும். அப்புறம் அது எப்படி வேன் ஆக்சிடெண்ட்ல வந்துச்சினு வரும்... போலீஸ்காரங்க இதான் சாக்குன்னு உங்களை குடைய ஆரம்பிச்சுடுவாங்க..."

"அட என்னப்பா நீ ஒண்ணு. யாருன்னே தெரியாத ஒருத்தி டெட்பாடியை நான் எதுக்குய்யா வாங்கணும்? அப்புறமா அந்த பாடிக்கு உரியவங்க வந்தா..."

"அப்ப இங்கேயே கிடக்கட்டும்கறீங்களா?"

"இதபார்..." எனக்கு என் மச்சினன் உடம்புதான் கணக்கு. அவன் என் வலது கை மாதிரி இருந்த பய. அவன் போனதுக்கத்துல இருக்கேன். கண்ட கழுத விசயத்தைப்

பேசி எனக்கு எரிச்சல் மூட்டாதே... ரொம்ப பேசுனே... அப்புறம் நான் என் பவரைக் காட்ட வேண்டிய வரும். உன்கிட்ட எல்லாம் நான் பேசறதே தப்பு..."

தேவர் பதிலுக்கு ஒரு வெடி வெடிக்க, அவன் பேசாமல் திரும்பிப் போனான். இறுதியாக மச்சினன் சின்னராசு உடம்பை மட்டும் வாங்கிக் கொண்டு ஊருக்குக் கிளம் பினார்.

பிணம் டிக்கியில் கிடக்க, காருக்குள் தேவரும், மருதாயி யும் சிலைகளைப் போல பேசாமலே வேந்தனர். மருதாயி அழுது அழுது முகம் வீங்கிப் போயிருந்தது. தேவர் வரையில் அவர் உறைந்து விட்டிருந்தார். வெடிக்கப் போகும் ஒரு எரிமலை வெடிக்கும் முன் வரை அமைதியாக இருக்கின்ற மாதிரிதான் தெரிந்தது.

நல்லூருக்குள் கார் நுழையவும் அங்கங்கே தீவுகளாக தேங்கி நின்று அவரை ஊர் மக்கள் பார்த்தனர். சாதாரண மாக கல்யாணத்துக்கு வரும் கூட்டத்தை விட சாவுக்கு வரும் கூட்டம் அதிகமுள்ள ஒரு ஊர் அது. அதிலும் விபத்து என்றால் சுற்று வட்டாரமே முண்டாசு கட்டிக் கொண்டு முன்பாக்கெட்டில்சீட்டுக் கட்டுடன் கிளம்பி வந்துவிடும். சாவு வீட்டு முன்கூட ஒரு ஊளை அழுகை அழுது விட்டு அப்படியே அந்த வீட்டார் செலவில் சாராயமோ, பிராந்தியோ வாங்கிக் குடித்து விட்டு வெளியே குந்தி ஆட்டம் பார்க்க ஒரு கோஷ்டி உட்கார்ந்துவிடும். செம்பட்டி தங்கையன் குழுவின் குத்தாட்டம் என்றால் அதற்கு ஒரு தனி கூட்டமே உண்டு. தப்பட்டை கிழிந்து போகும். அந்த அளவுக்கு அதைத் தட்டி தாளம்போட்டு காலில் சலங்கையுடன் தங்கையனும் அவனது இணையான சகுந்தலாவும் கிளப்பிக் கொண்டு ஆட ஆரம்பித்தால் உள்ளே பிணம்கூட எழுந்து நின்று ஆட்டம் போடப் பார்க்கும்.



சாதாரண கூலி வேலைக்காரன் வீடாக இருந்தாலும் இதுதான் கணக்கு. வட்டிக்கு வாங்கியாவது செலவழிப் பார்கள். தேவர் போல ஊரின் பெரிய கை என்றால் எவ்வளவு கூட்டம் கூட வேண்டும்?

ஆனால் கழுகாசலத் தேவர் வீட்டு முன் ஏதோ நாலு பேர் நின்றபடி இருந்தனர். தேவருக்கும் கட்டுப்பாடு ஞாபகத்துக்கு அப்பொழுதுதான் வந்தது. உடம்பை இறக்கி உள்ளே கொண்டு செல்லவே மிகவும் சிரமமாகி விட்டது.

மெல்ல மெல்லத்தான் அதன்பின் ஒவ்வொரு விசயமும் நடக்க ஆரம்பித்தது.

"தேவர் வாசல் திண்ணையில் முழங்காலை மடக்கி கொண்டு மௌனமாக நடப்பதை எல்லாம் கவனித்தவராக அப்படியே அமர்ந்து விட்டார்.

சின்னராசுக்கு பிராந்தி விற்ற கடைக்காரன் ஒரு ரோஜாப்பூ மாலையுடன் பம்மிப் பம்மி வந்தான். தேவரைப் பார்க்கவே கூசிக் கொண்டு, "எவ்வளவோ சொன்னேன்... கேக்கலை. மூணு ஃபுல் அடிச்சுட்டு வேனையும் கிளப்பினா அது எப்ப டிய்யா தரைல ஓடும்?" என்று கேட்டபடியே வெள்ளை மூட்டையாக கிடந்த சின்னராசுவின் உடம்பின் மேல் ரோஜா மாலையை இதழ்கள் உதிரப் போட்டுவிட்டு அப்படியே பின்வாங்க ஆரம்பித்தான்.

பூ மார்க்கெட் ஏஜெண்ட்டும் காரில் வந்து இறங்கினார். வரும்போதே முணுமுணுப்பு.

"தெருவுக்குள்ள கார் நுழைய முடியாது. அம்புட்டு கூட்டமிருக்கும்னு நினைச்சுக்கிட்டு வந்தா யாரையும் காணலியே... பெரியவர் தேவையில்லாம ஊரைப் பகைச்சுக் கிட்டார்னுதான் தோணுது..." என்றவர், தேவரை நெருங்கி கையை இழுத்துப் பிடித்து ஒரு இதமான வருடலைக் கொடுத்தவராக, "நேத்து சரக்கு வராதப்பவே ஏதோ

திக்கன்னு பூகம் பண்ணிட்டேன். ஊருக்குள்ள வரவும்தான் விசயம் தெரிய வந்துச்சு. உங்க மருமவப்பய உங்களை இப்படி கட்டம் கட்டுவான்னு நானே எதிர்பார்க்கலை..." என்றார். தேவர் எந்த எதிரொலியையும் காட்டவில்லை. மௌனமாகவே அமர்ந்திருந்தார். அந்த மௌனம் ஏஜெண்ட்டை என்னவோ செய்தது. கெடிகாரத்தைப் பார்த்தார். மணி ஐந்தாகி விட்டிருந்தது. இன்னேரம் இன்றைய தினத்துக்கான பூக்கள் பறிக்கப்பட்டு பெட்டி கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், முதல்நாள் பூவே விமானம் ஏறவில்லை. இதில் இன்றைய தினம் பற்றி யோசிக்கவே முடியாது என்றுதான் தோன்றியது. ஆனால் இப்படிப்பட்ட சமாதானங்களை சிங்கப்பூர் பார்ட்டியிடம் கூற முடியுமா?

அவர்களெல்லாம் இந்தக் கடை இல்லை என்றால் அந்தக் கடை என்று போய்விடும் வியாபாரிகள். ஏஜெண்ட் மனதில் சாவு வீட்டு துக்கத்தை விட, ரோஜாத் தோட்ட துக்கம் புரட்டிப் புரட்டிப் போட்டது. மெல்லக் கழண்டவர் தேவரைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தார். தேவரிடமும் அழிச்சாட்டியத்துக்கு ஒரு மௌனம்.

இப்படி எல்லாம் மௌனமாக அமருகின்ற மனிதரே இல்லை அவர் எனும்படியாக ஒரு மௌனம். அதேசமயம் ஊருக்குள் பஞ்சாயத்து எடுபிடியின் தமுக்கு சப்தமும் கேட்டது. 'இதனால எல்லாருக்கும் உடனடியா சொல்லிக்கற சேதி என்னதான் இந்த நொடில இருந்து நம்ப முன்னாள் பஞ்சாயத்துத் தலைவர் மேல இருந்த அம்புட்டு கட்டுப்பாடும் நீக்கப்படுவது. அவர் குடும்பத்துல சாவு விழுந்துட்ட இந்த துக்கமான தருணத்துல அவருக்கு பக்கபலமா நின்னு எல்லாரும் நல்லது செய்யச் சொல்லி பஞ்சாயத்தார் உத்தரவு...' என்றது அந்தக் குரல். அதன் எதிரொலியாக முதல் ஆளாக கதிரவனே கையில் ஒரு பெரிய மாலையுடன் வந்து கொண்டிருந்தான். தேவரும் நிமிர்ந்து பார்த்தார்.



கதிரவன், வீட்டு வாசலில் மாலையோடு வந்து நின்றவனாக தயக்கத்துடன் பார்த்தான். தேவர் அடுத்து என்ன செய்வார் என்று ஒருவருக்கும் விளங்காத கனமான புதிர்ப் பொழுது அது... நிச்சயம் எழுந்திருந்து போய் கன்னத்தில் ஒரு அறை கதிரவன் கன்னம் பழுக்கப் போகிறது. இப்படித் தான் எல்லோரும் நினைத்தார்கள்.

'எந்த மூஞ்சியை வெச்சுக்கிட்டுடா இங்க வந்தே? நாயே... எல்லா விசயத்துலையும் எனக்கு எதிரா நடந்து, என் வியாபாரத்தையும் கெடுத்து குட்டிச்சுவராக்கிட்டு இப்ப துக்கம் கேக்க மாலையோடையா வந்து நிக்கற?"

இப்படித்தான் அவர் கத்தப் போவதாக எல்லோரும் எண்ணினார்கள். ஆனால் ஒரு அதிசயம் நடக்க ஆரம்பித்தது தேவர் கண்ணீர் மல்க நிமிர்ந்தார். கன்னக்கதுப்புகளில் ஒருவித துடிப்பு... மருதாயியும் எட்டிப் பார்த்தாள். வாசற்படி அருகிலேயே நின்றபடி படபடத்தாள்.

"கதிரவாஆஆஆ" தேவர் உரக்க குரலொடுத்தபடி உடைந்து போன குரலோடு அவனை நோக்கி ஓடினார். அப்படியே மார்போடு கட்டிக் கொண்டார். விசும்பி விசும்பி ஒரு குழந்தை போல அழத்தொடங்கினார்.

அவரது ஆணவம், செருக்கு, முரட்டுத்தனம் என்று எல்லாமே உதிர்ந்து விழுந்து அவர் மட்டும் அவராக நிற்பது போலவேதான் பார்ப்பவர்களுக்கெல்லாம் தோன்றியது.

"கதிரவா... நான் செஞ்சது தப்புத்தாண்டா! அதுக்கு நீ செஞ்சதும் சரிதான்... உன்னை ஒரு வார்த்தை என்னால குத்தம் சொல்ல முடியாது... பெருந்தன்மையா இப்ப கட்டுப்பாட்டை விலக்கிக்கிட்டு துக்கத்துல பங்கு எடுத்துக்க வந்துருக்கே பாரு... நெசமா நீ ஒரு பெரிய மனுஷன்தான். உண்மையில பிரசிடெண்டா இருக்கற தகுதி உனக்கு மட்டும்தாண்டா இருக்கு. எனக்கு இல்லை. என்னாலதான் என் மச்சினன் உயிர் போயிருக்குது. நான் ஒழுங்கா

இருந்திருந்தா எனக்கு ஒரு பிரச்சினையும் வந்திருக்காது. ஆனா, நான் அப்படி இல்லாம போயிட்டேன். அதுக்கு பெரிய விலையையும் கொடுத்துட்டேன்...” என்று தேவர் ஒரு பாட்டம் புலம்ப ஆரம்பித்து விட்டார். எல்லோரிடமும் திகைப்பு. மருதாயியே வாயடைத்துத்தான் போனாள்.

கதிரவனும் நெகிழ்ந்து போனான். அதன் பிறகு மளமள வென்று துக்க காரியங்களைப் பார்க்கத் தயாராகி விட்டான். பாண்டியராசத் தேவருக்கும் தகவல் போயிற்று. அவரும் ஒரு பகை தேரான சந்தோஷத்தோடு அதே சமயம் சின்னராசு மரணத்துக்கான துக்கத்தோடு, துக்கம் விசாரிக்க கிளம்பிவர ஆரம்பித்தார்.

சாவுச் சீர் என்றே ஒரு கணக்கு இருக்கிறது. அதில் ஒன்றில் கூட குறை இல்லாதபடி பார்த்துக் கொண்டார். எரிச்சநத்தம் பிச்சைக்கண்ணுவின் சாவு மேளம், காதக்கிணறு ஒச்சாத் தேவரின் சாவுப் பிரசங்கம் என்று தனியாக அவர் ஒரு ஏற்பாடு செய்ய, நல்லூரே அந்த சப்தத்தில் குலுங்கிப் போனது.

சின்னராசு சாவு நரகாசுரன் சாவு போல அமைந்து விட்டது. நரகாசுரனால் தீபாவளி வந்தது. சின்னராசுவால் நல்லூர் ஒன்றாகி விட்டது.

ஆனால், தமிழ் வாத்தியார் பெரியசாமித் தேவர் மட்டும் இந்த மாற்றம் எதையும் நம்பவேயில்லை.

“கழுகாசலம் பத்தி இவங்க யாருக்கும் சரியா தெரியலை. அவன்லாம் திருந்தற மனுஷனே இல்லை... ஊரை எதிர்த்து வாழ முடியாதுங்கறத புரிஞ்சுக்கிட்டு நாடகம் போட்றான். ஒண்ணு மட்டும் நிச்சயம்... கதிரவனை அந்த ஆள் சகுனி மாதிரிகூட இருந்தே கழுத்த அறுத்து, பழிக்குப் பழி வாங்கப் போறான்...” என்றுதான் முணுமுணுத்தார்.

# 5

‘மலர்களில் மகிழம்பூ மிக வித்தியாசமானது! மிகச் சிறிய இந்தப்பூ மரத்தில் பூக்கும் ஒரு பூவாகும். மகிழ மரம் அவ்வளவு சீக்கிரம் ஒரு இடத்தில் வளர்ந்து விடாது. அப்படி வளர்ந்து விட்டாலோ ஐநூறு அறுநூறு ஆண்டு வரை அது இருக்கும். மகிழ மரத்தின்கீழ் பகல் பொழுதில் ஒருவர் படுத்தால் அவருக்கு சுவாசக் கோளாறு நீங்கும் என்பது அந்தநாள் நம்பிக்கை. மகிழ மரத்து மலர் மகரந்தங்கள் மிகமிக வாசமுள்ளவை. பூக்களைப் பொறுக்கி எடுத்து வந்து நாலில் கோர்த்து மாலையாக கட்டிப் போடுவார்கள். சரஸ்வதிக்கு இந்த மாலை மிகவும் பிடித்தமான மாலையாகும். இரவில் மகிழமரக் காற்றை தூர இருந்து அனுபவிக்க வேண்டும். நல்ல கற்பனை வளம் உள்ளவர்களுக்கு இதன் வாசம் மிகவும் உறுதுணையானது.

மனதைத் தொட்டு ஏதோ ஒரு வகையில் மகிழ வைக்கும் ஆற்றல் இதற்கு இருப்பதால்தான், இதை மகிழம்பூ என்றார்கள். மகிழ மரமும், தெய்விக அருள் ததும்பும் இடங்களில்தான் நின்று வேர் பிடித்து வளரும்!

ஒருபுறம் சாவு காரியம் நடந்து கொண்டிருக்கும் போதே கதிரவனின் பண்ணையாட்கள் ரோஜாத் தோட்டத்தில் திபுதிபுவென்று இறங்கி பூத்துக் கிக்கும் அவ்வளவு ரோஜாக் களையும் பறிக்கத் தொடங்கி விட்டனர். நிறையப் பூக்கள் இதழ்களை உதிர்த்து விட்டன. தேனீப் பட்டாளம் வேறு... புதிதாக பூப்பறிக்க இறங்கியவர்களை ஆங்காங்கே தேனீக் கூட்டம் கொட்டி அலற வைத்தது. இருந்தும் தினம் பூக்கள் பறிக்கப்பட்டு சிங்கப்பூரை அடைந்தே தீரவேண்டும் என்று கதிரவன் கட்டளையாகவே கூறிவிட்டான்.

சின்னராசுவின் சாவினால் வந்த இழப்பு போதும். சிங்கப்பூர் ஆர்டரே பறிபோனது என்கிற அந்த இழப்பு வேண்டவே வேண்டாம் என்பதுதான் கதிரவன் எண்ணம்.

“எம்புட்டு கஷ்டப்பட்டு சிங்கப்பூர் ஆர்டரைப் பிடிச்சிருப் போம். அதைபோய் சாவு வாழ்வுங்கற பேரால விட்டுப்

புடறதா? எப்பவும் தொழில்தான் முதல்ல... தொழில் போகத்தான் மத்த எல்லாம்..." என்று பொறுப்போடு அவன் பேசியது தேவரைத் திக்குமுக்காட வைத்து விட்டது!"

தோட்டத்தில் பூப்பறிக்கும் போது இருட்ட வேறு ஆரம்பித்துவிட்டது. அதனால் என்ன என்று பெட்ரோ மாக்ஸ் விளக்குகளை வாடகைக்கு வாங்கி வந்து தலையில் சுமந்தபடி பலர் நிற்க, அந்த வெளிச்சத்தில் ரோஜாக்கள் பறிக்கப்பட்டு பின் பெட்டியிலும் அடைக்கப்பட்டன. தூரத்தில் புளிய மரத்தடியில் ஒரு ஸ்டவ்வைக் கொண்டு வந்து வைத்து அவ்வளவு பேருக்கும் காபி, டீயும் தயாரிக்கப்பட்டது. சிவகாமிதான் மேற்பார்வை! பார்த்துப் பார்த்து செயல்பட்டுக் கொண்டிருந்தாள்.

தூரத்தில் தேவர்வீட்டு முன் சாவு மேளத்தின் சப்தம்...

பூவைப் பறித்து, பெட்டியில் அடைத்து, வாடகை வேனில் போட்டுக் கொண்டு இரவு ஒன்பது மணிக்கு புறப்படும். விமானத்தில் ஏற்றுவதற்காக எட்டு மணிக்கு விமான நிலையம் சென்றுவிட தோதாக கதிரவனே ஒரு வேனுடன் வந்து விட்டான். அவ்வளவு பெட்டியும் வேனில் ஏற, சென்னை மார்க்கெட்டுக்கென மூங்கில் கூடைகளும் உடன் ஏறின. சராசரியாக 400 கிலோ பூ! தோட்டத்தில் இருந்து பூக்களை வேனில் ஏற்றிக் கொண்டு கிளம்பிய கதிரவனை ஒரு தலைவனைப் பார்ப்பது போல பார்த்தாள்.

"என்ன சிவகாமி... என்னமோ காணாததைக் கண்டுகிட்ட மாதிரி பாக்கறே..."

"என் வரைல காணாததைக் கண்ட மாதிரி மாதிரிதான்..."

"எப்படி?

"எப்ப எப்படி நடந்துக்கணும்கறதுல உங்களை அடிச்சுக்க ஆள் இல்லை. உங்க மாமா தப்பு செய்தப்போ தைரியமா தண்டனை கொடுத்தீங்க. அப்படியே அந்த தண்டனையை



பெருந்தன்மையா தளர்த்தி அவர் திருந்தவே காரணமா யிட்டீங்க.."

"இப்படி என்னைப் பத்தி யோசிக்கிறத விடு. நம்ம மேல நமக்கே ஒரு பெருமை வந்துட்டா, அப்புறம் சரியா நடந்துக்க முடியாது. போய் அடுத்த வேலையைக் கவனி..."

கதிரவன் பதில் சொன்ன கையோடு வேனுக்குத் தாவி அதைக் கிளப்பினான் நல்ல வேகம்! அவனது வேனும் மறைய, ரோஜாத் தோட்டத்தில் வேலை பார்த்த அவ்வளவு பேரும்கூட புறப்பட்டுச் சென்றுவிட சிவகாமி மட்டும்தான் தோட்டத்தில் இருந்தாள்.

தேவர் தோட்டத்தை ஒரு பெரிய சதுரத்தில்தான் அமைத்திருந்தார். சுற்றிலும் முள்வேலி உள்நுழைவு பெரிய மெயின் கேட். கேட்டை ஒட்டி ஒரு குடிசை. குடிசையில் தான் காவல்காரன் சோமன் தங்கியிருப்பான். அவன் இப்போது சாவு வீட்டில் இருந்தான். சாவு வீட்டிலும் 'என்னடி ராக்கம்மா' வை நாதஸ்வரத்தில் ஒரு பிடி பிடித்துக் கொண்டிருந்தான் செம்பட்டி தங்கையன்.

இதெல்லாம் அந்தக் காலத்து பழக்கவழக்கங்கள். பொதுவாக சாவு வீடு என்பது தூரத்தில் அமைதி கட்டிக் கொண்ட ஒரு இடமாக அழுகையும், கூக்குரலுமாகத்தான் எங்கும் இருக்கும். ஒரு சாவின் காரணமாகக் கூட அழுகையும் கூக்குரலும் ஒரு இடத்தில் பெரிதாகி யார் மனதிலும் ஒரு பெரிய மூட்டத்தை உருவாக்கி விடக்கூடாது என்பதற்காகத்தான் அத்தனை ஆர்ப்பாட்டம்! உளவியல் ரீதியாக அந்த ஆட்டமும் பாட்டும் எல்லோர்க்குள்ளும் எவ்வளவோ வித உணர்வுகளை உருவாக்கும்.

சாவு வீட்டில் இன்னொரு சங்கடமும் உண்டு. பிணத்தைப் பார்க்கும் ஒவ்வொருவரும் அந்தப் பிணமாய் தங்களை ஒரு விநாடி நினைத்துப் பார்த்துக் கொள்வார்கள். அது மட்டுமல்ல... உயிர்தான் போய் விட்டதே என்று

பிணத்தை ஒரு குப்பையாகக் கருதி தூக்கி எறிந்து விடாமல், சுற்றி அமர்ந்து அழுவது என்பது இறந்து விட்ட அந்த மனிதனுக்காக அல்ல... உயிரோடு இருக்கும் மனிதர்களுக்குத்தான்... பிணத்தை மட்டும் அலங்காரமாகக் கருதாவிட்டால் அந்தப் பாதிப்பே மனிதன் இறப்பைக் கண்டு அஞ்ச பெரிதும் காரணமாகி விடுகிறது. இவ்வளவு கோலாகலமாக பிணங்களை மதித்து பூப்பல்லக்கு அது இது என்று ஆடித் தீர்க்கும்போதே வீட்டில் இருக்கும் கிழடுகள் தங்கள் சாவை எண்ணி நடுங்கியபடியே இருக்கின்றன. இதெல்லாம் இல்லாவிட்டால் அந்த மன பாதிப்பை எண்ணியே பார்க்க முடியாது என்பதுதான் நிதர்சனம்!

இதெல்லாம் சிவகாமிக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இளமையில் இருப்பதால் மரணம் பற்றிய பயமும் இல்லை. எனவே அந்தச் சாவு மேளம் அவளுக்கு எரிச்சலாக இருந்தது. கதிரவன் வந்தவுடன் பிணத்தைத் தூக்கி விடுவார்கள். அதன் பிறகு நல்லூரில் நிரந்தரமாக ஒரு அமைதியைப் பார்க்கலாம் என்று எண்ணும் போது மட்டும் கொஞ்சம் மகிழ்ச்சியாக உணர்ந்தாள். அப்படியே மெயின் கேட்டை நோக்கி நடக்கலானாள். அப்பொழுதுதான் அந்த அழுகைச் சப்தம் கேட்க ஆரம்பித்தது.

யாரோ ஒரு பெண்ணின் அழுகுரல்!

அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருவிதமாக இருந்தது. சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். அடர்வான ரோஜாத் தோட்டம் கண்ணைக் கரித்தது. கலைந்த தலையோடு குட்டிக் குட்டி அரக்கர்கள் வரிசையாக அணிவகுத்து அமர்ந்து கொண்டு இருக்கிற மாதிரி இருந்தது. சப்தம் வரும் திசையை கழுத்தைத் திருப்பி கண்டுகொண்டவளாக நடந்த சிவகாமி ஒரு இடத்தில் ஒரு ரோஜாச்செடியில் பெண்ணொருத்தி ரோஜாப்பூவைப் பறிப்பதை மெல்லிய இருளில்



அவளது வெண்ணிற சேலை காரணமாக உணரவும், கொஞ்சம் பகீரென்றது.

"யாரது?" சிவகாமியிடம் இருந்து வேகமான கேள்வி. ஆனால், அந்தப் பெண் பூவைப் பறித்தவளாக அப்படியே எதிர்த்திசையில் நடக்கத் தொடங்கினாள்.

"ஏய், யார் நீ...? யாருன்னு கேக்கறேன்ல..."

என்று அவளை நோக்கி ஓடவும், ஒரு புகை மண்டி நிற்பதை போலத்தான் இருந்தது. ஒரு வினாடி குழப்பமாகக் கூட இருந்தது. தான் பார்த்தது ஒரு பெண்ணையா... இல்லை ஏதாவது பிரமையா? மனதுக்குள் கேள்வி ஓடி முடிக்குமுன் சதங்கை சப்திக்க இரு கால்கள் ஓடுகிற மாதிரி கூட இருந்தது. அவ்வளவுதான்... அதன் பின் நிசப்தம்!

**வி**மான நிலையத்தில் பூப்பெட்டிகளை இறக்கி உரிய முறையில் அனுப்பி விட்டு 'அப்பாடா' என்று பெருமூச்சுடன் வந்தான் கதிரவன்.

அண்ணாந்து பார்த்தான்.

நட்சத்திர வானில் மினுமினுப்பு. காற்றும் சில்லென்று வீசியபடியே இருந்தது.

சட்டை பட்டனை அவிழ்த்து மார்பில் காற்று படச் செய்து, அந்த சில்லிப்பை ஆழ்ந்து அனுபவித்தான். அப்படியே வேன் நோக்கி நடந்தான். பொழுது விடிந்ததில் இருந்தே ஒரே டென்ஷன். எந்த, விஷயம் எப்படி திரும்பும் என்பது தெரியாத குழப்பமாய் இருந்தது. அவ்வளவும் லேசாகி, இனி நல்லகாலம் மட்டுமே என்கிற மாதிரி ஒரு நம்பிக்கை ஏற்பட்டது. வேனைக் கிளப்பினான். கொஞ்சம் பழைய வேன்... அவனை சற்று சங்கடப்படுத்தியது. ஸ்டார்ட் ஆவதே பெரும்பாடாக இருந்தது. ஸ்டியரிங்கை வளைத்துத் திருப்பும்போது மாட்டு வண்டி ஒன்றை ஓடிப்பது போல் ஒரு பிரமை தட்டியது. வேனும் சீற ஆரம்பித்தது.

பெருங்குடி முக்கில் நிறைய கடைகள் தெரிந்தன. வேனை ஓரம்கட்டி நிறுத்தினான். பெப்ஸி, கோக் என்று குளிர் பானங்கள் ஃப்ரிட்ஜில் இருந்து கண்ணில் பட்டன. அந்த மேல்நாட்டு தயாரிப்புகளை அப்படியே மறுதலித்து விட்டு எலுமிச்சம்பழ சர்பத் போடச் சொல்லி ஒரு கிளாஸ் குடித்து முடித்தான். சற்றுத் தெம்பாக இருந்தது.

திரும்பவும் வேனில் ஏறினான். வேனும் மெயின் ரோடில் ஓடத் தொடங்கியது. இருபுறமும் மரங்கள் தழுவத் தொடங்கின. வேனில் வெளிச்சம் ஒரு கற்றையாக முன் விழுந்து வழிகாட்டியபடி இருளை விரட்டிக் கொண்டே போனபடி இருந்தது. கச்சிதமாக முதல் நாள் இதே நேரத்தில் சின்னராசு வேனில் வந்து ஆக்சிடெண்ட் ஆன அந்தப் புளிய மரம் கண்ணில் பட்டது. வேன் மோதிய வேகத்தில் அதன் ஒரு பக்க கிளை முறிந்து கிடந்தது. அதைக்கூட அப்புறப்படுத்தவில்லை. சரக்கோடு போகும் போது நின்று கவனிக்க நேரமில்லை. திரும்பும்போது அந்த இடம் கதிரவனைத் சுண்டி இழுத்தது. ஒரு ஓரமாக வேனை நிறுத்தியவன் அப்படியே அமர்ந்த நிலையில் அங்கிருந்தே மரத்தைப் பார்த்தான். ஒரு உயிருக்கு இரு உயிரை வாங்கிய அதே மரம்!

மரத்தை ஒட்டி கரட்டை நோக்கிச் செல்லும் ஒத்தையடிப் பாதை. ஓரளவு அதைக் காண முடிந்தது. பாதை மேல் சுமாரான நிலா வெளிச்சம்! அந்தப் பாதை மேல் இனி இரவு நேரத்தில் யாருக்குமே நடந்து போவதற்கு தைரியம் இருக்காது. சாதாரண நாளிலேயே அந்தப் பக்கமாக யாரும் அவ்வளவாகப் போக மாட்டார்கள். கரட்டுசாமியார் தான் எப்பொழுதாவது அந்தப் பக்கம் வருவார். யாரோடும் எதுவும் பேசமாட்டார். கையில் ஒரு பெரிய கம்புடன் அவர் வரும் விதமே அலாதியாக இருக்கும். கரட்டின் மேல் உருண்டு, திரண்ட விதம் விதமான பாறைகள். அவைகளில்



ஏதாவது ஒன்றில் மேல் அமர்ந்து கொண்டு சிறிது நேரம் தவம் செய்வார். அப்பொழுது அவரைப் பார்க்க வித்தியாசமாக இருக்கும். சிலருக்கு பயமாகக் கூட இருக்கும். அதெல்லாம் கதிரவனுக்கு ஞாபகத்துக்கு வந்தது. நெடுநேரம் அப்படியே பார்த்தபடி நின்றவன், பார்த்தவரை போதும் என்றாகி திரும்பவும் வேனை ஸ்டார்ட் செய்தான். மனது பாரமாகி விட்டது. 'பாவம் சின்னராசு' என்றும் ஒரு பச்சாதாபம் உருவாகிறது. என்ஜின் கியர் மாற்றத்தால் பெரிதாக சப்தமிட, ஆக்சிலேட்டரை மிதித்தான். வேனிடமும் வேகம் அதிகமானது. கறுத்த தார்ச்சாலையில் வெளிச்ச விழுதுகள் பாய்ந்து வழியைக் காட்டத் தொடங்கின. சிறிது தூரம் தான் போயிருப்பான். சாலை ஓரமாக யாரோ ஒருவர் நடந்து போய்க் கொண்டிருந்தார். அந்த இரவில் அப்படி ஒருவர் போவது என்பது கதிரவனுக்கே கொஞ்சம் இடிக்கும் ஒரு விஷயம்தான். ஊர்க்காரராக இருந்தால் நிறுத்தி ஏற்றிச் செல்லலாம் என்றும் எண்ணியவன், அவரைக் கடந்த நிலையில் வேனை நிறுத்தி விட்டு அப்படியே நின்றான். அவர் பக்கவாட்டில் கடக்கும் போது ஏறிக் கொள்ளச் சொல்லவும் தயாராகி விட்டான். ஆனால், அவர் வந்த மாதிரி தெரியவில்லை. சில அடிகள் கடந்துதான் வேனை நிறுத்தியிருந்தான்.

இன்னுமா அவர் வரவில்லை?

மெல்ல எட்டிப் பார்த்தான். யாரையும் காணவில்லை... ஆச்சரியமாகி விட்டது, அப்படியானால் சில நொடிகள் முன் பார்த்த அந்த மனிதர்... இறங்கிப் பார்க்கலாமா என்றும் தோன்றிற்று. வேண்டாத வேலை என்றும் உள்ளுணர்வு சொன்னது. ஒரு இனம் புரியாத குறுகுறுப்புத் தொற்றிக் கொண்டு பிராண்ட ஆரம்பித்து விட்டது. வேனைக் கிளப்பினான்.

# 6

*மருக்கொழுந்து!*

*மலர் ஜாதிதான் இது. ஆனால் பார்ப்பதற்கு கீரை போல இருக்கும். ஆனால் இதன் வாசம் ஆளையே தூக்கும். வாசத்தில் இதுவும் மனோரஞ்சிதமும் ஒன்றையொன்று விஞ்சுபவை... பாத்திகட்டி காய்கறி கீரையைப் பயிர் செய்வது போல இதைப் பயிரிடுவார்கள். வீட்டுக்குப் பக்கத்தில் இதன் பாத்திகள் இருந்தால், வீட்டில் இதன் வாசம் கொட்டமடிக்கும். நிறைய தண்ணீர் குடித்து வளரும் ஒரு தாவரம் இது. சாதாரண நன்செய் வயல்களிலேயே நன்கு வளரும். கதம்ப மாலைக்கு மட்டுமே பயன்படும் ஒரு மலர் இது என்பதால், இதன் பயன்பாடு பற்றி பலருக்கும் பெரிய அளவில் தெரியவில்லை. குருவின் அம்சமாகக் கருதப்படும் தட்சிணாமூர்த்திக்கு இதனால் அர்ச்சனை செய்ய, அது விசேஷமாகக் கருதப்படும். யந்திரங்களுக்கு பூஜை செய்பவர்களும் இதை அதிகம் பயன்படுத்துவார்கள். சில ஹோமங்களில் இது விசேஷப் பொருளாகக் கருதி சேர்க்கப்படுகிறது.*

**க**திரவனின் வேன் ஊருக்குள் நுழையவுமே எல்லோரும் ஓடிவந்து சுற்றி வளைத்து நின்றார்கள். சிலர் பெருமை பொங்கப் பார்த்தார்கள். தேவர் வீட்டு வாசலில் செம்பட்டிக் காரனின் தப்பட்டைக் கச்சேரி தேய்ந்து வந்து காதில் விழுந்தபடி இருந்தது.

“கதிரண்ணே... உங்களுக்காகத்தான் காத்திருங்காங்க. நீங்க போனா பொணத்தை எடுத்துடுவாங்க...”

“சரி வாங்க, போகலாம்...” என்று கதிரவனும் அவர் களோடு சேர்ந்து நடந்தான். ஊரே தேவர் வீட்டு வாசலில் கூடியிருந்தது. செம்பட்டி தங்கையனும் அவனது இணை சகுந்தலாவும் பட்டையைக் கிளப்பிக் கொண்டிருந்தார்கள். ஆட்டமான ஆட்டம் போட்டதில் சகுந்தலா கிணற்றில் குளித்து விட்டு ஈரம் சொட்டச் சொட்ட ஏறியதுபோல வியர்த் திருந்தாள். நடுநடுவே தங்கையன் விடாமல் ஒரு தொகை



யறாவுக்கு ஆடியபோது அவள் ஒரு பக்கமாகத் திரும்பி செம்பில் தண்ணீர் குடிப்பது போல சாராயத்தை வாங்க ஊற்றிக் கொண்டாள்.

கடக் கடக் என்று சில மடக்குகள்!

அதன்பின் உடம்பில் மின்சார வாரியம் கனெக்ஷன் கொடுத்தது போல் ஒரு சுறுசுறுப்பு. அத்துடன் உடம்பின் அங்கங்களை பாகம் பாகமாக ஆட்டிக் காண்பித்தாள். ‘காளையின்னா காளை இது, காங்கேயத்து காளை...’ இது, காங்கேயத்து காளை... கன்னிப் பொண்ணு கண்டாக்கா கண்ணடிக்கும் காளை...” என்று தங்கையன் பல்லவி எடுத்தால், ‘ஆழமுன்னா ஆழம் இந்த கன்னி மனசு ஆழம்... அம்புட்டுகிட்டாக்கா அடிச்சொடிஞ்சு போவும்...” என்று சகுந்தலாவும் பதிலுக்குப் பதில் கலந்த சிரிப்பு. பார்ப்பதற்கு சாவு வீடு போலவே தெரியவில்லை.

கதிரவன் வரவும் ஆட்டத்திலும் ஒரு தொய்வு.

கதிரவன் பதிலுக்கு தங்கையனை ஒரு பார்வை பார்த் தான். அது கண்டிக்கிற மாதிரி இருந்தது. அப்படியே உள்ளே விறுவிறுவென்று நடந்து சென்று அவன் மாமாமுன் நின்றான். அவரும் ஏறிட்டார்.

“இன்னிக்கு வியாபாரத்துக்கு பழுதில்ல மாமா... முக்கியமான வேல முடிஞ்சு போச்சு. இனி ஆக வேண்டி யதைப் பார்ப்போம்...” என்று கூற, அவரும் அவன் தோளைப் பிடித்தபடி எழுந்து நின்றார். அதன்பிறகு மளமள வென்று காரியங்களும் நடக்க ஆரம்பித்தன. அந்தக் கூட்டத் தில் சிவகாமியும் வந்திருந்தாள். ஓரமாக நின்று நடப்பதைக் கவனித்தாள்.

**ம**றுநாள்!

பொழுதுவிடிந்து வெகு நேரமாகி விட்டது.

சாதாரணமாக கோழி கூப்பிட எழுந்து விடும் கதிரவன் முதல் நாள் இரவு தாமதமாக தூங்கச் சென்றதால் எழுந்திருக்கவில்லை. ஒரு எட்டு மணி வாக்கில் சாளரம் வழியாக ஊடுருவிய சூரியக் கோடுதான் உசுப்பி விட்டது. மூக்குக்கு மேல் ஒரு நூறு எறும்புகள் கபடி விளையாடுகிற மாதிரி இருந்தது. மூக்கைக் கசக்கிக் கொண்டே எழுந்து நின்றான். கடைசி கொட்டாவியைப் பிரித்தவன் முகம் கழுவுவதற்காக வீட்டு முற்றத்திற்கு வந்தான். அந்த நாள் தாழிப் பானையில் தண்ணீரும் தேங்கிக் கிடந்தது. எடுத்து 'பச்ச் பச்ச்' என்று முகத்தில் அடித்துக் கொண்டான்.

உடம்பு முழுக்க ஒரு சுறுசுறுப்பு ஓட ஆரம்பித்தது. அப்படியே வெளியே வந்தான். வீட்டு முன்னால் திண்ணை மேல் 'தினத்தந்தி' பிரிக்கப்படாமல் கிடந்தது. கையில் எடுத்தபடி வெளியே தழைத்துக் கிடக்கும் வேப்ப மரத்தடி கட்டிலில் போய் அமர்ந்தான். பேப்பரைப் பிரித்தான். அப்படியே ஒரு பார்வை பார்த்தான். யாரோ கனைக்கும் சப்தம் கேட்டது. திரும்பினான். வாத்தியார் பெரியசாமித் தேவர் வந்து கொண்டிருந்தார்.

வந்தவர் அவன் கட்டிலில் ஒரு பக்கமாக அவன் அனுமதி கேட்காமலேயே ஒருவித உரிமையோடு உட்கார்ந்தார். அவரிடம் ஒரு கனமான மௌனம்.

"என்ன வாத்தியாரய்யா... பேப்பர் பாக்கறீங்களா?"

"நீ பாருப்பா. உன்ன பத்திக்கூட எதாவது செய்தி வந்துருக்கும். நீ பாரு..." என்றார் சற்று குத்தலாக.

"வாத்தியாரய்யா... என்ன சொல்றீங்க?"

"என்னத்தப்பா சொல்ல... நான் சொல்லச் சொல்ல கேக்கல. பாவம் கழுகாசலத் தேவர்னு நீ பாட்டுக்கும் நேத்து எவ்வளவு பெருந்தன்மையா நடக்க முடியுமோ, அவ்வளவு பெருந்தன்மையா நடந்துக்கிட்டே..."



"ஏன்... கூடாதுங்கறீங்களா?"

"நான்தான் யோசிச்சு செய்யுன்னு சொன்னேல்ல...?"

"இப்ப என்ன ஆயிடிச்சு? எல்லாம் நல்லாத்தானே இருக்கு..."

"அட, நீ வேற... விடியக் காலம்பற என்ன நடந்துச்சுன்னு தெரியுமா?"

"என்ன நடந்துச்சு வாத்தியாரே...?"

"அட என்னத்த சொல்ல... உன்னோட பண்ணைக் காட்டுல வைக்கோல் படப்பு அவ்வளவும் எரிஞ்சு சாம்பலாயிடிச்சு தெரியுமா?"

"என்னது... படப்பு எரிஞ்சு போச்சா...?"

"நான் இப்ப அங்க இருந்துதான் வர்றேன். வேணும்னா போய்ப் பாரு..."

"என்ன வாத்தியாரே இது கொடுமை? யார் தீ வச்சது?"

"இதை எல்லாம் யாருப்பா பண்ணுவா? உன் மாமா தான்..."

"போய் வாயைக் கழுவுங்க... அவர் இப்பதான் ஒரு முழு மனுஷனா மாறி எல்லாம் நல்லபடி நடந்துக்கிட்டு இருக்கு. அதைக் கெடுத்து வைக்காதீங்க..."

"சரி கதிரவா... நான் சொல்லும்போது உனக்கு கசப்பா தான் இருக்கும். போகப்போக நீயே ஒரு நாள் தெரிஞ்சுக்காமலா இருப்பே..."

வாத்தியார் பெரியசாமித் தேவர் ஏதோ சாபம் கொடுப்பது போல பேசிவிட்டு வந்த வழியே திரும்பத் தொடங்கி விட்டார். அதன் பிறகு கதிரவனால் அங்கே சாதாரணமாக கூட உட்கார முடியவில்லை. அந்த காலை வேளையிலேயே ஓடிச் சென்று டிராக்டரைக் கிளப்பினான். அதுவும் தார்ப்பாய் துணி கூரையுடன் குண்டு சக்கரங்களுடன் தடதட

வென்று உருள ஆரம்பித்து விட்டது. பாதி வழியிலேயே, ஒரு கூட்டம் அவனை எதிர்கொண்டது.

"என்ன விசயம்... எதுக்கு வழி மறிக்கிறீங்க...?"

"என்னத்தங்க சொல்ல... நடந்தது நிசம்தானா, இல்ல கனவான்னு ஒரே குழப்பமா இருக்குங்க..."

"விசயத்துக்கு வாங்க..."

"நேத்து செத்துப் போனாரே நம்ம தேவரய்யா மச்சான்..."

"சின்னராசு... அவனுக்கென்ன?"

"அவரை விடியற்காலைல கம்மாக்கரை மேல பாத்தேங்க..."

"என்னது?"

"சத்தியம்க... எனக்கு முன்னால ஒருத்தர் நடந்து போய்க் கிட்டிருந்தார். கிட்டபோய் தோள்ல கை போட்டு நம்ம ஊர்க்காரங்ககிட்ட பேசற மாதிரி, 'ஒதுங்கிப் போ அப்பு'ன்னு சொன்னேன். அப்ப அந்த கைல லாந்தர் விளக்கு இருந்துச்சு. அதை அப்படியே ஒசத்தி என்னைப் பார்த்தான் அந்த ஆள். அப்ப அந்த ஆள் முகமும் தெரிஞ்சிச்சு. பார்த்தா... ஒரே ஆச்சரியம். அது அச்சு அசல் சின்னராசு..."

"சரி... இப்ப எங்க அந்த சின்னராசு?"

"அட, என்ன தம்பி நீங்க... அவரைப் பார்த்த அதிர்ச்சில விட்டா போதும்னு திரும்பி ஓடினவன்தான். கொஞ்சதூரம் வந்துட்டு மெல்ல திரும்பிப் பார்த்தா... அப்படி ஒரு ஆள் அங்க நின்ன தடயமே இல்லை. இதை என்னன்னு சொல்ல..."

"எல்லாம் பிரமை. எங்கையாவது செத்துப்போன ஒருத்தன் திரும்ப வருவானா?"



"வரமுடியாதுங்கறது எங்களுக்குத் தெரியாதாக்கும்? நான்தான் காத்து கறுப்பு மாதிரி அதைப் பார்த்தேன்னு சொல்றேன்ல..."

"எந்தக் காலத்துல இருக்கோம்கறத மனசுல வச்சிக்கிட்டு எதையும் பேசுங்க. காத்து கறுப்புன்னு கிட்டுல்லாம் காலம் காத்தால உளற வேண்டாம் போய் சோலிய பாருங்க..."

கதிரவன் முடிவாகச் சொல்லிவிட்டு டிராக்டரை திரும்ப எடுத்தான். அதே பழைய பாதைதான். கண்மாய்க்கரைப் பாதை வந்து அதில் ஏறினான். ஒருபுறம் கண்மாய் மறுபுறம் சரிவு. கரை மேல் டிராக்டரும் நல்ல வேகம் எடுத்து ஓடியது. சற்றுமுன் வழிமறித்து ஒருவன் புலம்பிய அதே இடமும் வந்து அதையும் டிராக்டர் கடந்தது. சாலை ஓரமாக ஒரு இடத்தில் லாந்தர் விளக்கு ஒன்று இருந்து எரிந்தபடியும் இருந்தது. சட்டென்று டிராக்டரை விட்டு இறங்கிய கதிரவன், அந்த லாந்தரை போய் எடுத்தான். மண்ணெண்ணெய் விளக்கான அது கடைசிக் கட்டத்தில் இருந்தது. அணைந்து அணைந்து எரிந்து கொண்டு... கண்ணுக்கெட்டிய தூரம் ஒருவரையும் காணவில்லை. முதல் தடவையாக கதிரவனுக்குள் ஒரு சிறு சந்தேகப் பொறி... பண்ணைக்குள் டிராக்டர் நுழையும் முன்பே வைக்கோல் படப்பின் எரிந்த புகை அவன் முன் வளைய வந்து, 'வாங்க முதலாளி' என்று வரவேற்கத் தொடங்கியது. ஒரு ரப்பர் டியூப் மூலமாக பம்ப்செட் மோட்டார் தண்ணீரைப் பீய்ச்சி படப்புத் தீயை அணைத்துக் கொண்டிருந்தார் கந்தசாமிப் பிள்ளை. எப்பொழுதும் பண்ணைக்கு காவலாக படுத்துக்கொள்ளும் ராமசாமி கூடமாட அவராடு ஓடியாடிக் கொண்டிருந்தான்.

பெரிய படப்பு!

வைத்திருந்தால் ஒரு வருடம் தாராளமாக வரும். தினமும் மாட்டுக்கு மூன்று வேளை தீனி என்று வருடம் முழுக்க ஆயிரம் வேளை தீனி போட்டிருக்கும். நல்லவேளை

காய்ந்த வைக்கோற் போர் மட்டும் தீயில் சிக்கியது. அப்படியே பச்சை வயலுக்கு ஏதாவது ஆகியிருந்தால் என்னாவது என்று கதிரவன் யோசிக்கும் போதே கந்தசாமி பிள்ளையும் அதைத்தான் எதிரொலித்தார்.

"நல்ல வேளை தம்பி... எந்த நாயோ படப்பைக்கு தீ வைச்சதோட ஓடிட்டான்... இதுவே நம்ம குடிசைக்கு வைச்சிருந்தா இரண்டு உசிருங்கல்ல போயிருக்கும். அவ்வளவு ஏன்... மாட்டுப் பண்ணைண் கூரைக்கு வெச்சிருந்தா, நம்ப பண்ணை மாடுங்க அவ்வளவும்ல எரிஞ்சு போயிருக்கும்..."

"எரிஞ்ச இடம் எதுவா வேணா இருக்கட்டும் யாரோட வேலை அது?"

"தெரியல தம்பி. படப்பு திகுதிகுன்னு எரியவும் ராமசாமி தான் முதல்ல பாத்துருக்கான். ஓடிவந்து என்னை எழுப்பவும் நான் ஓடிவந்தேன். ஆகாச உயரத்துக்கு தீ நாக்குங்க. வேகமா அணைக்காட்டி தீ பரவற அபாயம் வேற. அதான் மளமளன்னு தோட்டத்துக்கு தண்ணி பாய்ச்சற ட்யூப்பை அப்படியே மாத்திப் பிடிச்சு தண்ணி பீய்ச்சி அணைச்சுப் பார்த்தேன். யதார்த்தமா வாத்தியாரும் பார்த்துட்டு வந்து அவரும் கூடச் சேர்ந்து தீயை அணைக்க ஒத்தாசை பண்ணாரு. அப்புறம் அவரே 'நான் கதிரவனைப் பார்த்து சொல்றன்'னு கிளம்பிட்டாரு... அவர் சொல்லித்தானே நீங்க வந்திருக்கீங்க?"

"ஆமாம் பிள்ளை... நம்ம நாயிங்க எங்க...? அதுங்கள மீறி யார் இங்க வரமுடியும்?" சற்று ஆவேசமானான் கதிரவன்.

"அட, ஆமால்ல... எனக்குக் கூட நம்ம நாயுங்க ஞாபகமே இல்லாம போய்டிச்சே... ச்சே!" என்றபடி பிள்ளை ட்யூப்பைக் கீழே போட்டவராக, சுற்றி ஒரு பார்வை நாய்களைத் தேடுவது போல பார்த்தார். அதன்பின் ஒரு



வினாடிகூட கதிரவன் அங்கு நிற்கவில்லை. தன் வாட்ட சாட்டமான ராஜபாளையங்களைத் தேடிக்கொண்டு அவனே கிளம்பி விட்டான்.

"ஆனானப்பட்ட வருசநாட்டு கள்ளர்களையே பிடித்து உலுக்கி எடுத்த நாய்களால் கேவலம் படப்பைக்குத் தீ வைக்க வந்த மனிதனையா பிடித்துக் குலைக்க முடியவில்லை...?

கேள்வியும், எதிர்பார்ப்புமாய் பண்ணையின் ஒவ்வொரு பக்கமாய் பார்த்துக் கொண்டே நடந்தான். அவனது மாதிரி வயலில் ஒரு இடத்தில் மருங்கொழுந்து நீர் பிடித்து பிசுபிசுவென்று வளர்ந்திருந்தது. குனிந்து தொட்டுப் பார்த்தாலே கை மணக்கும்... அப்படி ஒரு மணம்! பார்க்கப் பார்க்க ஆசையாக இருந்தது. இன்னொரு இடத்தில் பெட்டிகளில் தேன் கூடுகளை உருவாக்கும் செயற்கை தேனீப் பண்ணை, மார்புயரத்துக்கு குழாய்களின் மேல் தேன்கூட்டுக்கு இடமளிக்கும் மரப்பெட்டிகள். பெட்டிகளை தேனீக்கள் சில சுற்றி வந்தபடி இருந்தன. அதன்பின் அவரைக் கொடிக்கு என்று ஒரு அரை ஏக்கர் ஒதுக்கி அதில் அவரை போட்டிருந்தான். அவரை நன்றாகவே தழைத்து மண்டிக் கிடந்தது. நிறையவே அவரைப் பிஞ்சுகள். ஒரு பத்து பேர் இறங்கிப் பறித்தால் எப்படியும் ஐம்பது அறுபது கிலோ தேறும். பார்த்துக் கொண்டே நடந்தான். சற்றுத் தள்ளி செயற்கையாக எருக்குழி போட்டிருந்தான். ஒரு லாரியளவுக்கு பெரிய பள்ளம் வெட்டி அதில் குப்பைகளைக் கொட்டி உருவாக்குவதுதான் எருக்குழியாகும். தேவைக்கு அங்கே போய் எருவை எடுத்துக் கொண்டு போய் வயல்களில் போட்டுக் கொள்ள வேண்டும். அதற்கு தோதாக அங்கே ஒரு டயர் வண்டி ஒன்று நின்று கொண்டிருந்தது. அதில் எப்படியும் ஒரு பத்து கூடை எரு தேறும். கிட்டே நெருங்க நெருங்க அங்கிருந்து துர்நாற்றம் வேறு வீச ஆரம்பித்தது.

கதிரவனுக்கும் அதிகபட்ச திகைப்பாகத்தான் இருந்தது. மூக்கைப் பிடித்துக் கொண்டே குழியை எட்டியவனுக்கு பகீர் என்றது. குழிக்குள் அவனது காவல்கார நாய்கள் நான்கும் இறந்து சடலங்களாய் ஒன்றன் மேல் ஒன்று கிடந்தன. நாய்கள் மேல் ஒரு சிறு காயம்கூட இல்லை என்றால்...

கதிரவன் அங்கிருந்து விலகி வந்து ஒரு வரப்பின் மேல் அப்படியே அமர்ந்து விட்டான். தூரத்தில் அவனைத் தேடிக் கொண்டு பிள்ளை வந்தபடி இருந்தார். அவனை சமீபித்தவர், "என்ன தம்பி இங்கபோய் உட்கார்ந்துட்டீங்க? ஆமாங்க... நம்ம நாயுங்க...?" என்று கேட்க, சோகமாக எருக்குழி நோக்கி கையை நீட்டினான் கதிரவன். புரிந்துகொண்டு எருக்குழி நோக்கிச் சென்ற கந்தசாமி பிள்ளை உள்ளே நாய்களின் பிணங்களைப் பார்த்துவிட்டு நின்ற இடத்தில் அப்படியே நிலைமரமானார். அப்படியே மௌனமாக திரும்பி வந்து கதிரவன் அருகில் நின்றார். அவனும் நிமிர்ந்தான்.

"என்ன தம்பி இது அநியாயம்... யாரோ நாயிங்களுக்கு விஷம் வெச்சிருக்காங்க போல தெரியுது..."

'ஆமாம் பிள்ளை... அதுகளை எப்படி சந்திக்கணுமோ அப்படி சந்திச்சு அடக்கியிருக்காங்க..."

"கொடுமை தம்பி இது... யாராயிருக்கும்?"

"என்னைக் கேட்டா.. நீங்களும் வாத்தியார் மாதிரி என் மாமா பேரைச் சொல்லுங்க... இப்ப என்ன?"

"அப்படி இல்ல தம்பி. அவங்கள விட்டா உங்களுக்கு எதிரா இந்த ஊர்ல யாரும் இல்லையே..."

"பிள்ளை... உங்க . கணக்கெல்லாம் பழைய கணக்கு. அவர் எப்படி மனசு மாறி நேத்து நடந்துக்கிட்டார்னு பார்த்தீங்கல்ல...?

"அவர் விசயத்துல எதையும் நம்பறதுக்கில்லங்க... வேற என்ன, அதான் வாத்தியார் அவரை சொல்லியிருக்கார்."



"சரி... அவர்தான்னா அவர் எதுக்கு என்கிட்ட சமாதானமா போகணும்? எப்பவும் போல எதிர்த்து நின்னே இப்படி வாலாட்டலாமே...?"

"வாலாட்டறது பலவிதங்க தம்பி. இப்படி ஒரு பக்கம் நல்லா பழகிட்டு மறுபக்கம் இப்படி நடந்தா நீங்களும் அவர்மேல் குத்தம் சொல்ல யோசிப்பீங்கதானே?"

பிள்ளை சரியாகத்தான் கேட்டார். கதிரவனும் தாடையைத் தேய்க்கத் தொடங்கிவிட்டான்.

## 7

மலர்களில் வாசமில்லாத ஒரு பூவும் உண்டு. காகிதப்பூ என்பார்கள். இது ஒரு மேல் நாட்டுத் தாவரம் போன நூற்றாண்டின் தொடக்கத்தில் கூட இது இந்திய மண்ணில் பிரபலம் ஆகவில்லை. வெள்ளையர்கள் நமது நாட்டை அடிமைப்படுத்தி ஆண்டபோது, இங்கே வந்தது தான் காகிதப்பூ மரம். இதை ஆங்கிலத்தில் 'போகன் வில்லா' என்பார்கள். எவ்வளவு வெப்பத்தையும் இது தாங்கும். அதே போல சிறிய அளவு தண்ணீர் போதும்- இது வளைந்து கொடுத்து வளர்ந்து விடும். மரம் முழுக்க சமயங்களில் பூத்துக் குலுங்கும். பார்க்கவே ரம்யமாக இருக்கும்.

"தினம் தினம் பூக்கும்- தினம் தினம் உதிரும். முட்தாவரம் இது என்பதால் பாம்புகள் இந்த மரத்தில் ஏறுவதில்லை. பறவைகளும் அடைவது கிடையாது. கண்களுக்கு குளிர்ச்சி, நிழல் என்று இருவித சிறப்பளிக்கும். இதனால் வேறு நன்மை எதுவும் இல்லை.

இதன் மலர்கள் பூஜைக்கு உகந்தவையில்லை. ஆனபோதிலும் இந்த மரங்கள் செல்வச் செழிப்புக்கும், பாதுகாப்புக்கும் அடையாளமாக பாண்டிச்சேரி அன்னை அவர்களால் அடையாளம் காட்டப்படுகின்றது.

இது உள்ள இடத்தில் பாதுகாப்பு இருக்கும்; நல்ல செல்வம் சேரும்.

பால் தெளிப்பதற்காக மயானத்திற்குப் புறப்பட்டுக் கொண்டு இருந்தார் கழுகாசலத்தேவர். சின்னராசுவுக்கு அப்பா அம்மா எல்லாமே அவரும் மருதாயியும் தான். எனவே அவரே முன் நின்று கொள்ளி போட்டு காரியம் செய்ய வேண்டிய கொடுமை!

சின்னராசு திருமணமும் செய்து கொள்ளாததால் நல்ல வேளையாக அவன் மனைவி மக்கள் என்று ஒரு கூட்டம் காலையில் கூடி நின்று ஒப்பாரி வைக்கும் ஒரு சடங்குக்கு இடமில்லாமல் போய்விட்டது.

தேவர் முன்னால் ஒரு மண் கலயத்தில் கறந்த பாலை அப்படியே கொண்டு வந்து வைத்தனர். அதை ஒரு வெண் துணியால் கட்டி மூங்கில் கூடை ஒன்றுக்குள் வைத்து நீட்டினர். காரியத்தின் போது 'இப்படிச் செய், அப்படிச் செய்' என்று சொல்ல அனுபவஸ்தர் முத்துகுமாரசாமி என்பவர் வந்திருந்தார்.

வாசலில் சங்கு ஊதியும், சகுண்டி மணிக்காரனும் சப்தம் எழுப்ப, அது சாவு வீடு என்று சொல்லாமல், சொல்ல, அவர்கள் முன் நடக்க தேவர் பின் தொடர்ந்து காலை வைக்க- எதிரில் கதிரவன் டிராக்டரில் வந்து இறங்கினான்.

தேவர் மார்பில் வெள்ளைத்துண்டு மூடிக்கிடக்க, அவனை வாஞ்சையாகப் பார்த்தார். பொதுவாக சாவு வீட்டுக்கு வருபவர்களை வரவேற்கக் கூடாது; போகின்றவர்களும் போய் வருகிறேன் என்று சொல்லிச் செல்லக்கூடாது. அதை உத்தேசித்தோ என்னவோ தேவர் கதிரவனை நிதானமாகப் பார்த்தார். பார்வையே வந்து விட்டாயா? மகிழ்ச்சி என்பது போல இருந்தது.

"நானும் வர்றேன் மாமா..." என்று வேட்டியை இறக்கி விட்டவனாக அவரோடு சேர்ந்து கொண்டான். சங்கு ஊதியும், சகுண்டி மணிக்காரனும் முன்னால் நடக்க



மௌனமாக அவ்வளவு பேரும் பின் தொடர்ந்தனர். நேற்றுக்காலை இதே நேரம் சின்னராசு இருந்த விதத்துக்கும் இப்பொழுது அவன் சாம்பலாய் இருப்பான் என்று நினைக்கும் போதும் 'என்ன மனித வாழ்க்கை இது?' என்று ஒரு குமுறல் மருதாயி மனதில் விசும்பலாக வெளிப்பட்டு முடிந்து போனது.

வீட்டு வாசல் படியில் இருந்து பார்த்துக்கொண்டே இருந்தாள். கதிரவனும் அவரும் ஒன்றாக நடந்து செல்வது ஒரு விதத்தில் மகிழ்ச்சியளித்தது. பல வருஷத்து பகை... காலமும் சூழலும் ஊதி ஊதி பெரிது படுத்தத்தான் பார்த்தன. ஆனால் சின்னராசு மரணம் ஒன்று சேர்த்து விட்டது. ஒரு வகையில் சின்னராசு போனது நல்லது என்று கூட நினைத்துக் கொண்டாள். அவன் இருந்தவரை தேவரை ஊதி ஊதிக் கெடுத்ததும் அவன்தான்.

கண்மாய் தண்ணீரை உறிஞ்சுவதற்கு காரணமும் அவன்தான்.

'வானம் பார்த்து கொட்டுற மழை தண்ணி. அதை நாம மோட்டார் போட்டு எடுக்கறதுல ஒரு தப்பும் இல்ல மாமா... எந்தப் பய நம்மள எதிர்த்து என்ன செய்யறான்னு தான் பார்த்துடுவோமே' என்று அன்று ஏத்திவிட்டவனே அவன்தான்.

அந்தப் பாவத்துக்கு தண்டனையாக போயே சேர்ந்து விட்டான். தெருவில் தேவரும் கதிரவனும் சென்று மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்து விட்டு நடந்ததை ஒரு பாட்டம் நினைத்துப் பார்த்து ஒரு பெருமூச்சு விட்ட வளாக திரும்பினாள் மருதாயி.

மயானக்கரை நல்லூருக்கு தெற்கில் இருந்தது. வாகை மரங்கள் ஏராளமாய் வளர்ந்திருக்க, கண்மாயின் ஒரு பக்க கரை அந்த பக்கமாய் நீண்டிருந்தது. புதிதாய் வருபவர்கள்

தெரியாமல் அந்த பக்கமாய் வந்தால் மிரண்டு போவார்கள். அங்கங்கே சமாதிகள்; உடைத்துப் போட்ட பாடைகள், தாண்டிக் கொண்டு தகரக் கொட்டகை நோக்கிச் செல்ல வேண்டும்.

மயானத்துக்குள் குண்டஞ்சி என்று ஒரு புலையன். அங்கேயே ஒரு மூலையில் குடிசை போட்டிருந்தான். பரம்பரை புலையன்.

எல்லோரும் வரவும், சப்தம் கேட்டு ஓடிவந்தான்.

எப்பொழுதும் அழுக்கு வேட்டியோடு இருப்பவன். பிணம் வந்தது என்றால் புது வேட்டிக்கு மாறி விடுவான். பிணத்தின் கோடி வேட்டி அவனது இடுப்புக்கு மாறிவிடும். எரியும் பிணத்துக்கு எதற்கு வேட்டியும் சட்டையும் என்பது அவன் கேள்வி.

அன்று முதல் நாள் சின்னராசு மேல் இருந்த வேட்டி குண்டஞ்சி மேல் இருந்தது. தேவர் அதை கொஞ்சம் கோபத்தோடு பார்த்தார். அவனுக்கும் புரிந்தது.

"ஏண்டாவேட்டி வேணும்னா கேட்கலாம்ல... இது என்னடா கோலம்." என்று சற்று இரைந்தார். அவன் தலையைக் குனிந்து கொண்டான். ஏனோ கதிரவனை சற்று உற்று உற்றுப் பார்த்தான். தகரக் கொட்டகையில் சின்னராசுவின் சடலம் வெந்து அடங்கி இருந்தது. ஒரு சாண் உயரம் சாம்பல் திட்டு- அதுதான் சின்னராசு. தேவர் அதன் முன் போய் நின்றார். முத்துக்குமாரசாமி கச்சிதமாக சாம்பல்மேடு தாண்டி அந்தப் பக்கம் போய் நின்றவராக பால் கலயத்தை எடுத்தார். கையில் பிடித்தபடியே கீழே பார்த்தார்.

"யாரா இருந்தாலும் இம்புட்டுதான் மனுஷன் நிலை. ஆத்தா வவுத்துல இருந்து வெளியே வந்ததும் முதல்ல குடிக்கறது பாலைத்தான்... அதுவே தான் அவிஞ்சி அடங்குனப்பவும். பால்ல தொடங்கி பால்ல முடிஞ்சு



போச்சு- இங்க ஒருத்தன் வாழ்க்கை" என்று தேவரின் நீண்ட கைகளில் பாலை விட்டார். அவரும் தண்ணீர் தெளிப்பது போல அந்த சாம்பல் திட்டுகளின் மேல் தெளித்தார்.

பால் பட்டு 'ஸ்ஸ...' என்று அவை எதிரொலி கிளப்பின. அதன்பின் சாம்பல் திட்டுக்குள் கையை விட்டு முதல் எலும்பை தேவரே தேடி எடுத்தார்.

முழங்கை எலும்பு... இடுப்பு எலும்பு, கால்மூட்டு எலும்பு மூன்றும்தான் முழுதாக இருந்தன. மற்றதை எல்லாம் நெருப்பு தின்றுவிட்டிருந்தது. எடுத்து நொட் நொட் என்று பால் கொண்டு வந்திருந்த கலயத்திலேயே போட்டார்.

கதிரவன் புலையனோடு ஒதுங்கியிருந்தான்.

"ஐயா, உங்களைப் பார்த்து பேசணும் பேசணும்னுங்க..."

"என்ன விசயம்?"

"இங்க எப்படி பேசறதுன்னு தெரியலிங்க..."

"நீ சும்மா சொல்லு..."

"நான் புலை சாதி இல்லீங்க. அது உங்களுக்கே தெரியும்."

அவன்தன் பேச்சில் எங்கோ போனான். கதிரவனுக்குக் கொஞ்சம் சுருக்கென்றது.

"என்னய்யா சொல்றே?"

"அட என்னங்க நீங்க... நான் இந்த மயானக்கரைல எவளாலையோ விடப்பட்ட ஒரு குழந்தைங்கறது உங்களுக்குத் தெரியாதுங்களாயா?"

கதிரவனுக்குப் பகீர் என்றது.

"நெசமா தெரியாதுப்பா... சரி அதுக்கென்ன இப்போ."

"அட என்னங்க நீங்க. இப்ப எனக்கு என்ன தாயி தகப்பன் யாருங்கறது தெரியுங்க. நான் அவங்களோட போய் வாழ நினைக்கறேங்க. ஆனா தேவரய்யா தான் 'பொறு பொறு'ன்னே சொல்லி தடுத்துக்கிட்டிருக்காரு..."

"மயானத்திற்கு பால் தெளிக்க வந்த இடத்தில் புலையன் தெளிந்த விஷயங்கள் கதிரவனை ஒரு உலுக்கு உலுக்கி விட்டது. அப்படியே மலங்க மலங்கப் பார்த்தான்.

"நான் ஒண்ணும் இந்த சாதி இல்லீங்க. என் அப்பன் ஆயி செஞ்ச தப்புக்கு நான் என்னங்க பண்ணுவேன். கேட்டா 'ஊருல ஒப்புக்க மாட்டாங்க. நீ கலந்து வாழ முடியாது.' அது' இதுன்னு ஏதேதோ சொல்றாரு தேவரய்யா..."

'எப்ப சொன்னாரு..."

"அவர் ரொம்ப நாளா இதைத்தாங்க சொல்லிக்கிட்டு வர்றாரு.

"சரி. உன் அப்பன் ஆயி யாரு?"

"அது... அது..."

"அதைச் சொல்லு. நீ எப்படி இந்த மயானக் காட்டுக்கு வந்தே?"

"இது என்னங்க கேள்வி. நான் கள்ள உறவில வந்த பயலுங்க. கள்ளிப் பால் கொடுத்து செத்துட்டதா கருதி தூக்கி வந்து எரியற சிதைல போடச் சொல்லி, இங்க இருந்த புலையன்கிட்ட கொடுத்துட்டுப் போய்ட்டாங்களாம். ஆனா, எனக்கு மூச்சிருக்கவும் அவரு என்னைக் கொல்லாம வளத்து இப்ப நான் உங்க முன்னால நிக்கிறேங்க..."

"இந்த விசயம் உனக்கு எப்படித் தெரியும்?"

"அது தாங்க கெரகம்கறது. ஒரு நா என்னை வளர்த்தவன் நான் வந்த விதத்தைச் சொல்லிவிட்டு செத்துட்டான். பொறவு இங்க சீட்டாட வந்த ஒருத்தன் கள்ள உறவுக்கு நான் பொறந்ததையும், தூக்கிட்டு வந்து போட்டதையும் இன்னொருத்தன்கிட்ட சொல்லிக்கிட்டிருந்ததை நான் கேட்டுட்டேன்."



குண்டஞ்சி தனக்கு தன்னைப் பற்றி தெரிய வந்ததைக் கூறிக் கொண்டிருக்க, "அங்க என்னடா பண்றே?" என்கிற தேவர் குரல் அவனை அப்படியே தடுத்து நிறுத்தியது.

"ஐயா கூப்பிடறாரு. நான் சொன்னதா எதையும் சொல்லிடாதீங்க. பொறவு பாக்கறேன்." என்று அவனும் ஒதுங்க, கதிரவன் முகத்தில் ஈயாடவில்லை.

'இந்த உலகம் தான் எவ்வளவு பெரிய நாடக மேடை என்று நினைத்துக் கொண்டே நடந்தான்.

"அங்க அவன்கூட என்னடா பேச்சு. அதுவும் கைய கட்டாம பெருசா வீசிவீசி பேசறே... வெண்ணெய்."

"ஐயா..."

"வாயத் திறக்காதடா..." இப்ப உனக்கு என்னடா குறை? பேசாம கெட..." தேவரின் கடைசி வார்த்தை கதிரவனையே பெரிதாகக் கீறியது. குண்டஞ்சியும் உடம்பை வில்போல வளைத்துக் கொண்டு "சரிங்கய்யா சரிங்கய்யா..." என்று பற்றுக்குள் அடங்கும் பாம்பு போல பம்மி அடங்கினான்.

அவர்கள் அவ்வளவு பேரும் புறப்பட்டு விட்டனர். தேவர் நேராக கண்மாய் கரைக்குச் சென்றார். சிலுசிலுவென்று சேலை முந்தி ஆடுவது போல அலைகள். முழங்கால் தண்ணீரில் போய் நின்று கொண்டார். கூடவே பெரியவர் முத்துகுமாரசாமி அவர்கையில் சின்னராசுவின் அஸ்தி கலசம்.

"ஐயா அதைத் தூக்கிப் பிடிச்சு பஞ்சபூதங்களை ஒரு தடவை நினைச்சு உசுர்விட்ட உங்க மச்சினன் ஆன்மா சாந்தியடையணும்னு வேண்டி அவ்வளவு சாம்பலையும் தண்ணில கரையுங்க." என்றார்.

தேவர் தேங்கினார்.

"என்னங்கய்யா...?"

"ஒன்னராக என் மகன் மாதிரி. இந்த ஊர் கம்மாய்ல குளிக்கக் கூட அவனுக்கு பிடிக்காது. அவன் அஸ்தியை இங்க கரைக்கறத விட ராமேஸ்வரம்போய் அங்க கரைக்கறதுதான் அவனுக்கு செய்யற சரியான அஞ்சலி..."

"அப்ப அப்படியே செய்துடுங்க..." என்ற முத்துக்குமார சாமி டமக்கென்று கண்மாயில் முங்கி எழுந்தவராக, "மூணு முக்கு போட்டுட்டுப் புறப்படுங்க," என்றார். எல்லோரும் அதைத் தொடர்ந்து தண்ணீர்குகள் மூழ்கி எழுந்தனர். கதிரவனும் மூழ்கி எழுந்தான். முள் செடிகளுக்குள் தனது உடம்பை மறைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டே இருந்தான் குண்டஞ்சி என்கிற அந்த புனையன். அவன் பாஷையில் சொல்வதானால் ஆக்கப்பட்டவன். கதிரனும் கவனித்தான்!

## 8



*செவ்வரளி!*

*இந்த மலர் சக்தி அம்சமாகக் கருதப்படுகிறது. எந்த இடத்திலும் எந்த சூழலிலும் வளரும் ஒரு தாவரம் இது. ஒரு குச்சியை ஒடித்து வைத்தால் போதும். விறுவிறுவென்று வளர்ந்து பூத்துக்குலுங்கிவிடும். வெப்பம் மழை என்று எல்லா பருவங்களையும் நன்கு தாங்கி வளரும்.*

*அர்ச்சனைப்பூவில் இதற்கு எப்பொழுதும் ஒரு இடம் உண்டு. பெரிதாக இதற்கு மணமில்லை. ஆனால் நிறை தேன் சுரக்கும் தன்மை உடையதால் வண்டுகள் நிறையவே ஆக்ரமிக்கும். இதன் மகரந்தங்கள் வேகமாய் பரவக் கூடியது.*

*செவ்வரளி உள்ள வீட்டில் தைரியத்துக்குக் குறைவிருக்காது என்பார்கள்.*

கதிரவனின் பண்ணையில் பதியம் போட்டுக் கொண்டிருந்தாள் சிவகாமி. பால் தெளிப்பு முடிந்து திரும்பி வந்தவனை மெல்லிய புன்னகையுடன் வரவேற்றாள்.



"என்ன பண்ணிகிட்டிருக்கே?"

"பார்த்தா தெரியல... புதிய வேலை நடந்துக்கிட்டிருக்கு."

"நாயுங்க செத்துப் போச்சு தெரியுமா?"

"பிள்ளை சொன்னாரு. ஆமாம்... எப்படி கதிர் இப்படி ஆச்சு? உங்களால எதையும் கண்டு பிடிக்க முடியலையா?"

"ஒண்ணும் புரியல சிவகாமி. எல்லாம் நல்லபடி மாறிட்டதா நான் நினைக்கும்போது, இது என்ன சோதனைன்னு எனக்குத் தெரியல."

"எனக்கும் சங்கடமா இருக்கு... ஆமா நாய்ங்க எப்படி செத்துச்சுன்னு கண்டுபிடிச்சீங்களா?"

"அதுக்கு போஸ்ட் மார்ட்டம்ல பண்ணனும்."

"பண்ணுங்க.. உண்மை தெரியணுமா வேண்டாமா?"

"இல்ல... இதைப் பெரிசு படுத்த வேண்டாம்னு பாக்கறேன்."

"ஏன் கதிர்...?"

"இப்பதான் மாமாவுக்கும் எனக்கும் ஒரு நல்ல சூழ்நிலை உருவாகியிருக்கு. அதைக் கெடுத்துக்க விரும்பலை."

"இதுக்கும் அவருக்கும் என்ன சம்மந்தம்?"

"இருக்குன்னு சொல்றாரு பெரியசாமித் தேவர்."

"அதாவது பழைய பகையை மனசுல வெச்சுக்கிட்டு இப்படி நடந்ததாமா?"

"ஆமாம். ஆனால் என்னால் ஏத்துக்க முடியல. நேத்து மாமா இருந்த நிலைல இதை எல்லாம் யோசிக்கக் கூட அவரால முடிஞ்சிருக்காது."

"இது பெரியசாமித் தேவருக்கு தெரியாதா கதிர்?"

"தெரியும். என்னவோ அவரால மாமாவை நம்பமுடியல. 'அவர் ஒரு பதுங்கிப் பாயற புலி. நிச்சயம் பழிவாங்கத்தான் இப்படி நடந்துக்கறரு'ங்கறாரு."

"குழப்பமா இருக்கே..."

"விட்டுப் பிடிப்போம். அவசரப்பட வேண்டாம். அதனாலதான் வைக்கோல் படப்பு தீ பிடிச்சு எரிஞ்சதைக் கூடநான் போலீஸ்ல புகார் கொடுக்கலை. மாமாகிட்டையும் பேசலை."

"ஒரு விதத்துல நீங்க செஞ்சதும் சரிதான். விட்டுத்தான் பார்ப்போமே... பை த பை இன்னொரு விஷயம்."

"என்ன சிவகாமி."

"நேத்து ரோஜா தோட்டத்துல எனக்கு ஒரு அனுபவம்."

"என்ன...?"

"சொன்னா சிரிக்கக்கூடாது."

"இப்ப நீ சிரிக்கற மாதிரியே சொன்னாலும், என்னால சிரிக்க முடியாது. நான் அப்படி ஒரு மூட்ல இருக்கேன்."

"இல்ல. இது ஒரு மாதிரியான விஷயம்."

"என்னன்னுதான் சொல்லேன். எதுக்கு இவ்வளவு பீடிகை."

"நேத்து ராத்திரி பூப்பறிச்சு முடிச்சு நீங்களும் சரக்கோட புறப்பட்டுப் போய்ட்டீங்க."

"சரி..."

"அப்ப தோட்டத்துல ஒரு அழற சப்தம் கேட்டது. டிஃபிக்கல் லேடி வாய்ஸ்."

"உம்... யாரது?"



"அதான் தெரியல... ஒரு வெள்ளைச் சேலை கட்டியிருந்த உருவம் கண்ணுக்குத் தெரிஞ்சிச்சு. அதுவும் ரோஜா செடிங்க நடுவுல்."

"என்ன சிவகாமி... பேய் பிசாசுன்னு எதாவது சொல்லப் போறியா?"

"ஐயோ நான் எங்க அப்படி சொன்னேன். அதே சமயம் பார்த்துக்கிட்டே இருக்கும் போது மறைஞ்சா வேற என்னன்னு சொல்றது"

"மறைஞ்சிச்சா... யூமீன் டிஸ் அப்பியர்... அதுவும் ராத்திரியில?"

"ஆமாம்.. இட்ஸ் ட்ரூ! நான் ஒண்ணும் கனவு கண்டுட்டு சொல்லலை."

சிவகாமி குரலில் உறுதி தொனித்தது.

கதிரவனும் தாடையை வருட ஆரம்பித்தான்.

"என்ன... இருக்கற குழப்பம் போதாதுன்னு இதுவேறையான்னு பார்க்கறீங்களா?"

"ஆமாம். கிட்டத்தட்ட எனக்கு ஒரு அமானுஷ்ய அனுபவம்."

"என் மாதிரியேவா?"

"கிட்டத்தட்ட அப்படிதான் சிவகாமி. நான் பூவை ஏர் போர்ட்ல போட்டுட்டு, திரும்பி வரும்போது ஆக்சிடெண்ட் ஆன மரத்துகிட்ட கொஞ்ச நேரம் நின்னு பார்த்தேன். அப்புறம் கிளம்பிட்டேன். வழியில ரோடு ஓரமா ஒருத்தர் நடந்து போய்க்கிட்டிருந்தார். நிறுத்தி ஏத்திகலாம்னு பார்த்தா, அந்த ஆளைக் காணலை."

"இறங்கி தேடினீங்களா?"

"தேட அந்த அவசியமே இல்லை. ஒளிய அங்க வழியும் இல்லை. கிட்டத்தட்ட இரண்டு பேருக்கும் ஒரே மாதிரி அனுபவம்."

"உண்மைதான். நீங்க சொன்ன மாதிரி என்ன நடக்குதுன்னு பார்ப்போம்." என்றவன் நடந்தபடியே திரும்ப தொடர்ந்தான்.

"பை த பை... சிவகாமி இன்னொரு விஷயம்..."

"என்ன கதிர்?"

"இன்னிக்கு மயானக்கரைல ஒரு அதிர்ச்சியான அனுபவம்."

"என்ன... அங்கையும் யாராவது கண்ணுல பட்டு மறைஞ் சிட்டாங்களா?

"இல்ல சிவகாமி... இது வேற விஷயம்... கேட்டா ரொம்ப ஆச்சரியப்படுவே."

"சொல்லுங்க சொல்லுங்க."

அவள் ஆவல் அதிகரிக்க, அவன் புலையன் குண்டஞ்சி சொன்னதைச் சொல்லி முடித்தான். நிஜமாலுமே சிவகாமி வாயைப் பிளந்து விட்டாள்.

"நம்ப முடியலைல்ல?"

"ஆமாம். ஏதோ சினிமா கதை மாதிரி இருக்கு."

"வாழ்க்கை தானே சினிமா ஆகுது."

"அது சரி... அந்தப் புலையன் சாரி... சாரி... அந்த நபர் தன் அப்பா அம்மான்னு சொன்னது யாரை... அதைக் கேட்டீங்களா?"

"கேட்டேன். ஆனா அதுக்குள்ற மாமா குரல் தடுத்துடுச்சு."

"சரி இப்ப என்ன செய்யப் போறீங்க?"

"ஒரு பிரசிடென்ட்டா, நான் இந்த விஷயத்தைச் சும்மா விடமுடியாது. ஒரு உயிரைத் தூக்கிப் போட்றதும் அது பிழைச்சு தப்பா வாழறதும் சாதாரண விசயம் இல்லை."



"கதிர்... இப்ப என்ன கெட்டுப் போச்சு? வாங்க இப்பவே இரண்டு பேரும் மயானக்கரைக்குப் போய் அவனைப் பார்த்து என்ன ஏதுன்னு கேப்போம்."

"இல்லை சிவகாமி. நான் வரமுடியாது. யாராவது பார்த்தாலும் பதில் சொல்ல வேண்டி வரும். குறிப்பா மாமாக்கு தெரிஞ்சா என்ன ஏதுன்னு கேட்பார்."

"சரி... நான் போய்ட்டு வரேன்..." சிவகாமி சடாரென்று அவளாக முன் வந்தாள். அவன் கண்களிலும் ஒரு ஒளி.

"அப்ப சரி நீ கிளம்பு. அவன் கிட்ட என்ன ஏதுன்னு கேட்டுக்கிட்டுவா..."

உற்சாகமாக விடை கொடுத்தான் கதிரவன். அவளும் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டவள், சுடிதார் துப்பட்டா பறக்க அதில் ஏறி அமர்ந்தாள். கூந்தல் காற்றில் பறக்க அவள் சென்றவிதம் வெகு அழகாக இருந்தது. நெடுநேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுத்தான் திரும்பினான் கதிரவன்.

ஊருக்குள் நுழைந்து பேசாமல் கண்மாயை ஒட்டியே சைக்கிளைச் செலுத்தினாள் சிவகாமி. மழைநீர் பள்ளங்கள் இன்னமும் வடியாமல் அங்கங்கே சக்கரங்கள் இறங்கிக் கொண்டு மிதிக்க சிரமமாக இருந்தது. இருந்தும் மிதித்துக் கொண்டு ஒரு வழியாக வாகை மரக் கூட்டத்தை எட்டி நின்றாள். சைக்கிளை ஒரு ஓரமாக நிறுத்திவிட்டு அப்படியே முள்ளு காட்டுப் பக்கம் பார்வையை விட்டபடியே சென்றவள், பார்த்துப் பார்த்து நடந்தாள். மயானச் சூழல் அவளுக்குப் புதியது. ஆனாலும் பெரிதாக பயம் கொள்ள வில்லை. அவளது கட் ஷூ அவ்வப்போது சகதியோடு ஒட்டிக் கொண்டு சங்கடப்படுத்தியது. தாண்டித் தாண்டி நடந்து குண்டஞ்சி குடிசையை அடைந்து விட்டாள். ஆனால், அவனைத்தான் காணவில்லை.

'எங்கே போய்விட்டான்?'

சுற்றிச் சுற்றிப் பார்த்தாள். சின்னராசுவுக்குப் பிறகு சாவு எதுவும் விழாததால் தகன மேடை காலியாக இருந்தது. மயான அமைதி பற்றி நிறையவே கேள்விப்பட்டிருக்கிறாள். ஆனால், இன்று அதை அனுபவிக்கும்போது ஒருவிதமான கலக்கமாகத்தான் இருந்தது.

திடீரென்று ஒரு இடத்தில் சலசலப்பு கேட்டது. திரும்பிப் பார்த்தாள். அப்படியே உறைந்து போய் நின்றுவிட்டாள். எரிந்து கலயச்சாம்பலாகி விட்ட சின்னராசு, அந்தப் பக்கமாக ஒரு கற்சிலைக்கு கால் முளைத்ததுபோல நடந்து போய்க் கொண்டிருந்தான். நெஞ்சையடைத்தது சிவகாமிக்கு... குண்டஞ்சியும் எங்கே என்று தெரியவில்லை. சின்னராசுவின் நடையும் போக்கும் சிவகாமிக்குள் வெலவெலப்பை உருவாக்கிட அவள் உடம்பு நடுங்க ஆரம்பித்துவிட்டது. அப்படியே அங்கிருந்து திரும்பி ஓட ஆரம்பித்தாள். ஆனால், நினைத்த மாதிரி ஓட முடியவில்லை. முட்காட்டின் ஒரு பகுதியில் எப்பொழுதோ புதைக்கப்பட்ட ஒரு சமாதியின் மேல் குண்டஞ்சியின் பிணம்! சமாதியின் மேல் விழுந்து கிடந்தவன் அதைக் கட்டிக் கொண்டிருப்பது போல இருந்தது.

வாயிலிருந்து ரத்தம் பீறிட்டு, அப்படியே அது உறைந்து கிடக்க, அதன்மேல் கொத்தாக ஈக்கள்.

ஹக்!

சிவகாமி அப்படியே நெஞ்சடைக்க நின்றுவிட்டாள்.

கண்ணிரண்டும் இருட்டிக்கொண்டு வரும்போல இருந்தது.

ஊடே எதிரில் அவளுக்கான பாதையில் சின்னராசுவே வந்து கொண்டிருந்தாள். கல் பொம்மைகள் நடப்பது போல ஒரு மாதிரியான நடை சிவகாமிக்குள் உயிர்க் குலையே ஆட ஆரம்பித்தது. உடம்பின் அத்தனை ஊற்றுக் கண்களி



லும் ஒரு டிராஃபிக் ஜாமை உணர்ந்தவளுக்கு சின்னராசு நெருங்க நெருங்க அலற வேண்டும் போலத்தான் தோன்றியது. அவன் அவளை முற்றாக நெருங்கிய நொடி 'வீல்' என்று ஒரு அலறல், அந்த கண்மாய்க்கரை பகுதி மொத்தத்தையுமே ஒரு உலுக்கு உலுக்கியது. அவள் வாயிலிருந்தும் ரத்தம் பீறிட்டது.

வெகு தொலைவில் எவனோ ஒருவன் கருவேல விறகினை சைக்கிள் பின்பக்கத்தில் கட்டிக் கொண்டு மிதித்துக் கொண்டிருந்தான். அவனது ஓட்டை சைக்கிளுக்குள் எலிகள் புகுந்து விட்டது போல அப்படி ஒரு 'கீச்வீச்' சப்தம்! அவனுக்கே சிவகாமியின் வீல் சப்தம் புதியது... நின்று கண்மாய்க்கரை பக்கம் திரும்பினான். சமயங்களில் சில தண்ணிப் பார்ட்டிகள் எங்கிருந்தாவது விலைமாதுகளைத் தள்ளிக் கொண்டு கண்மாய்க்கரைக்கும் மயானக்கரைக்கும் வந்து ரவுசு பண்ணுவதுண்டு. அது பற்றிக் கேள்விப்பட்டிருந்ததால் அப்படி ஏதாவது பிரச்சனை இருக்கக் கூடும் என்று எண்ணியவன் சைக்கிளை விட்டு இறங்கி ஸ்டாண்டு போட்டு நிறுத்திவிட்டு, கருவேல முட்காட்டுக்குள் ஒத்தையடிப்பாதை வழியாக நடந்தான். உள்ளே நுழையும்போதே, 'எவண்டாவன் ரவுசு பண்றது?' என்கிற கேள்விதான் அவனிடம்... வேட்டியை ஏத்திக்கட்டிக் கொண்டு சிறிது தூரம் நடந்தவன், ஒரு இடத்தில் குண்டஞ்சியையும், இன்னொரு இடத்தில் சிவகாமியையும் பிணமாகப் பார்த்துவிட்டு அப்படியே அலறி அடித்துக் கொண்டு ஓடிவர ஆரம்பித்தான். அப்படி ஓடிவந்தவன் தன் சைக்கிளை எட்டிப் பிடித்து அதில் முள் விறகுக் கட்டு காலை கிழிக்க தூக்கிப் போட்டு மிதிமிதி என்று மிதித்தவன். 'அண்ணே... அண்ணே..." என்று அலறிக்கொண்டு கதிரவனின் பண்ணைக்காட்டு சாலைக்குள் புகுந்தான். இறுதியாகச் செய்தி கதிரவனை எட்டியபோது கதிரவனிடம் ஸ்தம்பிப்பு.

# 9

மலரினத்தில் நந்தியாவட்டை ஒரு மருத்துவ குணமுடைய மலர், எல்லா மலர்களிடமுமே ஒரு மருத்துவ குணம் இருந்தாலும், நந்தியாவட்டை பெயரிலேயே தனது செயலை இன்னதென்று கொண்டிருப்பதாகும். வெட்டை என்றால் சூட்டு நோயைக் குறிக்கும். நந்துதல் என்றால் தவிர்த்தல் என்று ஒரு பொருள். சூட்டைத் தணிக்கும் ஒரு மலர் என்பர். இதை கண்ணுக்கு மேல் வைத்து ஈரத் துணியால் கட்டிக் கொள்ள கண்ணின் சூட்டு ரோகம், பீளை வடிதல் போன்றவை விலகும். மிகமிக வெண்மையான இதன் இதழ்கள் உறுதியானவை. இதன் காம்புகள் பாலை வடிப்பதால் மலர்த்தாவரமாக இது இருந்தாலும் பூஜையை விட இதை மருத்துவத்துக்கே அதிகம் பயன்படுத்தினர். இது வளர்ந்து கிடக்கும் இடத்தில் செல்வச் செழிப்பு ஏற்படும் என்பது ஐதீகம்!

கதிரவன் நொறுங்கிப் போயிருந்தான். அவனைச் சுற்றி முக்கியப்பட்ட அவ்வளவு பேரும் திரண்டிருந்தனர். கழுகாசலத் தேவரும் வந்திருந்தார்.

'மயானம் பக்கம் ஒரு பொண்ணைத் தனியா அனுப்ப லாமா? அது எவ்வளவு தப்பு தெரியுமா?" என்றுதான் எல்லோரும் திருப்பித் திருப்பி கேட்டனர். குண்டஞ்சியும், சிவகாமியும் இறந்துகிடந்த விதத்தை வைத்தே பேயடித்து விட்டது என்று முடிவு செய்துவிட்டனர்.

"நம்ம ஊர்ல கொஞ்ச நாளா இல்லாமல் இருந்துச்சு... திரும்ப ஆரம்பிச்சிடிச்சு." என்று ஒரு பெருசு சொல்லவும், அதற்கு எல்லோரிடமும் மௌனமான அங்கீகாரம். கதிரவனுக்குத்தான் சுறுக் கென்றிருந்தது. அவன் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டைத்தான் பிரதானமாகக் கருதினான். தனியே ஒதுங்கிப் போய் நின்று கொண்டு குமைந்து கொண்டே இருந்தான். கந்தசாமிப் பிள்ளை தேடிச் சென்று ஆறுதல் கூறினார்.



"தம்பி... என்னா இது இப்படி இந்த நேரத்துல தனியா போய் நிக்கலாமா? உங்களுக்கும் எதாவது ஆயிடப்போகுது." என்றவரை முறைத்துப் பார்த்தான்.

"அப்படிப் பார்க்காதீக... பாருங்க ஊரே வந்திருக்கறதை..."

"அதுசரி. நல்லதுக்கு வந்தா சந்தோஷமா பேசலாம். இது சாவுக்கு வந்த கூட்டம்ல..."

"வாழ்க்கையைக் கூட விட்டுடலாம் தம்பி... சாவை விட முடியாது. அதிலையும் இது எப்படிப்பட்ட சாவு... அநியாய சாவுல்ல..."

"எனக்கு எதுவும் புரியலை பிள்ளை. பேயி, பிசாசுன்னு கண்டபடி எல்லாரும் உளறுவீங்க. நான் இதை எல்லாம் நம்பலை."

"நம்ப முடியலைன்னு சொல்லுங்க தம்பி. இந்த மாதிரி விசயமெல்லாம் வாலிப வயசுக்கு நம்பமுடியாததாதான் தெரியும். ஆனா அனுபவப்பட்டுட்டா எல்லாம் தெளிவாகிடும்."

"என்ன அனுபவப்படணும் பிள்ளை... இங்க வேற என்னவோ நடக்குது. அவ்வளவுதான் சொல்வேன்..." என்றவன் சிவகாமிக்காக கண்களில் கண்ணீரைப் பெருக்கினான். அவள் முதலில் நல்ல தோழியாகத்தான் அறிமுகம் ஆனாள். மிகமிக துணிச்சலானவள். நட்பு காதலாக மாறவும் அதை ரகசியமாகப் பூட்டி வைக்கத் தேவையில்லை என்று கதிரவனுக்கு தைரியமாக எடுத்துச் சொன்னவள். அதே போல காதலிப்பவர்கள் ரகசியமாகத்தான் பழக வேண்டும் என்கிற நடைமுறையையும் உடைத்தவள்... படித்த படிப்பு வீண்போகாமல் கதிரவனின் பண்ணையிலேயே அவனுக்காக பாடுபட்டவள். பாரதி கண்ட ஒரு புதுமைப் பெண்ணாகத் தான் அவளை எண்ணியிருந்தான். அவளை காலம் இப்படியா பாதிவழியில் கொண்டு போகும்? அதுவும் அநியாயமாக...

கதிரவன் குமுறினான்!

கதிரவனையே கவனித்தபடி இருந்த கழுகாசலம் கிட்டே வந்து தோளில் கைவைத்து ஆறுதலாய் ஒரு தட்டு தட்டிவிட்டு மௌனமாக திரும்பி நடந்தார். அவர் எப்பொழுது அகலுவார் என்பது போல, காத்துக் கொண்டிருந்த வாத்தியார் பெரியசாமித் தேவர் கதிரவனைச் சமீபித்து,

"கதிரவா... என்னப்பா நீ, என்ன நடக்குதுன்னு உனக்கு இன்னுமா விளங்கலை?" என்றுதான் பேச்சை ஆரம்பித்தார். அவன் பார்வை அவரை ஊடுருவியது.

"எல்லாம் உன் மாமா வேலைதான்... என்னமா அந்த ஆள் காய் நகத்தறான் தெரியுமா?"

"போதும் வாத்தியாரே... ஒருத்தரைப் பிடிக்கலைன்னா என்ன வேணா பேசறதா?"

"அப்ப நீ கூட உன் சிவகாமியைப் பேயடிச்சுன்னு நம்பறே...?"

"அது வேற விசயம்... எதை வெச்சு மாமா மேல இவ்வளவு காட்டமா பேசறீங்க...?"

"அட என்னப்பா நீ... அவரைத்தவிர உனக்கு இந்த ஊர்ல யார் மேல பகை. ஒருத்தரை அவமரியாதையா ஒருவார்த்தை பேசியிருப்பியா? இப்பகூட எவ்வளவு பெருந்தன்மையா ஊர்கட்டுப்பாட்டை எடுத்து விட்டு ஊர்ல நல்லபேர் வாங்கியிருக்கே தெரியுமா?"

"அப்ப மாமாதான் சிவகாமியைக் கொன்னாரா...?"

"நான் அப்படித்தான் நினைக்கறேன். உன்னை மாதிரிதான் நானும் ஒரு காலத்துல இந்த பேய் பிசாசை எல்லாம் நம்பத் தயாராயில்லை."

"சரி... எதுவா இருந்தாலும் பிறகு பேசலாம். கொஞ்சம் என்னைத் தனியாவிடுங்க."



"நான் இப்ப போறேன். ஆனா நீ மட்டும் மெத்தனமா இருந்தே, உன்னையே உன் மாமா போட்டுத் தள்ளிடுவாரு."

"சரி... ஒரு பேச்சுக்குக் கேக்கறேன். என் மேலதானே பகை. எதுக்கு புலையன் மேலையும் சிவகாமிமேலையும் அவர் கை வைக்கணும்?"

"நிச்சயம் அதுக்கு ஒரு சரியான காரணம் இருக்குங்க... சிவகாமிதானே அவர்மகளுக்கு போட்டியா வந்தவ...?"

"சரி... சிவகாமிக்கு கூட ஒரு காரணம் சொல்லிட்டீங்க, புலையன் குண்டஞ்சி என்ன செஞ்சான்?"

"சிவகாமியை இவரோ இல்ல இவரது ஆளுங்களோ கொல்றத பார்த்துருப்பான். அதான் அவனைப் போட்டு தள்ளிட்டாரு."

வாத்தியார் விடுவதாக இல்லை. அழகாக காரணத்தை அடுக்கினார். அவனால் மறுக்கவும் முடியவில்லை. குண்டஞ்சி தனது பிறப்பு பற்றி சொன்ன ரகசியமும் ஞாபகத்துக்கு வந்தது. அவனை கழுகாசலத் தேவர் பேசவிடாமல் செய்தது முதல், அந்த ரகசியம் தெரிந்த நபராக அவர் இருந்தது வரை எண்ணிப் பார்த்தவனுக்கு, வாத்தியார் சொல்வது போலக்கூட இருக்குமோ என்று தோன்றியது.

தான் வேனில் வரும்போது தனக்கு ஏற்பட்ட அமானுஷ்ய அனுபவத்தையும், ரோஜா தோட்டத்தில் சிவகாமிக்கு ஏற்பட்டதையும் கூட அசை போட்டுப் பார்த்தான். அதிக நேரம் அவன் குழம்பிவிடாதபடிக்கு எதிரே போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டுடன் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் சண்முகம் என்பவர் வந்து கொண்டிருந்தார். அவர் வரவும் எல்லோரும் சற்று ஓரமாக சென்று நின்றனர். இருவரும் மனம் விட்டுப் பேச ஒரு சரியான சூழ்நிலை.

"அதிர்ச்சியில மூளைல ரத்தநாளம் வெடிச்சிருக்கு... இதுக்கு மேல இரண்டு பேர் உடம்புலையும் எந்த

பிராப்ளமும் இல்லை" என்று நறுக்கென்று பதில் சொன்ன சண்முகத்திடம் அடுத்து என்ன கேட்பது என்றே கதிரவனால் தீர்மானிக்க முடியவில்லை. மலங்க மலங்கப் பார்த்தான்.

"மிஸ்டர் கதிரவன்... செத்துப்போன இரண்டு பேரும் எதையோ பார்க்கக் கூடாததைப் பார்த்து பயந்திருக்காங்க. அப்படி பயந்திருந்தாதான் இப்படி எல்லாம் ஆகும்."

"பாக்கக் கூடாததைன்னா... நீங்க கூட இந்த பேய் பிசாசுங் களை நம்பறீங்களா?"

"நாம நம்பறோம் நம்பலை... விசயம் அது இல்ல. விபரீதமா ஏதோ ஒண்ணு நடந்துருக்கு."

"குழப்பறீங்களே..."

"என்ன பண்ணட்டும்... விஷயமும் குழப்பமாதானே இருக்கு?"

"நான் இது யாரோ மனுஷங்க செய்யற கதின்னுதான் நினைக்கறேன்."

"இருக்கலாம். ஆனா எப்படி நிரூபிப்பீங்க...?"

"அங்கதான் எனக்கும் குழப்பம். யாரைச் சந்தேகப் பட்றதுன்னே தெரியல."

"போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் ரொம்ப க்ளியரா இருக்கு. அவங்க நிஜமா பேய் பிசாசைப் பார்த்துருக்கனு ம்கறதே இல்லை. ஒரு Illusion அதாவது பேய்மாதிரி ஏதாவது ஒரு நிழலைப் பார்த்து கூட பயந்திருக்க வாய்ப்பு உண்டு."

"ஆக மொத்தம் பயமுறுத்தப் பட்டிருக்காங்க... அதுல மாற்றம் இல்லையே..."

"நிச்சயமா..."

"இன்ஃபாக்ட். நான்கூட பயமுறுத்தப்பட்டதா தான் நினைக்கறேன்."



"எந்த வகைல."

"வேன்ல திரும்பி வரும் போது மெயின்ரோடுல ஒரு உருவத்தைப் பார்த்து பிரேக் போட்டேன். எட்டிப் பார்த்தா ஆளைக் காணோம்!"

"அப்ப உங்களை பயமுறுத்தி சாகடிக்க, இங்க யாரோ விரும்பறாங்கன்னு தெரியவருது."

"இதுக்கு முந்திவரைநான் அப்படி நினைக்கல. ஆனா, இப்ப உங்க ரிப்போர்ட்டையும் என் அனுபவத்தையும் வெச்சு கூட்டிக் கழிச்சா, அப்படித்தான் நினைக்கத் தோணுது."

"நீங்க இவ்வளவு தெளிவா சொல்றதைப் பார்த்தா, அப்படிகூட இருக்கலாம்னுதான் தோணுது. எது நடந்தாலும் தைரியமா இருங்க. அப்ப அவங்க சாயம் வெளுத்து எதிரி யார்னு நிச்சயம் தெரிய வராலம்."

"எனக்கு இப்ப அந்த சந்தேகம் தான் பெரிய பிரச்சினையே."

"இதுல என்ன பிரச்னை?"

"நான் யாரையும் எதிரியா நினைக்கல. ஒரே எதிரியா என்மாமா தான் இருந்தார். அவரும் மனசு மாறிட்டார்."

'ஏன் அவர் மனசு மாறிட்டார்னு நினைக்கறீங்க? அப்படி அவர் நடிக்கலாம் இல்லையா?"

"இதைத்தான் எங்க தமிழ் வாத்தியாரும் சொன்னாரு..."

"எதுக்கும் கவனமா இருங்க... நாங்களும் அவர்மேல ஒரு பார்வை வைக்கறோம்."

சப்- இன்ஸ்பெக்டர் கூட்டாமல் குழப்பாமல் நறுக்கென்று பேசிவிட்டு கிளம்பினார். ஆனால், கதிரவனின் உள்ளு ணர்வோ கழுகாசலம் முற்றுமாக மாறிவிட்டதாகத்தான் கூறியது. ஒருவர் எப்படிப்பட்டவர் என்பதை அவரது கண்கள் கூறிவிடும். கழுகாசலத்தின் கண்களில் இப்பொழுது

நிஜமாலுமே ஒரு கனிவு... ஒரு பரிவு... ஒரு மாற்றம். இப்பொழுதுகூட அதிகம் பேசாமல் துக்கம் விசாரித்து விட்டுப் போன அவரது செயலை எப்படி சந்தேகிப்பது என்றே அவனுக்குத் தெரியவில்லை.

குழம்பிப்போனான்.

இந்த பிரசிடென்ட் பதவியும், ஒரு பெண்ணின் மேலான காதலும் ஒரு மனிதனை இப்படி எல்லாம் கூட கொடூரமாக மாற்றுமா என்று கேட்டுக் கேட்டு நைந்தான். பார்த்துக் கொண்டே இருந்த வாத்தியார் திரும்பவும் அருகே வந்தார்.

"கதிரவா... சப் இன்ஸ்பெக்டர் என்னா சொல்றாரு..."

"அதிர்ச்சியில இறந்துட்டாங்களாம்..."

"அதிர்ச்சின்னு மொட்டையா சொன்னா.. பேய் பிசாசுன்னு எதையாவது பார்த்திருக்கலாம்னு சொல்ல வர்றாரா?"

"பேய் பிசாசே இல்லை. அந்த மாதிரி எதையாவது நினைச்சிகிட்டாங்களோ யார்கண்டா... மொத்தத்துல விபரீதமான்னு சொல்லிட்டுப் போறார்..."

"அப்ப நீயும் கவனமா இரு... ஒரு வேளை பேய் பிசாசுதான்னா அது உன் கண்ணுக்கும் தெரியவரும்...?"

வாத்தியார் இறுதியாக வந்து நின்ற அந்த இடம், கதிரவனை சற்று நிமிர்த்தியது.

ஒரு மாயக்கண்ணாமூச்சு விளையாட்டு தெரிந்தோ தெரியாமலோ தொடங்கி விட்டது. அது எப்படியும் முடிவுக்கு வந்த தீரவேண்டும்?

அவனிடமும் ஒரு தீர்க்கமான முடிவு!

# 10

அல்லி மலர்கள் மலர்க்கூட்டத்தில் வித்தியாசமானவை, தாமரைபோல இதை யாரும் பூஜைக்குப் பயன்படுத்துவதில்லை. இதுவும் ஒரு நீர்த்தாவரமே! பெண்களில் ஆண்களோடு இணக்கமில்லாத தனித்த ஒரு பெண்ண அல்லி என்பார்கள். இந்த மலரும் அப்படித்தான். இந்த மலரையும் எதோடும் சேர்த்து யாரும் பயன்படுத்துவதில்லை. அந்த நாளில் பெண்கள் விளையாடும்போது இதைப் பயன்படுத்துவார்கள். அதோடு தாமரை இருக்கும் தடாகம் இறைவனுக்குரியதாகவும், அல்லி இருக்கும் தடாகம் மனிதர்கள் பயன்பாட்டுக்குரியதாகவும் அடையாளம் கொள்ளப்பட்டது. சித்த மருத்துவத்தில் இதன் இதழ் சாறு பலவிதத்தில் பயன்பட்டதாகத் தெரிகிறது.

"இருட்டிவிட்டது!"

தேவரின் ரோஜாத் தோட்டத்தில் இருந்து வேனும் புறப்பட்டுச் சென்றுவிட, அங்கே ஒரு நிசப்தமான சூழல், தோட்டத்திற்கு வந்திருந்த கழுகாசலத்தேவர் அங்கேயே குடிசை முன் கட்டிலைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து விட்டார்.

சிலுசிலு வென்று காற்று... மனதிலும் உற்சாகம் இல்லை. ஊரில் நடக்கும் விஷயங்கள், நடந்து முடிந்த சம்பவங்கள் என்று எல்லாமே அவரை ஊமையாக்கிவிட்டன.

தோட்டத்துக்குப் போனவர் திரும்பி வராததைக் கண்டு மருதாயி பதைத்துப் போனாள். வீட்டிலிருந்து நேராக அவரை அழைத்துச்செல்ல அவளும் தோட்டத்திற்கே வந்து விட்டாள். "என்னங்க... எங்க இருக்கீக?" என்று அவள் வந்த தோரணையே அவள் பயந்து நடுங்குவதை உணர்த்துகிற மாதிரிதான் இருந்தது.

"அட என்ன புள்ள... நான் இங்கதான் இருக்கேன். எதுக்கு இப்படி கூத்தாடிகிட்டே வர்றே?" என்று எழுந்து அமர்ந்தார்.

"இங்கதான் இருக்கீங்களா... ஆமா இது என்னங்க இன்னிக்கு இங்கையே தங்கிட்டீங்க...?"

"ஏண்டி... இது என் தோட்டம்தானே? காத்தும் நல்லா வருது. மனசும் சரியில்லை. இங்க இருந்தா கொஞ்சம் நிம்மதியாக இருக்கும்னுதான்."

"நிம்மதியா...? இங்கையா...?"

"எதுக்கு இப்படி கேள்வியா அடுக்கறே...?"

"அதுசரி... பேயும் பிசாசும் நடமாடிக்கிட்டு இருக்கறதா ஊர் பூரா பேசிக்கிட்டிருக்குது. ஒரு சாவுக்கு நாலு சாவு விழுந்துடிச்சு. இந்த நிலைல நீங்க இப்படி வெளிய படுக்கறது நல்லாவா இருக்குது...?"

"அடிபோடி... இவ ஒருத்தி! மனுஷன் மனசுக்குள்ள இருக்கற பேராசை, பொறாமை, கர்வம் இதெல்லாம் தாண்டி பேயும் பிசாசும், சொல்லப் போனா அந்தப் பேயும், பிசாசும் இவ்வளவு நாளா என்னைப் பிடிச்சிருந்துச்சு. கதிரவன் அதை என்னைவிட்டு தன் செய்கையால துரத்தில்ல அடிச்சுப் புட்டான். நான் இப்ப ஒருவகைல ரொம்ப தெளிவா இருக் குறேன். இப்ப போய் பேய் பிசாசுன்னுகிட்டு..."

"கழுகாசலத் தேவர் சொன்னது மருதாயிக்கும் இனித்தது. ஆனால், அவளை பயம் விடவில்லை.

"நீங்க என்ன சொன்னாலும் சரி.. நீங்க இங்க தனியா படுக்கக் கூடாதுங்க.."

"அட என்ன புள்ளநீ. நான் ஆம்பளை... என்னை யார் என்ன பண்ணிட முடியும்?"

"சுடுகாட்ல பொணத்தோட பொணமா கிடந்த குண்டஞ்சி யும் ஆம்பளைதான். அவன் பாக்கக்கூடாததைப் பாத்து செத்துட்ட பொறவு, எதை வெச்சுங்க நான் தைரியமா இருக்க?"



"அது வேற விவகாரம் புள்ள. குண்டஞ்சி புலசாதிக்காரன் இல்ல! அவன் இந்த ஊர் பெரிய மனுஷன் ஒருத்தனோட மவன், எனக்கே கொஞ்ச நாளாத்தான் தெரியும். நான் அதை இப்பதான் ருசுப்படுத்திக்கிட்டேன். அவனுக்கு ஒரு நியாயம் செய்யணும்னு நினைச்சேன். அது ஒரு நெருப்பு மாதிரியான விசயம். பக்குவமா எடுத்துப் பேசி சரி செய்யணும். ஆனா அதுக்குள்ள அவன் கதிரவன் கிட்டையும் அத பத்திப் பேசிட்டான். கூட்டி கழிச்சு பார்த்தா இந்த சாவுங்க இந்த விவாகரத்தாலதான் நடந்திருக்கணும்."

"ஐயோடா... இப்படி ஒரு கருமாந்திரம் பிடிச்ச விசய மெல்லாம் இதுக்குள்ள இருக்குதா? அப்படி யாருங்க அது இந்த கூத்தடிச்சது?"

"இல்ல மருதாயி... நீ போ! உன்கிட்ட சொன்னா நீ மனசுல வெச்சுக்கமாட்டே. நான் கதிரவன் மூலமாகவே இதைச் சரி செய்யறேன். முன்பைவிட இப்பதான் நாம கவனமா இருக்கணும். கொஞ்சம் அசந்தா இது சாதிக் கலவரத்துல போய்முடிஞ்சிடும்.

கழுகாசலத் தேவர் மிகவும் பொறுப்போடு பேசி மருதாயி யையும் அரைமனதாக அனுப்பி வைத்துவிட்டு அப்படியே மல்லார்ந்தார். அப்படி மல்லாந்து படுத்தபோது "பேயும் பிசாசும் மனுஷனோட குரூர புத்தி, குரங்கு புத்தி முன்னால என்ன செய்ய முடியும்..." என்றும் ஒரு புலம்பு புலம் பினார்.

மல்லாந்து படுத்துக் கிடந்தவருக்கு நேராக கறுத்த வானம் வானிலும் ஏராளமான நட்சத்திர மினுக்கல்கள் நெடு நேரம் வரை அப்படியே படுத்துக்கிடந்தவர் பக்கத்தில் யாரோ நடப்பது போல சப்தம் கேட்டு மெல்ல புரண்டு படுத்து 'யாரு...?' என்று பார்த்தார். ஒரு ஐம்பதடி தொலைவில் ஒரு உருவம்...

"யாருவே அது?" இவர் கேட்டும் அதனிடம் அசை வில்லை.

"அட எவண்டாவன்...? அங்க இருட்டுல என்ன பண்றே...? வா என் முன்னாலே..." அவரிடம் அதட்டல் கூடிப் போனது.

ஊஹூம். அந்த உருவம் அசையவே இல்லை. தேவருக்கு எரிச்சல் பீறிட்டது. கட்டிலை விட்டு எழுந்தவர், அருகில் வைத்திருந்த கைத்தடியுடன் அப்படியே அந்த உருவை நோக்கித்தான் நடந்தார்.

"எலே... எவண்டா ராத்திரில என்கிட்ட வந்து பூச்சி காட்டறது?" என்று கேட்டபடி சென்றவருக்கு அப்படியே தூக்கி வாரிப் போட்டது.

அந்த ஆடாத அசையாத உருவம் சின்னராசு... அப்ப டியே பக்கத்தில் ரோஜாச் செடிகளுக்கு நடுவில் வெள்ளைப் புடவையில் பெண் ஒருத்தியும் எழுந்து நின்றாள். தேவருக்குப் புரிந்துவிட்டது.

"என் தோட்டத்துக்குள்ளே பூந்து எனக்கே தமாஷ் காட்டறீங்களா? எலேய் பெரியசாமி! இது உன்னோட திருகு வேலைன்னு எனக்கு நல்லா தெரியும்டா..." என்ற நொடி சின்னராசு வேஷத்தில் இருந்த அந்த உருவத்திடம் ஒரு திகைப்பு.

"நீ ஊர்ல இருக்கறவனுக்கு காதுல பூ வைக்கலாம். உன் சங்கதி பூரா தெரிஞ்சவன் நான். படுக்கக் கூடாதவகிட்ட படுத்து, புள்ளைய, பெத்துட்டு அதை சுடுகாட்ல கொண்டு போய் போட்ட கேடு கெட்ட பய நீ... நீ படுத்து எழுந்திரிச்ச வளும் இந்த ஊர்ல ஒருத்தனுக்கு இன்னிக்கு பொண்டாட்டி. விசயம் வெளிய தெரிஞ்சா ஊருக்கே கெட்ட பேருன்னுதான் நான் அடக்கி வாசிச்சேன். ஆனா நீ அப்படியே அழிச்சுப் புடலாம்னு நினைக்கறே..."



"கழுகாசலத்தின் விளக்கத்தைத் தொடர்ந்து தோட்டத்தில் தெரிந்த பெண் உருவம் மெல்ல முன்வர, சின்னராசு மேக்கப்பில் இருந்த பெரியசாமியும் கஷ்டப்பட்டு போட்ட வேஷத்தை டோப்பா சகிதம் கலைந்தவராக வெறிக்க, அங்கே அவர்களை சமீபித்த பெண் உருவம் அப்படியே எகிறி கழுகாசலத் தேவரைப் பிடித்து அவர் வாயைப் பொத்தி மூடியது. அப்படி அது செய்யும் போதுதான் தெரிந்தது அது பெண் அல்ல. பெண் வேஷம் போட்டிருக் கும் ஆண்- பெரியசாமியின் கைத்தடி என்று...

தேவரும் என்னென்னவோ செய்து பார்த்தார். ஆனால் முரட்டுக்கரங்கள் அவர் மூச்சு நிற்கும் வரை பிடியை விட வில்லை. சரியாக நான்கு நிமிடங்கள். கால்கள் தரையில் கீறலிட கைகள் உதற கழுகாசலத் தேவர் தன் இறுதி மூச்சை விட்டவராகக் கீழே விழுந்தார்.

வாத்தியார் பெரியசாமி திரும்பவும் டோப்பாவைப் பொருத்திக் கொண்டு மாறத் தொடங்கினார்.

"மாமனையும் மருமவனையும் மோதவிட்டு அழிக்க லாம்னு பார்த்தேன். கடைசில என் கையாலேயே கதையை முடிக்கும்படி ஆயிடிச்சு. அதனால பாதகமில்லை... இப்ப இங்க தேவர் சாகவும் செத்துப்போன சின்னராசு திரும்ப வந்ததுதான் காரணம்னு நிரூபிக்கணும். அதையும் அந்த கதிரவன் முன்னே போய் நின்னு அவன் கணக்கைத் தீர்த்து விட்டு பண்ணைக்காரனுங்க யார் கண்ணுலையாவது பட்டுட்டா, பழி செத்துட்ட சின்னராசுமேல போயிடும். எனக்கும் ரகசியம் தெரிஞ்ச அம்புட்டு பேரும் போய் சேர்ந்த திருப்தி..."

என்றபடியே அங்கிருந்து கிளம்பினார்.

கெடிகாரத்தைப் பார்த்த கதிரவன் அமைதியான அந்த இரவு நேரத்தில் கழுசாலத்தேவரையே பார்த்து தன் குழப்ப மான கேள்விகளுக்கெல்லாம் முகத்துக்கு நேராக விடையைக்

கேட்டு விடுவது என்று புறப்பட காலெடுத்த போது எதிரில் கமுகாசலத் தேவரே வந்து நின்றார்.

"மாமா... நீங்களா...?"

"நானேதான்... என்ன பாக்கத்தானே கிளம்பிக்கிட் டிருக்கே?"

"ஆமாம் மாமா... நீங்க ரோஜாத் தோட்டத்துல இருக் கறதா சொன்னாங்க. அதான் கிளம்பினேன்."

"அவசியமில்ல கதிரவா... நீ என்ன கேக்கப் போறேன்னு தெரியும். பிரச்னை எதுவும் என்கிட்ட இல்லை. எல்லாத் துக்கும் ஒரு பெரிய மனுஷன்தான் காரணம். அவன்தான் என் மச்சினன் மாதிரி வேஷம் போட்டுக்கிட்டு வந்து ஆவி பேய்ன்னு வந்து பயமுறுத்தறான். இப்பகூட அவன் இங்க வந்துக்கிட்டிருக்கான். அவனை என் மச்சினன் சின்ன ராசான்னு நினச்சிடாமே எகிறிப் பிடி... கூடவே ஒரு அடியாள் ஒருத்தன். உன் ஆளுங்களத் தயார் பண்ணி வெச்சுக்கோ. அவன், உன்னைத் தாக்கும்போது அவனைப் பிடிச்சு வேஷத்தைக் கலைச்சுப் பார்- அப்ப தெரியும் நான் சொல்றது உண்மையா பொய்யான்னு... ஆமா எங்க உன் ஆளுங்க?"

கமுகாசலம் கேட்க, சுற்றிலும் சிலர் வந்து சூழ்ந்து நின்றனர்.

"கவனமா இருங்க. கொஞ்ச நேரத்துல இங்க ஒரு கூத்து நடக்கப் போகுது..." என்ற தேவர், "கதிரவா... நான் தா அங்க இருக்கேன். எல்லாம் முடியட்டும் வர்றேன்" என்றவராக எதிரில் இருளுக்குள் விறுவிறுவென்று புகுந்து மறைந்து போனார்.

அவர் சொன்ன மாதிரியே சில நிமிடங்களில் புகை மூட்டத்துக்கு நடுவில் ஆவி நடமாடுவதுபோல, சின்ன ராசுவும் அந்த பெண்வடிவில் அடியாளும் அங்கே நடமாடத்



தொடங்க, துளியும் பயமின்றி கதிரவன் சின்னராசுவைப் பாய்ந்து பிடித்தான். அதுதான் சமயம் என்று மற்றவர்களும் சூழ்ந்துகொள்ள வெலவெலத்துப் போய்விட்டார் சின்னராசு வாகத் தெரிந்த பெரியசாமி. அதே வேளையில் ஒருவன் ஓடி வந்து நின்றவனாக "தம்பி... நம்ப தேவரய்யா பண்ணையில செத்துக்கிடக்காரு தம்பி... குண்டஞ்சி, பார்த்து பயந்துட்ட மாதிரிதான் தெரியுது." என்று கூற- கதிரவன் விக்கித்துப் போய் "என்னய்யா சொல்றே... மாமா இப்ப இங்க வந்து இந்த சதிகாரன்பத்தி எனக்கு எடுத்துச் சொல்லிட்டு, இதோ இந்த பக்கம்தானே போனாரு..." என்றவன் 'மாமா... மாமா...' என்று அந்த இருளுக்குள் குரல் கொடுத்தான்.

பெரியசாமிக்கு மட்டும் சட்டென்று புரிந்து, ஓடத் தொடங்கினார்.

அவர் நின்றது காவல் நிலையத்தில்!

முற்றும்